# வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்

அருள்நிதி
**மன்னார்குடி பானுகுமார்**

**விஜயா பதிப்பகம்**
20, ராஜ வீதி,
கோயம்புத்தூர் - 641 001.
vijayapathippagam2007@gmail.com

© விஜயா பதிப்பகம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்** |
| ஆசிரியர் | : | அருள்நிதி மன்னார்குடி பானுகுமார் |
| முதல் பதிப்பு | : | ஏப்ரல் 2015 |
| வெளியீடு | : | **விஜயா பதிப்பகம்**<br>20, ராஜ வீதி,<br>கோயம்புத்தூர் - 641 001.<br>✆ 0422 - 2382614 / 2385614 |
| ஒளியச்சு / புத்தக வடிவமைப்பு | : | ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை - 15. |
| அட்டை வடிவமைப்பு | : | எம்.வி. மணிகண்டன், சென்னை. |
| அச்சாக்கம் | : | ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5. |
| பக்கங்கள் | : | 184 |
| விலை | : | ரூ.100/- |

**ISBN - 81-8446-681-1**

**VETHATHRIYATHIL KALANTHA NATHIGAL**

| | | |
|---|---|---|
| Author | : | Arulnidhi Mannarkudi Banukumar |
| First Edition | : | April 2015 |
| Published By | : | **VIJAYA PATHIPPAGAM,**<br>20, Raja Street, Coimbatore - 641 001.<br>✆ 0422 - 2382614 / 2385614 |
| Layout & Laser Type set | : | IRIS Graphics, Coimbatore - 15. |
| Cover Design | : | M. V. Manikandan, Chennai. |
| Printed At | : | Jothy Enterprises, Chennai - 5. |
| Pages | : | 184 |
| Price | : | Rs.100/- |




**குருவுடன் வாழ்ந்தவர் புத்தகம் மின்னஞ்சலில் வெளியிடுதல்**

# சமர்ப்பணம்

இறையாற்றலே அருட்தந்தையே
உன் அன்புப் பெருங்கடலில்
நனைந்து உள்ளம் உருகி உட்கார்ந்திருக்கிறேன்
உன்னையே சதா காலம் தியானித்துக்
கொண்டிருக்கிறேன். கடல் என்னை
அரவணைத்துக் கொண்டது
இனி நான் வேறு கடல் வேறோ.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வாழ்த்துரை | | 7 |
| முன்னுரை | | 9 |
| 1. | வேதாத்திரியம் ஒரு சமுத்திரம் | 13 |
| 2. | சங்க இலக்கியமும் வேதாத்திரியமும் | 17 |
| 3. | வேத வியாசரும் வேதாத்திரியமும் | 19 |
| 4. | வள்ளுவரும் வேதாத்திரியமும் | 23 |
| 5. | வள்ளலாரும் வேதாத்திரியமும் | 27 |
| 6. | பார்த்தசாரதிமாலையும் வேதாத்திரியமும் | 29 |
| 7. | திருமந்திரமும் வேதாத்திரியமும் | 31 |
| 8. | ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரியமும் | 34 |
| 9. | திருப்போரூர் பிள்ளைத்தமிழும் வேதாத்திரியமும் | 37 |
| 10. | திருக்குர்ஆனும் வேதாத்திரியமும் | 39 |
| 11. | தாயுமானவரும் வேதாத்திரியமும் | 42 |
| 12. | அகத்தியரும் வேதாத்திரியமும் | 44 |

| | | |
|---|---|---|
| 13. | ச்வேதாச்வதர உபநிஷத்தும் வேதாத்திரியமும் | 47 |
| 14. | பாரதியாரும் வேதாத்திரியமும் | 50 |
| 15. | பட்டினத்தாரும் வேதாத்திரியமும் | 54 |
| 16. | வேதாத்திரியத்தில் தனிப்பாடல் | 57 |
| 17. | சித்தர்களும் வேதாத்திரியமும் | 61 |
| 18. | நாமக்கல் கவிஞரும் வேதாத்திரியமும் | 66 |
| 19. | தொல்காப்பியமும் வேதாத்திரியமும் | 69 |
| 20. | திருவாசகமும் வேதாத்திரியமும் | 72 |
| 21. | வேதாத்திரியத்தின் நான்கு தூண்கள் | 75 |
| 22. | கன்பூசியசும் வேதாத்திரியமும் | 78 |
| 23. | ஆதிசங்கரரும் வேதாத்திரியமும் | 82 |
| 24. | புத்தரும் வேதாத்திரியமும் | 85 |
| 25. | ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரியமும் | 88 |
| 26. | பகவத் கீதையும் வேதாத்திரியமும் | 91 |
| 27. | கண்ணதாசனும் வேதாத்திரியமும் | 94 |
| 28. | வேதசாசனமும் வேதாத்திரிய சாசனமும் | 98 |
| 29. | அறம் வகுத்தோரை நினைவு கூர்ந்த வேதாத்திரியம் | 101 |
| 30. | மார்க்சீயமும் வேதாத்திரியமும் | 103 |
| 31. | ஔவையாரும் வேதாத்திரியமும் | 107 |
| 32. | கந்த புராணமும் வேதாத்திரியமும் | 110 |

33. பதஞ்சலியோக சூத்திரமும் வேதாத்திரியமும் 113
34. கோளறுபதிகமும் வேதாத்திரியமும் 116
35. நாலாயிரத் திவ்ய பிரபந்தமும் வேதாத்திரியமும் 121
36. பஜகோவிந்தமும் வேதாத்திரியமும் 124
37. உபநிஷத்துக்களும் வேதாத்திரியமும் 127
38. பரிபாடலும் வேதாத்திரியமும் 131
39. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியமும் 134
40. மகாபாரதமும் வேதாத்திரியமும் 138
41. மகாத்மா காந்தியும் வேதாத்திரியமும் 143
42. பரமஹம்ச யோகானந்தரும் வேதாத்திரியமும் 146
43. ஓஷோவும் வேதாத்திரியமும் 150
44. மாணிக்கவாசகரும் வேதாத்திரியமும் 155
45. ஆண்டாளும் வேதாத்திரியமும் 158
46. வேதாத்திரியத்தில் காட்டானைக் காணலாம் 160
47. ஜென்னும் வேதாத்திரியமும் 163
48. விவேகானந்தரும் வேதாத்திரியமும் 166
49. ரமணரும் வேதாத்திரியும் 171
50. சாக்ரட்டிஸூம் வேதாத்திரியமும் 175

வாழ்க வையகம்　　வாழ்க வளமுடன்　　வளர்க வேதாத்திரியம்

# வாழ்த்துரை

அன்பானவர்களே!

வணக்கம். வாழ்க வளமுடன்.

மனித குலத்தில், இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றியமைத்துத் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கக்கூடிய அறிவு வளர்ச்சி பெற்ற காலம் முதல் இன்று வரை கோடானு கோடி மனிதர்கள் வாழ்ந்து முடித்திருக்கிறார்கள். அவர்கள் அவ்வக் காலங்களில், யாரேனும் ஓரிருவர் மக்களை வழி நடத்தியுள்ளனர்.

வாழ்வின் நோக்கம் இனிமையாக வாழ்வது ஆகும். இனிமையாக வாழவேண்டுமானால் பிறவியின் நோக்கம் நிறைவுற வேண்டும். பிறவியின் நோக்கம் இறையுணர்வு ஆகும். இறையுணர்வுடன் வாழும்போது அறநெறி வாழ்வு இயல்பாகிவிடும். இறையுணர்வு என்பது, தனி மனிதனின் அமைதியான வாழ்விற்கும் அறநெறி என்பது சமுதாய இனிமைக்குமானது. இரண்டுமே மனித வாழ்க்கைக்கு அவசியமாகிறது. ஒரு நாணயத்திற்கு இருபக்கம் போன்றது இறையுணர்வும் அறநெறியும். அதை வாழ்ந்து காட்டியவர்கள் சிலபேர், வழிகாட்டியவர்கள் சிலபேர். உணர்ந்து மற்றவர்களுக்கு ஓதியவர் சிலர், ஓதி உணர்ந்து மற்றவர்க்கும் உணர்த்துபவர் சிலர்.

அந்த வகையில் வேதாத்திரியத்தின் தத்துவங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கத் தன்னை ஒரு கருவியாக்கி, பல காலங்

களிலும், பல நாடுகளிலும் வாழ்ந்து வழிகாட்டிய மகான்களின் கருத்துக்களை உள்வாங்கி ஒப்பாய்வு செய்து அருள்நிதி. பானுகுமார் அவர்கள் ''வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்'' என்னும் நூலை சமர்ப்பித்துள்ளார்கள்.

''மகான்கள் எனப் போற்றக்கூடியவர்களாக வரலாறுகளில் இடம் பெற்றவர்கள் கூறும் கருத்துக்கள் அனைத்தும் இறையுணர்வு, அறநெறி என்ற இரண்டு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவைதான்'' என அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுவார்கள்.

மகான்களின் வாழ்வியல் முறைகளைப் பின்பற்றுபவர்களும், மற்றவர்களும் பழக்கத்தின் வழியே வாழாமல், பழக்கங்களை யெல்லாம் விளக்க வழியில் வாழ்வதற்காக போதனை கலந்த சாதனைப் பயிற்சிகளாக மனவளக்கலை யோகப் பயிற்சிகள் எந்தக் காலத்திலும், எந்த இடத்திலும் வாழும் மக்களுக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

மனவளக்கலைஞர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவக்கூடிய நிலையில் அமைந்துள்ளது இந்த நூல். படித்துப் பயன்பெற விரும்பு பவர்களையும், இந்நூல் உருவாவதற்குக் காரணமானவர்களையும் ''வாழ்க வளமுடன்'' என வாழ்த்தி மகிழ்கிறோம்.

நன்றி.

அன்புடன்
**அருள்நிதி. இரா. மாரியம்மாள்,** M.A., M.Phil.,
மனவளக்கலை முதுநிலைப் பேராசிரியர்
நிறுவனர், வேதலோக அன்பு நிலையம் ட்ரஸ்ட்
11/193A வேடசந்தூர்,
வால்பாறை மெயின்ரோடு, பொள்ளாச்சி - 7

# முன்னுரை

உலகில் தோன்றிய பல மகான்களின் உயர்ந்த எண்ணங்களின் சாரமே வேதாத்திரியம்.

அந்தச் சாரத்தில் விளைந்த சந்தனப் பேழையே உலக சமுதாய சேவா சங்கம்.

விண்டவர் கண்டிலர் கண்டவர் விண்டிலர் என்பது பழமொழி. ஆனால் அதைப் பொய்யாக்கியவர் அருட்தந்தை.

தான் உணர்ந்ததை உணர்ந்தவாறு விஞ்ஞானப் பூர்வமாகப் பாமர மக்களுக்கும் எளிதாகப் புரியும் வண்ணம் உண்மை நிலையைத் தெளிவாக வேதாத்திரியத்தில் அருட்தந்தை விளக்கியுள்ளார்கள்.

முகமுது நபிக்கு குர்ஆனையும், இயேசுபிரானுக்கு பைபிளையும், ஆதிசங்கரருக்கு அத்வைதத்தையும், வியாசருக்கு கீதையையும் தந்த அதே இறைநிலைதான் நம் ஆசான் அருட்தந்தைக்கு வேதாத்திரியத்தை தந்தருளி உள்ளது.

வேதாத்திரியத்தில் கலந்த நதிகளைத் தேடி அந்த சமுத்திரத்தில் குதித்து விட்டேன். நதிகளின் எண்ணிக்கையைப் பார்த்து, வியந்து, திகைத்து, மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறேன்.

‘‘குற்றமற்ற ராமசரிதம் என் அறிவு ஆராய்ச்சி எல்லைகளுக்கு உட்பட்டதன்று. எனினும் இராமரின் பெருமையைப் பாட வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் பேராசையாகத் தோன்றியுள்ளது.

இந்தப் பேராசை பாற்கடலைக் கண்ட பூனை கடல் முழு வதையும் நாவினால் நக்கி நக்கி குடித்துவிட வேண்டும் என்று எண்ணும் பேராசைக்குச் சமமானது எனக் கூறிய கம்பரின் பாடல் நினைவுக்கு வருகிறது.

**ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு**
**பூசை முற்றவும் நக்குபு புக்கென**
**ஆசை பற்றி அறையல்உற் றேன்மற்றிக்**
**காசில் கொற்றத்துது இராமன் கதையரோ**

பெருமை உடைய அடியார்களின் வாழ்க்கை வரலாற்றுச் சிறப்பினை நான் பாட இருக்கிறேன். இந்த எனது செயல் எப்படிப் பட்டது தெரியுமா?

**தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர் தம்**
**பொருவரும் சீர்புகலுற் றேன்முற்றப்**
**பெருகு தென்கடல் ஊற்றுண் பெருநசை**
**ஒரு கணங்களை ஒக்கும் தகைமையேன்**

நாய் ஒன்று ஊறி ஊறிப் பெருக்கெடுத்துக் கொண்டே இருக்கும் தெள்ளிய கடல் நீரை (உப்பு நீர் அல்ல) முற்றக் குடிக்க ஆசைப்பட்டது போன்ற பேராசையாகும் எனச் சேக்கிழாரும் நினைவுக்கு வரத்தான் செய்கின்றனர்.

**பாற்கடலைக் குடிப்பதற்குப்**
**பானுக்குமாருக்கென்ன பேராசை**

என்ற வரிகளும் என்னையறியாமல் பதிவு செய்கிறது.

வேதாத்திரியக் கருத்துக்களையும், கோட்பாடுகளையும் நமதாக்கிக் கொள்வோம் அவ்வழி வாழ்வோம்.

அறிவே தெய்வம் என சிந்திக்க வைத்தது **வேதாத்திரியம்.**

ஆன்மீகத்தில் உடற்பயிற்சியை உலவவிட்டது **வேதாத்திரியம்.**

இல்லறத்தில் யோகத்தை இணைத்தது **வேதாத்திரியம்.**

ஈதலில் ஈடுபாடு ஏற்பட வைத்தது **வேதாத்திரியம்.**

உண்மைப் பொருளை உணரச்செய்தது **வேதாத்திரியம்.**

ஊருக்கு உழைப்பதே கடமையென கற்பித்தது **வேதாத்திரியம்.**

எங்கும் எதிலும் இறையாற்றலே என
அருளியது **வேதாத்திரியம்.**

ஏற்றமிகு வாழ்க்கைக்கு அகத்தவத்தை தந்தது **வேதாத்திரியம்.**

ஐயத்தை நீக்கி விழிப்புநிலை பற்றி விளக்கியது **வேதாத்திரியம்.**

ஒற்றுமையை உலக அளவில் கொணர
முயல்வது **வேதாத்திரியம்.**

ஓதி உணர்ந்து, உணர்ந்து ஓதுதல் என்பதை
வலியுறுத்துவது **வேதாத்திரியம்.**

ஔஷதத்தில் உன்னதமாய் உடல், உயிர்,
மனம் மேம்படுவது **வேதாத்திரியம்.**

நாம், சமுதாயம், இயற்கையோடு
ஒன்றச் செய்வது **வேதாத்திரியம்.**

வேதாத்திரியத்தின் வேர்களை எண்ணிப் போற்றி, ஒப்பற்ற இந்தப் பாரம்பரியத்தை உலகிற்கு எடுத்துக்காட்டவே இத்தலைப்பில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

அருட்தந்தை அருளிய வேதாத்திரியம் வாழ்க வாழ்கவே!

என்றும் அன்புடன்,

**பானுகுமார்.**

மினியோபோலிஸ்
25.1.2015
banukumar.v@gmail.com

# 1

# வேதாத்திரியம் ஒரு சமுத்திரம்

**வே**தாத்திரியம் ஒரு சமுத்திரம். அதில் ஒப்பீடு, ஆய்வு, விளக்கம், பாராட்டு என்று பல கோணங்களில் இருந்தும் கருத்து நதிகள் வந்து கலக்கின்றன என்ற உருவகத்தில் இத்தொடருக்குத் தலைப்புத் தரப்பெற்றது.

கணியன் பூங்குன்றனார், திருவள்ளுவர். திருமூலர், பட்டினத்தார், தாயுமானவர். இராமலிங்கர், புத்தர், சாக்ரட்டீஸ், ஈயேசுநாதர், நபிகள் நாயகம்............. முதலிய சான்றோர்களின் கருத்துக்களை மொழி, இன, மத வேற்றுமையின்றி வேதாத்திரியம் போற்றுகின்றது.

பாரதி, பாரதிதாசன் வரையிலான தமிழ்க் கவிதைகளின் போக்குகளை வேதாத்திரியக் கவிதைகள் எதிரொலிக்கின்றன.

**யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என்ற**
**எண்ணத்தால் உயர்வடைந்த தமிழன்(546)**

என்னும் இடத்தில் கணியன் பூங்குன்றனாரின் எண்ணக் கொடையை வேதாத்திரியம் நினைவு கூர்கிறது.

பல இடங்களில் திருவள்ளுவரின் பெயர் சுட்டிப் போற்றும் வேதாத்திரியம்,

**துயர்தந்து உளம்மகிழும் அன்பர் கட்கும்**
**துணைசெய்ய இறையருளை இறைஞ்சு கின்றேன்.(590)**

என்னும் இடத்தில் இன்னா செய்தாரை ஒறுக்க வள்ளுவர் வழி நின்று ஒழுகும் நிலையை வெளிப்படுத்துகின்றது..

எல்லோரும் உலகெங்கம் இன்புற்று வாழ்ந்திடுவோம் (686) எனும் போதும், சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற சீரறியச் செய்த குருவே எனும் போதும் (6) தாயுமானவரின் எல்லோரும் இன்புற்றிருக்க என்னும் எண்ணமும், சும்மா இருக்கச் சுகம் சுகம் என்று கருதி எல்லாம் அம்மா நிரந்தரம் சொல்லவும் எனும் பாட்டுப் பகுதிகள் நம் நெஞ்சில் நிறைகின்றன.

உலகநாத பண்டிதரின் ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்னும் பாடலமைப்பை ஒரு பாடலும் (165), மகாகவி பாரதியாரின் பாப்பா பாட்டை, பாடு பாப்பா என்னும் பாடலும் (334) நினைவூட்டுகின்றன. இந்தப் பாடலின் மூலமாக வேதாத்திரியம் குழந்தைகளுக்கான பாடல் புனையும் குழந்தைக் கவிஞராகவும் கோல முகங்காட்டுகிறது.

**எண்ணிறந்த மதங்களுண்டு மனித ருக்கு**
**எனினும்தெய் வம்என்ப தொன்றே ஆகும்**

என்பது வேதாத்திரியத்தின் வாக்கு, இராமகிருஷ்ணரின் வாக்கையும் மகாகவி பாரதியாரின் ஆத்திச்சூடிக் கடவுள் வாழ்த்து பாடலையும் நினைவூட்டுகின்றது.

தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும் பாரதிதாசப் பாட்டுப் போக்கும் அனைத்துலக மக்களும் ஓர் குடும்பமாக எண்ணும் வேதாத்திரியத்தின் பாட்டுப் போக்கும் ஒரே திசையில் நடைபோடக் காண்கிறோம்.

தமிழ்ப் பெருங்கவிஞர்களின், அருளாளர்களின் சிந்தனைகளும், வேதாத்திரியத்தின் சிந்தனைகளும் ஒத்திலங்கும் பாட்டுப் பகுதிகளாக மிகப் பல, மேற்காட்டியன போல மிளிர்கின்றன.

உலகப் பெரியோர்கள் உரைத்தவற்றை ஒப்பிட்டுப் பார்த்த வேதாத்திரியம், அந்த ஒப்புநோக்கின் பயனைப் பின்வருமாறு கூறுதல் மனங்கொள்ளத் தக்கது.

**''புத்தனென்ற பெரியாரும், இயேசு நாதர்,**
**பொதுநோக்கில் கவிபுனைந்த திருவள்ளுவர்,**
**உத்தமராம் நபிகள்எனும் உயர்ந்த ஞானி,**
**உண்மைக்கே உயிரளித்த சாக்ரட்டீஸ்,**
**நித்தியமாம் நிலையறிந்த ஞானியர்கள்**
**நிலஉலக மக்களுக்கு எடுத்துச் சொன்ன**
**அத்துணையும் சேர்ந்துஒரு தொகுப்பாய்ச் செய்தால்,**
**அனைத்தும் இணைந்து ஒரே கருத்தாய் இருக்கக் காண்போம்.''**

(ஞா.க.)

உயர்ந்தோர்தம் சிந்தனைகள் ஒத்திலங்கும் பான்மையை வேதாத்திரியம் பகர்ந்தது போலவே மகரிசியின் சிந்தனைகளும் பெரியோரை அடியொற்றுகின்றன. அவற்றோடு ஒத்திலங்குகின்றன.

சிறுவயது முதலே இறைவனைத் தேடிய வேதாத்திரி யாருக்குத் திருமூலர், திருவள்ளுவர், தாயுமானவர், இராமலிங்கர், ஆழ்வார்கள் ஆகியோர் தம் படைப்புகள் வழிநடத்தியுள்ளன.

**திருப்புகழாய் உன் பெருமை உணர்ந்த முன்னோர்.**
**தெளிவாய் பிறர் உணரப் பாடியுள்ள**
**தெய்வமொழி என் உள்ளத்தில் புகுந்து தூண்ட**
**தெவிட்டாத இன்பத்தில் திளைத்தேன்...**

-இறையுணர்வும் அறநெறியும் ப. 1.

இவர் சிந்திக்காத பொருளே இல்லை. மறைபொருளிலிருந்து மாமியார் மருமகள் உறவு வரை அலசி ஆராய்ந்திருக்கிறார்.

அரசியல், சமுதாயம், பொருளாதாரம், விஞ்ஞானம், மெய்ஞ் ஞானம், உலகசமாதானம் என பல்வேறு கோணங்களில் இவர் எழுதிய கட்டுரைகளும் கவிதைகளும் எண்ணற்றன.

வறுமையின் பிடியில் இவர் இருந்தபொழுதும் கவிதை மழை மட்டும் கணப்பொழுதும் நிற்கவில்லை. நிற்கும் போதும், நடக்கும்போதும். படிக்கும்போதும், உறங்கும்போதும், உண்ணும் போதும் கருத்துக்கள் கவிதைகளாக மாறிக்கொண்டேயிருந்தன.

மனவளக்கலைஞர்களுக்கு அப்பால் வழக்குரைஞர், நீதிபதிகள், பொறியாளர், அறிவியலார், படிப்பாளர், எழுத்தாளர். தொழிலதிபர்கள், அரசியலார் என்னும் பல தரப்பையும் வேதாத்திரியம் தன் பேரொளியில் கலக்கச் செய்தது. இது காலத்தின் பெரு வெற்றியாகும்.

இதுபோல பல நதிகள் வேதாத்திரியத்தில் கலந்துள்ளன.

# 2

# சங்க இலக்கியமும் வேதாத்திரியமும்

**ச**ங்ககால மக்கள் தம் வாழ்வைத் தெளிவாகப் புலப்படுத்தும் காலக் கண்ணாடியாகச் சங்க இலக்கியங்கள் இன்றும் திகழ்கின்றன.

சான்றோர்கள் பலரும் தம் வாழ்நாளில் கண்ட உண்மைகளை மானுடத்திற்கு வழங்கிச் சென்றுள்ளனர். சங்ககாலம் தொட்டு இன்றுவரை இது நடைபெற்று வருகிறது.

**நரிவெரூஉத் தலையார்** என்னும் சங்கப் புலவரொருவர் நமக்கு அழகியதொரு வாழ்க்கைத் தத்துவத்தைத் தந்து சென்றுள்ளார்கள்.

வாழ்வில் நாமும் வாழ்ந்து, பிறரையும் வாழ வைக்க வேண்டும். நல்லதையே செய்ய வேண்டும். முடியவில்லையெனில் தீயதைச் செய்யாமல் இருந்துவிட வேண்டும்.

**நல்லது செய்தல் ஆற்றீராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்**

- இதுதான் நரிவெரூஉத் தலையாரின் வாழ்க்கைத் தத்துவம். இந்த சங்ககால நதி வேதாத்திரியக் கடலில் வந்து சங்கமமாகியது.

இதனை வேதாத்திரியம் **இரண்டொழுக்கப் பண்பாடாக** மானுடத்திற்கு தந்துள்ளது.

அறிவை அறிவால் அறிய மனதைத் திறந்து விரிப்போம்.

விரிந்த மனதில் எழும் எண்ணங்கள், வீரியம் நிறைந்ததாக, விவேகத்தில் தோய்ந்ததாக, தனக்கும் ஊருக்கும் நல்லதாக அமையும்.

வையமெல்லாம் வாழட்டும் என்ற உயர்ந்த எண்ணமும் பருவ மழை உலகமெல்லாம் வரவேண்டும் என்று நினைக்கின்ற அகன்ற அன்பும் மனதில் தோன்றும்.

ஒரு உண்மையை சிந்திப்போம். ஆயிரமாயிரம் ஆண்டு களுக்கு முன்பிருந்த ஒரு சில நபர்களின் இனப்பெருக்கந்தானே இன்றுள்ள அறுநூறு கோடி மக்களும்.

நம் மூதாதையர்களைத் தேடி பின்னால் சென்று கொண்டிருந் தால், ஓரிடத்தில் சந்திக்கத்தான் செய்வோம். நாம் அனைவரும் ஒரு சிலர் பெற்றெடுத்த சகோதர சகோதரிகள் தானே?

மனதைத் திறந்து வேதாத்திரிய சபதம் எடுப்போம்.

நான் யாருடைய உடலுக்கும் உயிருக்கும் துன்பம் தர மாட்டேன்.

☆ நான் துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்..

மனதைத் திறப்போம் விரிப்போம் மகிழ்வோடு வாழ்வோம்.

# 3

# வேத வியாசரும் வேதாத்திரியமும்

“வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க’’ என்றார் மாணிக்கவாசகர்.

வேதம், ஆகமம் இரண்டும் இறைவன் நூல்கள். அவை ரிஷிகள் வாக்கில் தவழ்ந்து வளர்கின்றன. வேதம் பொது நூல். ஆகமம் சிறப்பான சாதன நூல்

வேதமும் ஆகமமும் உள்ளறிவுச் சுரங்கமாம். பாரத சமுதாயப் பண்பாட்டின் உயிர்த்துடிப்புகளே இரண்டும்.

ஒரே மின்சாரம், விளக்கில் ஒளி, விசிறியில் காற்று, அடுப்பில் வெம்மை, குளிர்ப் பெட்டியில் தண்மை, ரேடியோவில் ஒலி, தொலைக்காட்சியில் ஒளி ஒலியாக இயங்குகிறது.

வேத மந்திரங்கள் பரநாதப் பண்ணொலி. உள்ளான்மாவின் யாழிசை. ஓங்காரக்குழலிசை.வேதவாக்குகள் தெய்வக்கனற் பொறிகள். அவை, மனித வாழ்வு தெய்வத்தன்மை பெற வழிகாட்டி நடத்தும் மெய்யறிவுச் சுடர்.

புத்தர் முதல் காந்தி வரையில், ஆதிசங்கரர் முதல் அரவிந்தர் வரையில், பதஞ்சலி முதல் பரமகம்சர் வரையில், வியாசர் முதல் வேதாத்திரி வரையில் அருட் பெரியார் உள்ளமெல்லாம் வேதாந்தத் துடிப்பே.

வேதத்தை வியாச பகவான் நான்கு நூலாக்கினார். அவை ரிக், யஜூர், சாம, அதர்வணம்.

| **வேதம்** | **கிளைகள்** |
|---|---|
| ரிக் வேதம் | 21 |
| யஜூர் வேதம் | 109 |
| சாம வேதம் | 1000 |
| அதர்வண வேதம் | 50 |

## வேதங்களின் சாரம் என்ன?

| | | |
|---|---|---|
| 1. ரிக் வேதம் | - | பிரக்ஞானம் பிரம்மம் (அறிவே தெய்வம்) |
| 2.யஜூர் வேதம் | - | அகம் பிரம்மாஸ்மி (நானே தெய்வம்) |
| 3. சாம வேதம் | - | தத்துவ மஸி (அதுவே நீயாக இருக்கிறாய்) |
| 4. அதர்வண வேதம் | - | அயமாத்மா பரபிரம்மம் (இந்த ஆத்மா பரபிரம்மம்) |

இந்த நான்கு வேதங்களின் சாரம்தான் வேதாத்திரி மகரிசி கூறும் பிரம்மஞானம். (வேதங்கள் கூறும் பிரம்மஞானம்.)

வேதாத்திரியம் வெளிப்படுத்திய வேதாந்தக் கருத்துக்கள் அனைத்தும் விஞ்ஞானத்தோடு தொடர்புடையதாக இருப்பதால் கற்றாரும். கல்லாரும் வாழ்வில் பயன்படுத்த எளிமையாக அமைந்துள்ளன.

வேதாத்திரியத்தின் நாயகர் அருள்தந்த வேதத்தின் உட்பொருளாய் அமைந்தவர்.

☆ விஞ்ஞானம் வேறு மெய்ஞ்ஞானம் வேறு அல்ல. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் எதை நாடிச் செல்கின்றன என்றால் இறைநிலை என்ற ஆதிநிலையை உண்மைநிலையை நோக்கிக் செல்கின்றன. மெய்ப்பொருளை நாடி தேடிக் கொண்டேபோவது மெய்ஞ்ஞானம். விண்ணை அடிப்படையாகக் கொண்டு மேலும் மேலும் தேடிக்கொண்டே போவது விஞ்ஞானம். ஆனால் இவ்விரண்டும் சேரும் இடம் பிரம்மஞானம்.

☆ தன்னையறிந்தால்தான் சரியாக வாழ முடியும். தன்னை அறிவதுதான் பிரம்மஞானம். முதலில் மனமாக இருக்கிறோம். மனதிற்கு அடித்தளத்தில் போகும்போதோ, அறிவாக இருக்கிறோம். அந்த அறிவை யார் என்று பார்க்கிறபோது இறைவனாக இருக்கிறோம். அப்போது அடுத்தவன் யார்?

☆ இறைநிலை என்பது சுத்தவெளிதான். அதற்கான ஆதாரங்களை எல்லாம் உலகுக்கு விளக்கி, முழுமையாக இறை தத்துவத்தை உணர்ந்து கொள்வதற்கு வேதாத்திரியம் பிரம்மஞானம் என்ற பயிற்சியைக் கொடுத்து வருகிறது.

அனைத்துமாகியிருக்கிற ஒரே மெய்ப்பொருளைப் பற்றிய சத்தியங்களின் தொகுப்பே வேதாந்தமும் வேதாத்திரியமும்.

முந்தையது பழமைக்கும் பழமை. பவித்திரமான சமஸ் கிருதத்தில். பிந்தையது புதுமைக்கும் புதுமை.. தூய தமிழில் அருள்தந்தை எழுதிய விஞ்ஞான பாஷ்யம் வேதாத்திரியம்.

உபநிடதம்-பிரம்மசூத்திரம்-பகவத்கீதை என்று மூன்று முக்கிய மறைகளின் தத்துவ சாரத்தோடு...புதிய சிகரங்களைத் தொட்டு நிற்கும் இன்றைய விஞ்ஞான சாரத்தையும் சேர்த்தால் நமக்குக் 'கிடைப்பது வேதாத்திரியம்.

மானுடத்திற்கு தேவையான வழிமுறைகளை வியாசர் தொடங்கி வைத்தார். வேதாத்திரி முடித்து வைத்தார். இனிமேல் மகான்கள் பிறக்க வேண்டியதில்லை. வேதாத்திரியத்தில் எல்லாமே அருளப்பட்டுள்ளது.

# 4

# வள்ளுவரும் வேதாத்திரியமும்

திருவள்ளுவரைப் பற்றி அருள்தந்தை.....

''ஞானநெறி காட்டிய பெரியார்களுள் சிறந்த பேரறிஞர் திருவள்ளுவர். அவர் படைப்பு என்ற கற்பனையிலிருந்து விடுபட்டு பரிணாமம் என்ற உண்மை வழியிலே முழுமை பெற்ற மெய்ஞானி ஆவார்.

தனது தெளிந்த கருத்துக்களை விளக்கி மனிதனது சிந்தனையை உண்மை வழிக்குத் திருப்பி விட்டிருக்கின்றார்.

புலன்கவர்ச்சி மயக்கத்திலிருந்து தெளிந்து, ஆன்ம உணர்வால் விழிப்புநிலை பெற வழிகாட்டியுள்ளார்.''

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் உலகப் பொதுமறை யாகும். வேதாத்திரியின் வேதாத்திரியமும் உலகப் பொதுமறையாகும்.

இரண்டும் மகா சமுத்திரங்கள். அறிவுக் கடல்கள். வாழ்வு நூல்கள். இரண்டும் சட்ட நூலாக, தத்துவநூலாக, கவிதை நூலாகவும் திகழ்கின்றன.

இரு பெரும் தத்துவ ஞானிகளும் உரைத்த கருத்துக்கள் உலகந் தழுவியதாகவே அமைந்துள்ளன.

**திருவள்ளுவருக்குப் பிறகு தத்துவத்தை தமிழில் எளிமையாகச் சொன்ன ஒரே ஒருவர் வேதாத்திரி மகரிசியே. இதனை தஞ்சை தமிழ்பல்கலைக் கழகம் பதிவு செய்துள்ளது.**

இருவருமே காலத்தால் வேறுபட்டிருந்தாலும் சமுதாயவியல் அறிஞர்களாக தலைசிறந்த அறிவு ஞானிகளாக ஆன்மீக மேதைகளாக, இணையற்ற அறிவியல் ஆன்மீகச் சித்தர்களாக சிறந்த மகான்களாக, அருள் வள்ளல்களாக, பிரம்ம ரிஷிகளாக, தத்துவஞானிகளாகத் திகழ்கிறார்கள்.

திருவள்ளுவரும் வேதாத்திரியும் சிறந்த மெய்ஞ்ஞானிகள். இருவரின் கருத்துக்களிலுமே அறிவியல் சிந்தனைகள் மிகுதியுண்டு. இருவருமே வற்புறுத்துவது உலக அமைதி ஆகும். உலக அமைதியே மனித குலத்தின் சன்மார்க்கமாகும்.

அன்று தெய்வப் புலவர். இன்று அருட்தந்தை.

தெய்வப்புலவரும் மகரிசியும் கண்டது அறவியல் மட்டு மில்லை. குன்றாத அறிவியலும் ஆகும்.

வள்ளுவத்தில் முதற்குறளே அறிவியல் செறிவு மிக்கதாக அமையப் பெற்றுள்ளது.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்**
**முதற்றே உலகு**

பிரபஞ்சத்தின் முதல் நிலையாகிய இருப்பு நிலையையே ஆதிபகவன் என்று குறிப்பிடுகிறார்.

**எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.**

என்பது வள்ளுவம்.

எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதன்மை உடையன, அதுபோல உலகம் ஆதிபகவானாகிய முதன்மையுடைத்து.

ஆனால், வேதாத்திரியமோ இக்குறளுக்குத் தரும் விளக்கம் சிந்திக்கத்தக்கதாகும். ஏற்றுக்கொள்ளக்கூடிய உலக நியதிகளோடு இரண்டும் ஒன்றுபடுவதைக் காணலாம்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் வெட்ட வேளியே இறைவெளி என்பது வேதாத்திரியம்.

அறிவே தெய்வம். மனிதனின் அறிவு சுத்தவெளி. பேரறிவான மெய்ப்பொருளை நாடுவதே முழுமையை நோக்கிய அறிவின் பயணம்.

உலகப் பொது அருள்நெறி சமயத்தில் உலகில் உள்ள அனைத்து மதங்களும் ஒன்றாகியுள்ளன.

**ஒரே தெய்வம் சுத்தவெளி என்பது வேதாத்திரியம். வற்றாயிருப்பு ,பேராற்றல், பேரறிவு ,காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்.**

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் ஆகிய நான்கு வளங்கள் ஒன்றிணைந்த இயற்கைப் பெருவெளியே இறைநிலை.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் ஆகிய நான்கு வளங்களையும் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க முடியாதபடி இறைநிலையின் தன்மைகளாகவே இருக்கின்றன.

## வற்றாயிருப்பு

எல்லையற்ற இறைநிலையானது தன்னிறுக்கத்தால் தானே நொறுங்கி இறைத்துகள்களாகி, பரமாணுவாகி அவற்றின் கூட்டால் விண் என்ற எல்லாத் தோற்றங்களுக்கும் மூலக்கூறாக உள்ள அணுவாகி அவற்றின் இணைப்பால் பிரபஞ்ச தோற்றத்தில்

எல்லாப் பொருட்களும் உற்பத்தியாகின்றன. இச்செயல்களினால் இறைவெளி அளவிலும் ஆற்றலிலும் துளி கூட குறையாத வற்றாயிருப்பாய் உள்ளது.

## பேராற்றல்

இறைநிலையில் தோன்றிய அத்தனைப் பொருட்களையும், இறைநிலையிலே தாங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஆற்றலாகப் பேராற்றல் இருக்கிறது.

## பேரறிவு

எந்தப்பொருளிலும் உள்ள இயக்க ஒழுங்கு அதாவது வடிவம். துல்லியம், காலம் இவை மூன்றும் தவறுவதில்லை. இதுவே அறிவு என்னும் தத்துவமாகும். இந்த அறிவு இறைநிலையின் இயல்பாக அடங்கியுள்ளது. இதுவே, இறைநிலையின் தன்மாற்ற விளைவுகளான கோடிக்கணக்கான பொருட்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பேரறிவாக உள்ளது.

## காலம்

இறைநிலையின் தன்னிறுக்கத்தால் அது விட்டுவிட்டு அழுத்தும்போது, தானாகவே ஓர் அதிர்வு ஏற்பட்டிருக்கிறது. இது இறைநிலைக்கு அப்பாற்பட்டதல்ல. அதனின் இயல்பாகவே இருக்கிறது. இவ்வதிர்விலிருந்து தோன்றி அனைத்துமே இவ்வதிர்வின் தன்மை உடையதாகவே இருக்கின்றன. இயங்குகின்றன. இதுதான் காலம் என்பதாகும்.

அனைத்திற்கும் உள்ளும், புறமுமாக எல்லையற்றதாக உள்ள பெருவெளியின் தன்மாற்ற வெளிப்பாடுகளே நாமும், நாம் காணும் அனைத்தும் என்பதே வேதாத்திரியத்தின் சாரமாகும்.

**''எல்லாம் வல்ல தெய்வமது**
**எங்கும் உள்ளது நீக்கமற''** என்பது வேதாத்திரியம்.

# 5

# வள்ளலாரும் வேதாத்திரியமும்

எனக்கு சுமார் 42 வயது இருக்கலாம். நான் தெருத் திண்ணையில் படுத்துறங்குவது உண்டு. ஒரு பௌர்ணமி தினம். இரவு சுமார் 12.30 மணி இருக்கும். நிலவின் ஒளி திண்ணையில் கால்பாகம் இருந்தது. தூக்கம் விழித்துப் பார்த்தேன். என் வலப்பக்கத்தில் 2 அடி தொலைவில் அருட்ஜோதி இராமலிங்க வள்ளலார் சுத்த வெள்ளை ஆடையோடு தலையை அதே வெள்ளைத் துணியால் மூடிய நிலையில் அணிந்திருந்தார்.

எனக்கு ஒரு படபடப்பு ஏற்பட்டது. அவருக்கு வணக்கம் செய்யும் நோக்கில் எழுந்து அவர் திருவடிகளை நாடினேன்.

நான் உன்னோடு பத்தாண்டு காலம் இருக்கப் போகிறேனப்பா. இதை இப்போதே யாரிடமும் சொல்லாதே என்று கூறிய வார்த்தை களைத் தெளிவாகக் கேட்டேன். உடனே காட்சி மறைந்து விட்டது. உடம்பெல்லாம் புல்லரித்தது. மகிழ்ச்சித் தாங்க முடியவில்லை.

**என்றுளனை இராமலிங்க வள்ளல் பெருமானார்**
**எதிர்நின்று காட்சிதந்து அருளைப் பொழிந்தாரோ**
**அன்று முதல் உடல் உயிரோட றிவை அருட்பணிக்கே**
**அர்ப்பணித்து விட்டேன் என் வினைத்தூய் மையாச்சு**

**இன்று எந்தன் மனநிலையோ வள்ளல் பெருமானார்**
**எந்தச்செயல் செய்யென்று உணர்த்துவாரோ அதுவே**
**நன்று எனக் கொண்டவற்றை நான் முடிக்கும் பேற்றால்**
**நல்லறிஞர் பலர் எனக்கு நட்பை அளிக்கின்றார்!**

வள்ளலார், திருமூலர், திருவள்ளுவர், தாயுமானவர் போன்ற பெரியோர்களின் எண்ணங்களை எளிமைப்படுத்தி அவற்றை வாழ்வியல் நெறியாக்கித் தந்துள்ளது வேதாத்திரியம்.

வள்ளலார் கூறும் அருட்பெரும் ஜோதிதான் வேதாத்திரியம் கூறும் பேரறிவாகும்.

எல்லாவற்றையும் துலாம்பரமாக விளக்கிக் காட்டுவது விளக்கின் சுடராகிய ஜோதி. அந்த அறிவே தெய்வமாக உள்ளது என்ற தெளிவே இறையுணர்வு.

அந்த இறையுணர்வே எவ்வுயிருக்கும் துன்பமளிக்காத ஜீவகாருண்ய ஒழுக்கமாகும். தனிப்பெரும் கருணை என்பது துன்பப் படும் உயிர்களுக்கு உதவுதல் ஆகும் என்கிறது வேதாத்திரியம். அதற்கான செயல்முறைகள்தான் அகத்தவமும் அகத்தாய்வும் ஆகும்.

கடைவிரித்தேன் கொள்வாரில்லை என வருந்திய வள்ளலாரின் கனவு இன்று வேதாத்திரியத்தால் உலகளாவிய வெற்றி பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# 6

# பார்த்தசாரதி மாலையும் வேதாத்திரியமும்

ஒரு மனிதனுக்கு முதல் குரு தாயும் தந்தையுமே ஆவார்கள். அதே போல் அவனுக்கு முதல் ஹீரோ தந்தையே. இந்த விதி வேதாத்திரிக்குப் பொருந்தியது.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மகானாகவும், தத்துவஞானியாகவும், அருள்வள்ளலாகவும் ஒளிவீசிய மகரிசி அவர்கள் இளமைக் காலத்தில், அவர்தம் தந்தையாரிடமும் தாயிடமும் பெற்ற அனுபவங்களே மிகுதியாக அமைந்தது.

தந்தையாரிடம் தாம் கேட்ட பார்த்தசாரதி மாலையின் ஒரு பாடலே தம் அறிவுக் கண்ணைத் திறந்ததையும் இவர்தம் வரலாற்றில் பார்க்கிறோம்.

**ஒருவனே தெய்வம் அல்லால் வேறே இல்லை**
**உயிர்எல்லாம் ஒன்றாமே உற்றுப் பார்த்தால்**
**கருவிடமே வித்துமுதல் உலக மாச்சு**
**கதிரவனால் உலகம் எல்லாம் விளங்கி நிற்கும்**

**உருவான நட்சத்திரங்கள் இருபத்தேழில்**
**உள்ளபடி நடக்குமல்லால் வேறே யில்லை**
**பரிமளமே திருவல்லிக் கேணி வாழும்**
**பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே!**

இந்த விதைதான் வேதாத்திரியத்தின் வேராகியது. ஒரு பாமரனும் உள்ளதை உள்ளவாறு உணரக்கூடிய வல்லமையை அவனுக்குத் தருகிறது வேதாத்திரியம்.

**''எல்லாம் வல்ல தெய்வமது, எங்கும் உள்ளது நீக்கமற**
**சொல்லால் மட்டும் நம்பாதே, சுயமாய் சிந்தித்தே தெளிவாய்**
**வல்லாய் உடலில் இயக்கமவன், வாழ்வில் உயிரில் அறிவுமவன்**
**கல்லார் கற்றார் செயல் விளைவாய்க் காணும் இன்ப துன்பவன்**
**அவனின் இயக்கம் அணுவாற்றல், அணுவின் கூட்டுப் பக்குவம் நீ**
**அவனில்தான் நீ உன்னில் அவன், அவன்யார் நீயார் பிரிவேது?**
**அவனை மறந்தால் நீ சிறியோன், அவனை அறிந்தால் நீ பெரியோன்**
**அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அறிவுமுழுமை அது முக்தி''**

உள்ளதை உணர்ந்து, நாம ரூபங்களுக்கு அப்பால் அப்பால் நின்று உலகம் அனைத்திற்கும் பொதுவானதொரு இறைத் தத்துவத்தை வேதாந்த சாட்சியோடு நமக்குத் தருகிறது வேதாத்திரியம்.

# 7

# திருமந்திரமும் வேதாத்திரியமும்

திருமந்திரம் யோகநூல். தமிழ் நாட்டின் முதல் சித்தராகிய திருமூலர் இயற்றியது. யோகம் என்பது கலத்தல், இணைதல், சேர்த்தல் ஆகும்.

உணர்வால் ஒன்றுபடுதல். மனிதன், பரம்பொருளோடு-இறைநிலையோடு இந்த உடம்பில் வாழும் போதே ஒன்றுபட்டிருப்பது சிவயோகம்.

திருமந்திரம் 3000 பாடல்களைக் கொண்டது. இவரது காலம் ஐந்தாம் நூற்றாண்டினை ஒட்டி சற்று முன்பின் இருக்கலாம்.

திருமந்திரமும் வேதாத்திரியமும் சமதர்ம சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு பேசுகின்றன. மெய்யியல் நிலையில் வேதாத்திரியமும் திருமந்திரமும் பல்வேறு வகை ஒப்புமைகளைக் கொண்டு திகழ்கின்றன. இதன்வழி மானுடம் அனைத்தும் செம்மையுற வழிவகைகளை இயம்புகின்றன.

திருமந்திரத்தின் சாரத்தை எல்லாம் உள்வாங்கியது வேதாத்திரியம். உடல், உயிர், மனம் என்று பல்துறைகளில் திருமந்திர நதியானது வேதாத்திரிய சமுத்திரத்தில் கலந்துள்ளது.

மனித வாழ்க்கையானது அடிப்படையில் மூவகைப்படும். உடல்வாழ்க்கை, உள வாழ்க்கை, உயிர் வாழ்க்கை.

''அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'' என்பது ஔவை பொன்மொழி. மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே என்பது நாவுக்கரசரின் நல்வாக்கு.

இந்த மானிடப் பிறவியின் சிறப்பான செயல்பாடுகளைச் செய்வதற்கு உடல்நலத்தைப் பேணிக் காப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

மனஅமைதியின் மையம் உடல்நலம். அன்றாடக் கடமை களில் உடற்பயிற்சியை முதன்மையாக்க வேண்டும். இதனை திருமூலர்,

**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே''**

என்று குறிப்பிடுகிறார்.

''உயிரெனும் குருகுவிட்டோடும் குரம்பை'' என்று பட்டினத்தார் உடம்பைக் குறிக்கின்றார். இதிலிருந்து உடம்பு இல்லாது உயிர் வாழ முடியாது என்பது வெளிப்படையானதாகும்.

உடல்நலமாக இருக்க வேதாத்திரியம் எளிய முறை உடற்பயிற்சியை வடிவமைத்துள்ளது.

நாம் சமுதாயத்தில் ஓர் அங்கம். சமுதாயத்திலிருந்து பெற்ற பொருட்கள், வாய்ப்புகள் வசதிகள்மூலமாகத்தான் நாம் இந்த உடலையும் அறிவையும் உருவாக்கிக் கொண்டுள்ளோம்.

எனவே, இந்த உடல் சமுதாயத்தின் சொத்து. அதனைக் கெடுப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை. நலமாக வைத்துக் கொள்ள வேண்டியது நமது கடமை.

உடம்பினை வளப்படுத்தினால் உயிர்தங்கும் என்பதால் மனவளக்கலை மன்றத்தில் உடற்பயிற்சி முதன்மைப் படுத்தப் பட்டுள்ளது.

இந்த உடற்பயிற்சிகளை எளிய முறைப்படுத்தி எல்லா வயதினருக்கும் எல்லா நாட்டவருக்கும் பொருத்தமானதாக வடிவமைத்து மகரிசி தந்திருக்கிறார்கள்.

இப்பயிற்சியை செய்ய 30 முதல்40 நிமிடங்கள் போதுமானது. பயிற்சிக்குப் பின் உடல் களைப்படைவதில்லை. உற்சாகம் அதிகம் உண்டாகின்றது.

மேலும் உடலில் உள்ள எல்லா தசைகளுக்கும் எலும்பு களுக்கும் நரம்புகளுக்கும் சீரான இயல்பான இயக்கம் கிடைக்கச் செய்வதால் தாங்கள் செய்யும் அன்றாட வேலைகளைக் கூட சீக்கிரத்தில் சுறு சுறுப்புடன் செய்வதோடுமட்டுமின்றி நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்கவும் உதவுகின்றது.

அருட்தந்தை அவர்கள் இப்பயிற்சியினை வடிவமைப் பதற்கென எல்லா நாட்டு உடற்பயிற்சிகளையும், ஆசனங்களையும் செய்துபார்த்து ஆய்வு செய்த பின்னரே அறிமுகப்படுத்தி வைத்தார்.

உயிர் உய்வடைய வேண்டும். அறிவிற்கு முழுமைப்பேறு கிட்ட வேண்டும். உயிர் வீடுபேறு விடுதலை அடைய வேண்டும். அதற்கான ஆனமீகப் பயணத்திற்கு இந்த உடல்தான் வாகனம்.

ஆகவே உடலை உயர்வாகக் கருதி சீர்கேடு அடையாமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் ஆன்மீகப் பயணத்தில் வெற்றிபெற முடியும்.

# 8

# ஜேம்ஸ் ஆலனும் வேதாத்திரியமும்

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் ஞானி ஜேம்ஸ் ஆலன்

நம் அருட்தந்தையைப் போல் வள்ளலாரைப் போல் இளம் பருவத்திலேயே ஞானம் கைகூடப் பெற்றவர்.

தனித்திருந்து, விழித்திருந்து. சிந்தனைப் பசியுடன் அலைந்து திரிந்து வாழ்க்கையைப் பற்றிய கேள்விகள் எழுப்பியவர் ஆலன்.

தாம் தேடிச் சேர்த்த ஞானச் செல்வத்தைப் பின்னாளில் 19 நூல்களில் பொதிந்து வைத்து மானுடத்திற்கு வழங்கினார். இந்த ஞானியின் வாழ்வு (1864-1912) 48-வது வயதில் நிறைவு பெற்றது.

இந்த ஞானியைத் தமிழர்க்கு முதன் முதலாய் அறிமுகப் படுத்திய கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரை நன்றியுடன் நாம் நினைவு கூர்வோம்.

போரும் அமைதியும் குறித்து இவரது கருத்து அக்காலத்தில் மாபெரும் தாக்கத்தை உண்டுபண்ணியது.

- போர் என்பது மனிதனின் உள்ளத்திலிருந்து கிளம்புகிறது. சொர்க்கத்தில் போர் நிகழ்வதற்கு முன்பு பூமியில் போர் நடக்கிறது. அகத்தில் உறையும் ஆன்மிக உணர்வு பாகுபடுத்தும் எண்ணத்தாலும், மனப் போராட்டத்தாலும் அழிக்கப்படும் பொழுது, போர் என்ற வடிவத்தில் அது புற உலகில் வெளிப் படுகிறது. அகப் போராட்டம் இல்லாமல் போர் என்பது தோன்றாது. அகவெளியில் அமைதியான நிலைமை ஏற்படா வரையில் போர் என்பது ஓயாது.

- அமைதி என்பது ஓர் உன்னத அழகு வாய்ந்த உணர்வு

- தன்னிலை என்பது மிகப்பெரிய எதிரி. அதுதான் எல்லாவிதச் சண்டைகளுக்கும் காரணமாக இருக்கிறது. எல்லாவிதமான துயரங்களுக்கும் பொறுப்பாக இருக்கிறது. இந்த மண்ணில் யார் அமைதியை நிலைநாட்ட விரும்புகிறாரோ அவர் முதலில் தனக்குள் அடங்கியுள்ள ஆணவ உணர்வை வெற்றி கொள்ள வேண்டும். அவருடைய வெறியுணர்வை மாற்றிக் கொள்ள வேண்டும். அவர் தன்னையே வெற்றி கொள்ள வேண்டும்.

ஜேம்ஸ் ஆலனின் கருத்துக்கு வடிவம் தந்தது வேதாத்திரியம்.

- உலக அமைதி பெற, தனிமனித வாழ்வை உயர்த்த வேண்டும்.

- உலக அமைதி பெற, தனிமனிதனின் பகை உணர்ச்சியைப் போக்க மக்களைப் பக்குவப்படுத்த வேண்டும்.

இந்த அமைதி தனி மனித அமைதி. குடும்ப அமைதி, ஊர் அமைதி, உலக அமைதி என்று வகைப்படுத்தியது வேதாத்திரியம்.

அது மட்டுமல்ல. தனி மனித அமைதிக்கு தேவையான உத்திகளையும் சாதனைமுறை பயிற்சிகளையும் வழங்கி வருகிறது வேதாத்திரியம்.

தனி மனித அமைதிக்கு அடிப்படைத் தேவையான உடலோம்பலுக்கு எளிய முறை உடற்பயிற்சி, உயிருக்கு காயகல்ப பயிற்சி, மனதை வளப்படுத்த அமைதிப்படுத்த அகத்தாய்வு பயிற்சி. நான் யார் என்ற தத்துவ பயிற்சி என்று வரையறை செய்துள்ளது.

அதனை பட்டயமாகவும் பட்டமாகவும் பல்கலைக்கழகம் வரை கொண்டு சென்றுள்ளது வேதாத்திரியம்.

# 9

# திருப்போரூர்ப் பிள்ளைத் தமிழும் வேதாத்திரியமும்

**பா**ல்ய வயது வேதாத்திரி பேசுகிறார்.

கடவுளைப் பற்றி படிக்கும்போது பக்தி உணர்வுடன் பாடிக் கொண்டு இருப்பேன். கடவுளை வணங்கும்போது பக்தி சில சமயம் உண்டு. பக்தி மார்க்கத்தில் ஒரு கவி என் மனதை ஈர்த்தது. திருப் பேரூர்ச் சந்நிதி முறை என்ற நூலில் அது வருகிறது. அதில்

அஞ்சக் கரபரத் தொட்டிலிற் சதுர்வேத
 மானவட மொருநாலையும்
ஆதியுடன் இச்சைஞா ங்கிரியை நாமமுற்
 றருள்வளர்ந் தொளிர் சத்திகள்
அஞ்சக் கரங்கொடு பிடித்தங் கசைந்திடத்
 தகுபரையும் ஆதிசிவனுந்
தாமுள மகிழ்ந்துறச் சோமனென நிலவு பொழி
 தவளயா னைக்கடவுளும்
விஞ்சக்கரம் புனையு முதல்வர்பதி னொருவரும்
 விபுதர்களும் அரிபிரமரும்

வேணிமுனி வரரும்அருள் ஞானமுனி வரராதி
 வியனுலக ரும்பரவவே
செஞ்சக் கரப்பரிதி யெனநிலவு போரூர
 செங்கீரை யாடியருளே
தமிரமல மகலவரு கமரசர வணமுருக
 செங்கீரை யாடியருளே

இந்தப் பாடலை அடிக்கடி பாடிக் கொண்டே யிருப்பேன். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அப்படியே பொங்கிக் கொண்டுவரும் மகிழ்ச்சி. பூரித்துப் போவார்கள். இந்தக் கவியை நான் பத்து வயதிலேயே பாடுவேன்.

''கடவுள்தான் அனைத்தையுமே படைத்தான் என்றேன்
 கண்காது மூக்குவைத்துக் கதைகள் சொன்னேன்.
கடவுள் என்று கற்சிலையை அறையில் வைத்துக்
 கதவு அடைத்துப் பூட்டியும் வைத்தேன், பின் அந்தக்
கடவுளுக்குப் பசிதீர்க்க பால்நெய் தேங்காய்
 கனிவகைகள் கற்சிலை முன் படைத்தேன், ஆனால்
கடவுள் நிலை அறிந்தபோதென் செய்கை யெல்லாம்
 கண்டுவிட்டேன் சிறுபிள்ளை விளையாட்டாக''

(ஞா.க. 1210)

# 10

# திருக்குர்ஆனும் வேதாத்திரியமும்

முகம்மது நபி சமயத்தலைவராக மட்டுமன்றி, உலகியல் துறைகளிலும் தலைவராக இருந்தார். எளிமையான வாழ்க்கைப் படியில் துவங்கிய அன்றைய உலகத்தின் பெரும் மதங்களில் ஒன்றை நிறுவி, அதனைப் பரப்பிய பேராற்றல் வாய்ந்த அரசியல் தலைவருமாவார்.

அவர்கள் உயிர் நீத்து பதின்மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகும் அவர்களின் தாக்கம் சக்தி மிக்கதும் எல்லாத் துறைகளிலும் பரவி நிற்பதுமாக இன்றும் விளங்குகிறது.

இசுலாத்தின் இறைமையியல், அதன் அறநெறி, ஒழுக்கஇயல், யாவற்றுக்குமே பொறுப்பானவர் முகம்மது நபிகளே. இறைவனிட மிருந்து தங்களுக்கு நேரடியாய் அருளப்பட்ட அவர்கள் நம்பிய திருவெளிப்பாடான புனிதகுர்ஆனின் போதகரும் அவர்தாம்.

குர்ஆன் வாயிலாக முகம்மது நபிகள் உண்டு பண்ணிய தாக்கம், மிகப்பெரும் அளவினதாகும். திருக்குர்ஆனின் பல கருத்துக்கள் என்னும் நதி வேதாத்திரியின் சமுத்திரத்தில் கரைந்துள்ளது.

மனித சுதந்திரத்தில் தெளிவான முடிவுகளை நபிகளின் குர்ஆன் கொண்டுள்ளது.

☆ இறைநெறியை மேற்கொள்வதில் யாதொரு கட்டாயமோ நிர்பந்தமோ இல்லை. தவறான வழியிலிருந்து நேரான வழி தெளிவாகப் பிரிக்கப்பட்டு விட்டது. (திருக்குர் ஆன் 2-256)

☆ (நபியே!) இறைதூதை எடுத்துரைப்பது மட்டுமே உமது பணியாகும். கணக்கு வாங்குவது நமது பணியாகும் (திருக்குர் ஆன் 13 -40)

☆ குர்ஆன் உங்கள் இறைவனிடமிருந்து வந்த சத்தியமாகும். இனி நம்பிக்கை கொள்ள விரும்புவோர் நம்பிக்கை கொள்ளட்டும். நிராகரிக்க விரும்புவோர் நிராகரிக்கட்டும்.! (திருகுர்ஆன் 18 -29)

☆ (முஸ்லீம்களே) அவர்கள் ஏக இறைவனை விடுத்து யாரிடம் பிரார்த்தனை புரிகிறார்களோ அவர்களை நீங்கள் ஏசாதீர்கள். (திருக்குர் ஆன் 6 - 108)

இவ்வாறு திணிக்கப்படுவதை நபிகளின் குர்ஆன் எதிர்க்கிறது. வேதாத்திரி மகரிசியும் இதனை தெளிவுபடுத்துகிறார்கள்.

சுதந்திரம் என்பது உண்மையாக எல்லோருக்கும் வேண்டு மானால், பிறருடைய சுதந்திரத்தை ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளக் கூடிய கட்டுப்பாடுகளில்தான் எல்லோருடைய சுதந்திரமும் காக்கப்படும். ஒவ்வொரு தனி மனிதனுடைய பாதுகாப்பும் அச்சமின்றி அமையும். (ம.வ.பாகம்.3-பக்227)

**''உலகப் பேரறிஞரெலாம் மனிதர் வாழ்வில் உள்ள குறைகள் தீர உணர்ந்துரைத்தார்**

கலகங்கள் தீரவில்லை, காரணங்கள் கணக்கெடுத் தோர் பலப்பல நூறாகச் சொன்னார்

நில உலகக் கவர்ச்சியிலே புலன்மயக்கில் நினைவிழந்து தனை மறந்து வாழ்க்கைச் சிக்கல்

பல பெருக்கம் அறியாமை ஒன்றால் அன்றோ பார்மீது மெய் விளக்கம் பரவ நன்றாம்''

(ஞா.க. 1217)

# 11

# தாயுமானவரும் வேதாத்திரியமும்

**வே**தாத்திரி இளம் வயது வைராக்யத்துடன் கடுமையாக உழைத்த போதிலும், அந்த நேரத்திலும் கடவுளைக் காண வேண்டும. உயிர் என்றால் என்ன? வறுமை ஏன் வருகிறது? என்ற கேள்விகளைப் பற்றிய சிந்தனை சற்றும் தளரவில்லை.

கடவுளைக் காண வேண்டும் எனும் அவாவினால் அந்த ஊரில் உள்ள பிள்ளையார் கோயிலுக்குப் போகும் பழக்கம் ஏற்பட்டது. சனிக்கிழமைகளில் பஜனை பாடிக் கொண்டு அதிகாலை நேரத்தில் தெருக்களை சுற்றி வருவதுண்டு.

அந்தப் பஜனையில் பாடிய ஒரு பாட்டுத் தான் பின்னாளில், அருட்தந்தையின் அத்வைதக் கருத்துக்கு ஏன் வேதாத்திரியத்திற்கே ஆதாரமாக அமைகிறது. அது தாயுமானவர் பாடியது.

**அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்**
**ஆனந்த பூர்த்தியாகி**
**அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே**
**அகிலாண்ட கோடியெல்லாம்**

தங்கும்படிக்கு இச்சை வைத்து உயிர்க்குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமய கோடிகளெலாம்
தம் தெய்வம் எந்தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர்வழக்காடவும் நின்றதெது?
எங்கனும் பெருவழக்காய்
யாதிலும் வல்லதொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது? மேல்
கங்குல் பகல் அறநின்ற எல்லை உளதெது? அது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலா மோனவுரு வெளியதாகவும்
கருதியஞ்சலி செய்குவாம்.

இப்பாடலே வேதாத்திரி அவர்களின் இளமைக்கால நெஞ்சகத்தில் ஆழப் பதிந்தது. ஆத்ம தாகத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

''கடவுள் யார் என அறியும் ஆர்வம் கொண்டு,
கருத்துடனே ஆராயும் அன்பா கேளாய்
கடவுள் ஒன்றே பூரணமாம், உவமை இல்லை
கருத்தொடுங்கிக் கருத்தறிந்த நிலையில் மௌனம்
கடவுள், அணு, ஒலி, ஒளி, இறுக்கம் இவையாக யுள்ளான்
கண்டிடலாம் அவனை எங்கும் இயற்கையாக
கடவுளே அணு, அண்ட பிண்டமானான்
கருத்தானான் அந்நிலையே நீயும் நானும்.''

(ஞா.க. 1202)

# 12

## அகத்தியரும் வேதாத்திரியமும்

தமிழ்மொழியின் ஒரு முக்கிய சிறப்பு, தமிழ் அறிவியலாகக் கருதப்படும் சித்த மருத்துவம் குறித்தும் சித்தர்களின் தத்துவங்கள் உடல், உயிர், மனப் பயிற்சிகள் குறித்தும் அமைந்த சித்தர் பாடல்களே ஆகும்.

தமிழ்நாட்டில் அகஸ்தியர், திருமூலர், போகர்,, யாகோப் சுந்தரானந்தர், இடைக்காடர், சட்டை முனி, புலிப்பாணி போன்ற சித்தர்கள் மருத்துவம், யோகம், ஞானம், ஜோதிடம், ரசவாதம், வாழ்நாளை நீடிக்கும் முறைகள், சமாதி நிலை அடைதல் போன்ற பல்வேறு உயர்ந்த விபரங்களை உலகியல் வாழ்க்கைக்குப் பயன்படுமாறும், நீடித்த வாழ்க்கை வாழவும், ஆன்மஞானமும் - இறைஞானமும் பெறவும் எழுதி வைத்தனர்.

அகத்தியர் வாழ்நாளை நீடிக்கும் முறைகளான காயகற்பத்தை சொல்லிவைத்துள்ளார்.

**உண்ணும்போது உயிரெழுத்தை உயர வாங்கு**
**உறங்குகின்ற போதெல்லாம் அதுவே யாகும்.**
**பெண்ணின்பா லிந்திரியம் விடும்போ தெல்லாம்**
**பேணிவலம் மேல்நோக்கி அவத்தில் நில்லு.**

**தின்னும்காய் இலைமருந்தும் அதுவே யாகும்.**
**தினந்தோறும் அப்படியே செலுத்த வல்லார்**
**மண்ணூழி காலமட்டும் வாழ்வார் பாரு.**
**மறலிகையில் அகப்படவும் மாட்டார் தாமே**

அகத்தியர் போன்றே திருமூலர், கடுவெளிச் சித்தர், சிவவாக்கியர், தாயுமானவர் மற்றும் ஔவையார் போன்றவர்கள் உடலை வலிமையாக்கும் காயகற்ப கலையை பாடல் வடிவில் தந்து போயினர்.

நீண்டகாலமாக இந்தக் காயகற்பப் பயிற்சியானது மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. எல்லாச் சித்தர்களுமே அவரவர்கள் எழுதிய நூல்களில் இந்தப் பயிற்சியைப் பற்றிச் சில குறிப்புகளை எழுதி உள்ளார்கள்.

இந்த அரிய பொக்கிஷங்களின் அருமை பெருமை தெரியாமல் இருந்த காயகற்ப பயிற்சியை மானுடத்திற்கு தனது மனவளக்கலை பாடத்திட்டத்தில் சேர்த்தது வேதாத்திரியம்.

**காயகற்ப யோகமெனும் உயர்சஞ் சீவி**
**கருத்துடனே செய்துவந்தால் வித்து கட்டும்.**
**தூயமுறை நரம்பூக்கம், ஓஜஸ் மூச்சு**
**தொடர்ந்திரண்டும் குருவழியே செய்யச் செய்ய,**
**போயபிழை கள்போகும். பிணிகள் நீங்கும்**
**புத்துணர்வும், இறையருளும் ஊற்றெ டுக்கும்.**
**மாயமென வித்தமுத ரசமாய் மாறி**
**மரணமிலாப் பெருவாழ்வு சித்தி யாகும்**

சஞ்சீவி என்பது உயிர் காக்கும் மருந்து. அதுபோல காயகற்பப் பயிற்சியும் உயிரைக் காக்கும்.

இதில் உள்ள பயிற்சிகளான நரம்பூக்கப் பயிற்சி, ஓஜஸ்மூச்சு இரண்டையும் வேதாத்திரியம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் கற்பித்து வருகிறது.

இப்பயிற்சியினால் கருத்தொடராக வரும் முன்னோர்களது துன்பப் பதிவுகள் நீங்கும். கருத்தொடர் பிணிகளான இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் கூட நீங்கும், வராமல் தடுக்கப்படும்.

உடலிலே எப்போதும் ஒரு புத்துணர்வு இருக்கும். மனதில் இறையருள் ஊறி அன்பு சுரக்கும். வித்தானது அமிர்த ரசமாக மாறி மரணமிலாப் பெருவாழ்வு கிடைக்க இப்பயிற்சி உதவும்.

# 13

# ச்வேதாச்வதர உபநிஷத்தும் வேதாத்திரியமும்

**நூ**ற்றுஎட்டு உபநிஷத நதிகளும் நான்கு வேதங்களாகிய நதிகளும் வேதாத்திரியக் கடலில் கரைந்துள்ளன.

மாணிக்கவாசகரின் திருவாசகமும், தாயுமானவர் பாடல்களும், அருணகிரிநாதரின் திருப்புகழும், வேத, உபநிஷத்து களின் சாரமாக அமைந்துள்ளன.

அதைப் போலவே அருட்தந்தையின் பாடல்களும் கவிதை களிலும் தத்துவங்களை எளியமொழி நடையில் நன்கு புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதியுள்ளது சிறப்பம்சமாகக் கருதப்படுகிறது.

வேதங்களும், உபநிஷத்துக்களும் பல ஆயிரம் ஆண்டு களாக செவிவழியாகக் (கர்ணபாரம்பரியம்) கற்கப்பட்டு வந்தன. வேதத் தத்துவங்களின் சாரத்தைக் கற்பதைக் காட்டிலும் உணர்ந்து அறியும் போதுதான் மெய்ஞானம் மெய்ப்படுகிறது.

அருட்தந்தையும் வேத, உபநிஷத்துக்களை நன்கு அறிந்தவர். மேலும் வாழ்க்கையில் பல ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து பக்குவ

மடைந்த பின்னர்தான் மெய்ஞானத்தை அடைந்தவர். இதற்கு அவருடைய படைப்புகளிலேயே சான்றுகள் உள்ளன.

தன்னுள் இருக்கும் ஆன்மாவிடம் ஒன்றாகக் கலந்தபின் இவ்வுலகத்திலுள்ள அனைத்து உயிர்களும், உயிரற்றப் பொருள்களும் பஞ்சபூதங்களும், 'தான்' என ஆகிவிடும். அவ்வாறு தான் என்ற உணர்வு வருவதற்குத் தான் யார் என்ற கேள்விதான் அடிப்படையாக அமைகிறது.

இக்கருத்து ச்வேதாச்வதர உபநிஷத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது.

**ஓம் ப்ரம் ஹா வாதினோ வதந்தி!**
**கிம் காரணம், ப்ரஹ்ம, குத! ஸ்ம ஜாதா, ஜீவாம**
**கேன, கிவ ச ஸ்ம்ப்ரதிஷ்டா!**
**அதிஷ்டிதா! கேன ஸீகேத் ரேஷீ வாத்தாமஹே**
**ப்ரஹ்மவிதோ ப்யவஸ்தாம்!!**

வேதத்தை ஆராய்பவர்கள் பின்வருமாறு பேசுகிறார்கள்.

ஆதி, காரணம் எது? பிரம்மமா? நாம் எங்கிருந்து தோன்று கிறோம்? எதனால் உயிர் வாழ்கிறோம்? சேரும் இடம் எது? வேதத்தை அறிந்த நாம் எதனால் ஏவப்பட்டு இன்ப துன்பமாகிய கட்டுப் பாட்டில் இருக்கிறோம்?

இவ்வினாக்களுக்கு விடைகாணும் முயற்சியில் விளைந்த விளைவுகள்தான் வேதாத்திரியத்தின் தோற்றம்.

**ஆதியென்னும் பரம்பொருள் மெய்யெழுச்சி பெற்று**
**அணுவென்ற உயிராகி அணுக்கள் கூடி,**
**மோதி இணைந்து இயங்குகின்ற நிலைமைக்கு ஏற்ப**
**மூலகங்கள் பலவாகி அவையிணைந்து**

பேதித்த அண்ட கோடிகளாய் மற்றும்
பிறப்பு இறப்பிடை உணர்தல் இயக்கமாகி
நீதி நெறி உணர் மாந்தராகி வாழும்
நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்.

– **ஞானக்களஞ்சியம்**

''நான் யார்? எனும் வினா நல்லுயிர்ப்பறிவிற்கு
நான் அகம்பாவமாம் குறுகிய நாட்டத்தில்
நான் பேரறிவாகும் நற்றவ ஆழ்வினில்
நான் முழுமைபெற நலிவிலா மெய்ப்பொருள்''

(ஞா.க. 435)

# 14

# பாரதியாரும் வேதாத்திரியமும்

மூண்டாசுத்தலை, முறுக்கிய மேலுயர்ந்த அடர்த்தியான மீசை, பார்வையில் தீட்சண்யம், கருத்தில் தெளிவு, சொல்வதை அச்சமின்றித் துணிவுடன் சொல்வது என்னும் இவற்றுக்கெல்லாம் சொந்தக்காரர் யார்?

மாபெரும் கவிமேதை....அவர்தான் மகாகவி சுப்ரமணிய பாரதியார்.

தோற்றப் பொலிவோடு கம்பீரத்துடனும் வாழ்ந்து தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் புதுமைகள் பலவற்றையும் விட்டுச்சென்ற மாபெரும் கவிமேதை, அவர்தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்!.

பாரதியாரைப் பற்றி அருள்தந்தை.......

**உலகம் பாரதியை மிகச் சிறந்த அரசியல் அறிஞர் என்றுதான் கருதிக் கொண்டிருக்கிறது. அவர் மிகச்சிறந்த ஆன்மீகவாதி என்பதோ, தெய்வநிலை உணர்வு பெற்ற ஞானி என்பதோ பெரும்பாலோருக்குத் தெரியாது. பாரதியார் மட்டும் இன்னும் கொஞ்ச காலம் வாழ்ந்திருப்பாரேயானால் எனக்கு இந்த மண்ணில் வேலையே இருந்திருக்காது. இந்தத் தமிழகத்தை**

**ஆன்மீகத்தில் திளைக்கச் செய்திருப்பார். இந்தியா உலகுக்கு வழிகாட்டும் என்ற அவரது கனவு அவராலேயே நனவாக்கப் பட்டிருக்கும்....**

எக்காலத்தும் ஏற்புடைய சிந்தனை வடிப்பான நூல் ஒன்று இதுவரையில் தோன்றவில்லை என்று வருத்தப்பட்டவர் பாரதி. அந்த வருத்தத்தை நிவர்த்தி செய்யத் தோன்றியதுதான் வேதாத்திரியம்.

அறிவே தெய்வம் என்று பாடும் பாரதியார்........

**ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி**
**அலையும் அறிவிலிகாள்-பல்**
**லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்**
**டாமெனல் கேளீரோ**

**மாடனைக் காடனை வேடனைப் போற்றி**
**மயங்கு மதியிலிகாள்-எத**
**னூடும்நின் றோங்கும் அறிவொன்றே தெய்வமென்**
**றோதி றயீரோ**

**சுத்த அறிவே சிவமென்று கூறும்**
**சுருதிகள் கேளீரோ**

**சுத்த அறிவு நிலயிற் களிப்பவர்**
**தூயவ ராமென்றிங் கூதேடா சங்கம்..**

என்று சுத்த அறிவு எனவும்,

**பக்தியினாலே**
**அல்ல லொழியம்-நல்**
**ஆண்மை யுண்டாகும் அறிவு தெளிந்திடும்...**

**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்தநல் அறிவு வேண்டும்.**
**அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி**
**தெளிவுறவே அறிந்திடுதல்**

எனத் தெளிந்த அறிவு எனவும்,

**பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்**
**ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்**
**கல்லினுக்குள் அறிவொளி தோன்றுங்கால்**

என ஒளியுடைய அறிவு எனவும் குறிப்பதைக் காண்கிறோம்..

இவ்வாறு சுத்த அறிவு, தெளிந்த அறிவு, ஒளியுறும் அறிவு என்ற தொடர்களைக் கவிஞன் கையாள்கின்ற இடங்களில் அவனது ஆன்மீகச் சிந்தனை ஆழத்தையும், ஆன்மீக நூற்படிப்பின் அகலத்தையும் கண்டு வியக்கிறோம்.

இதனை மேலும் மேலும் தெளிவான விளக்கமாக பார்க்க நாம் வேதாத்திரியத்திற்குச் செல்வோம்

**அஞ்சுவதேன் துணிந்துரைப்போம் அறிவே 'நான்' தெய்வம்**
**அதுவேதான் வான்காந்தம் அகண்ட மண்டலத்தில்**
**பஞ்சமிலா விண்மையப் பகுதி இறையறிவாம்**
**படர்க்கைநிலை மனம் அதுநாம் பகரும் சீவகாந்தம்**
**வஞ்சமிலா சீவகாந்தம் வான்காந்தம் இரண்டே**
**வாழ் உயிர்கள் வான்கோள்கள் வளம் ஒழுங்கு காக்கும்**
**பஞ்ச புலன் கவர்ச்சியிலே பழகிக்கொண்ட மனிதன்**
**பரவசமாய் இன்பமுறப் பாடினேன் இவ்வுண்மை**

-மகரிஷி

பிரபஞ்சத்தில் நாம் கோடானு கோடி கோள்களையும் நட்சத்திரங்களையும், எண்ணற்ற உயிர் இனங்களையும் காண்கிறோம்.

இவை அனைத்தையும் முறையாக இயக்கிக் கொண்டும் காத்துக் கொண்டும் இருப்பது அவ்வவற்றுள் இருக்கும் அறிவே.

உயிரினங்களில் உள்ள விண் எனும் உயிர்த் துகளின் சுழற்சியால் எழும் அலையே சீவகாந்தம். இதுவே பஞ்ச புலன்கள் மூலம் பெறும் அனுபோகத்தை அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மனம் எனும் பஞ்ச தன்மாற்றங்களாக உணர்த்துகிறது.

இவைகளை உணர்ந்துகொள்வதும் இதே சீவகாந்தமே, மனம் எனும் நிலையில். விண் எனும் உயிர்த் துகள்கள் சுழலும் போது மையத்தில் சுழலாத ஒரு பகுதி இருக்கும். இது சுத்தவெளி.

இதுவே அறிவாக விளங்கும் தெய்வம். எல்லா தோற்றங் களுமே விண் துகள்களின் சேர்க்கையே. இயங்கும் விண்துகளின் மையத்திலும், அதைச் சுற்றிலும் சூழ்ந்தும் இருப்பது தெய்வம் எனும் வெளியே. இதுவே அறிவாகவும் செயல்படுகிறது. எல்லா சீவன்களுக்கும் இதுவே பொருந்தும்.

ஆக மனிதனாகிய நமக்குள்ளும் அறிவே தெய்வமாக விளங்கி நம்மைக் காத்துக்கொண்டும், வழிநடத்திக் கொண்டும் இருப்பதை அகத்தால் உணர்ந்து அறிவே 'நான்' அதுவே என்று அஞ்சாமல் எடுத்துரைப்போம்.

# 15

# பட்டினத்தாரும் வேதாத்திரியும்

**கா**தற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே என்னும் வாசகத்தைக் கண்டவுடன் தன் பெரும் செல்வத்தை எல்லாம் விட்டுவிட்டுத் துறவுநிலை புகுந்தவர் பட்டினத்தார்.

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் யாரும் துறக்கை அரிது அரிது எனப் பட்டினத்துப் பிள்ளையின் கடும் துறவு நிலை குறித்துப் புகழ் பரப்புவார் தாயுமானவர்.

உறவிலே கண்ட உண்மைநிலைத் தெளிவே துறவு எனும் துறவறம் பூண்டவர் அருள்தந்தை.

**“என் பிறப்பு, என் மரணம் இரண்டையும் யான் அறியேன்,**
**எனினும் இவ்விரு நிகழ்ச்சி என் மனதில் கொண்டே**
**பொன் முதலாய்ப் பொருள் அனைத்தும் ஈட்டுகின்றேன்.**
**அவற்றைப் புவிவாழ்வின் இயல்பொக்கப்**
**பொதுநலமே கருதி**

**நன்மை எனும் வழிகளிலே இவற்றைச் செலவாக்கி**
**நற்சமயம் வாய்க்குமெனில் அனைத்தையுமேஅழிப்பேன்**
**இன்முகமும் எளிமையுமே எனது செல்வம்**
**வீடோ ஏகவெளியென்றெண்ணி யான் துறவு பூண்டேன்''**

(ஞா.க. 489)

தான் பெற்ற இன்பம் இவ்வுலகம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன் துறவு ஞானம் கைவரப்பெற்ற பட்டினத்து அடிகள் தலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டு, இறைஞானத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

அப்போது அவர் பார்வையில், பக்தி உலகிலும் போலிகள் உலா வருவதைக் காண முடிந்தது. அவர்களை நேரடியாகச் சாடி, அவர்களை நன்னெறியில் கொண்டு வரப் பட்டினத்தார் விரும்பவில்லை.

அதற்கான கால அவகாசமும் அவர்க்கில்லை. எனினும், தன்னையே முன்னிருத்தி அவர்களை நல்வழிப்படுத்திட முனைந்தார்.

**கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்று எண்ண**
**பொய்யொன்று, வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்**
**மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பும் யான்**
**செய்கின்ற பூஜை யெவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே**

சிந்தை ஒன்றும் செயல் வேறொன்றுமாய் வேறுபட்டுப் போனதைப் பட்டினத்தார் கூர்ந்து கவனித்துப் போலிகளின் புரட்டு பக்தியைத் தன் மீதே போட்டுக் கொண்டு பாடுகிறார்.

இது பட்டினத்தார் காலத்திலும் போலி வேடதாரிகள் பக்திப் போர்வையில் உலா வந்ததை எடுத்துரைக்கும் பாடல்.

''சிந்தையிற் கள்விரும்பிச் சிவவென்பது போல்'' என பாரதியும் இந்த இழிநிலையாரைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

பட்டினத்தாரின் பாடல்களில் மனம் தோய்ந்த அருட்தந்தையும் போலி வேடதாரிகளை பற்றிப் பாடுகிறார்.

**வேடமிட்ட துறவிகளால் விளையும் தீங்கை**
**விவரிக்க முடியாது கொஞ்சமல்ல**
**சீடர்களாய்ப் பலர்சேர்வர் பக்தியாலே**
**சிந்திக்கும் ஆற்றலில்லா அன்னார் நம்ப**
**சோடனைகள் சித்துக்கள் செய்துகாட்டி**
**சொல்வன்மையால் பொருளைக் கவர்ந்து கொள்வார்**
**நாடறிந்த உண்மையிது பலபேர்கற்பை**
**நயவஞ்சத்திற் கிழந்து வருந்துகின்றார்.** (ஞாக. 521)

# 16

# வேதாத்திரியத்தில் தனிப்பாடல்

**த**னிப்பாடல்கள், சான்றோர்கள் காணும் நிகழச்சியின் அடிப்படையில் உள்ள உணர்வின் உந்துதலால் பிறந்தவை.

எங்கள் குடும்பத்தில் மாமிச உணவு கொள்ளும் பழக்கம் இருந்தது. எனக்குச் சிறுவயது முதல் அவ்வளவு பிடிப்பதில்லை. ஆயினும் அடியோடு நிறுத்திவிடவில்லை.

எனது ஒன்பதாவது வயதில் திருப்போரூர்க் கோயிலுக்குச் சென்றோம். மகாபலிபுரத்திற்குக் கூட்டிக் கொண்டு சென்றார்கள். அந்த இடத்தில் சுற்றிக் கொண்டு வரும்போது ஒரு புத்தகம் வாங்கினேன்.

தாவர உணவு சம்பந்தப்பட்ட புத்தகம் அது. உடனே அதைப் படிக்கத் தொடங்கினேன். அதில் என் உள்ளத்தை நெகிழ வைக்கும் சில கவிகள் இருந்தன. அவற்றில் ஒன்று,

**அம்மா வெனவலற ஆருயிரைக் கொன்றருந்தி**
**இம்மானிட ரெல்லாம் இன்புற் றிருக்கின்றார்**
**அம்மாவெனும் ஓசை கேட்டகன்ற மாதவர்க்கும்**
**பொய்ம்மா நரகமெனில் புசித்தவர்க்கென் சொல்லுவதே!**

மாபெருந் தவசியாயினும் ஒரு ஆடு அல்லது மாடு தன்னைப் பிறர் கொல்லும் போது வெளியிடும் அம்மா வெனும் ஓசையைக் கேட்டு விட்டால் அதை அக்கொடுந் துன்பத்திலிருந்து விடு விக்காமல், அவ்விடத்தை விட்டு அகன்று போனால் அவருக்குப் பொய்ம்மா நரகம் கிட்டும்.

அவ்வாறாயின் அக்கொலைச் செயல் மூலம் கிடைத்த புலாலை உண்டவர்கள் எத்தகைய பாவத்துக்கு உள்ளாவார்கள்? என்பதே இதன் கருத்து.

இதைப் படித்ததேன். எனது சிந்தனை விரைவாக ஓடியது. தெய்வ நினைவு எழுந்தது. நான் அதுவரையில் தெரியாமல் மாமிச உணவு உண்டு ஏற்றுக் கொண்ட பாவங்களை மன்னிக்கும் படி வேண்டினேன். கண்ணீர் விட்டு அழுதுவிட்டேன். அன்று முதல் புலால் உண்ணா நோன்பை ஏற்றேன்.

இக்கருத்து தொடர்பாக பல சான்றோர்களின் வாக்கும் வேதாத்திரியத்தில் கலந்தன.

**''ஆட்டை அறுத்த அண்ணன்மாரே**
**ஆளை அறுக்கதய்யா அண்ணன்மாரே''**

என்ற சுத்தானந்த பாரதியின் எண்ணமும்

**''புண்ணாக்கும் தவிடும் யிட்டு**
**என்னை அன்பாய் வளர்த்ததெல்லாம்**
**மாரியம்மன் கோயிலிலே கழுத்து**
**வெட்டு வெட்டிடவோ''**

என்ற யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சோமசுந்தர புலவர் எண்ணமும்,

**நலிதரு சிறிய தெய்வமென் றையோ**
**நாட்டிலே பாபெயர் நாட்டிப்**
**பலிதரு ஆடு பன்றிக் குடங்கள்**
**பலிக்கடா முதலிய உயிரைப்**
**பொலரிவுறக் கண்டே**
**புந்திநொந் துளநடுக் குற்றேன்**
**கலியுறு சிறிய தெய்வம் கோயில்**
**கண்டகா லத்திலும் பயந்தேன்**

என்ற வள்ளலாரின் வாக்கும் வேதாத்திரியின் அனுபவமாக மாறி

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்**

என்ற திருக்குறளுக்குப் புதுமையான விளக்கம் எழுதச் செய்துள்ளது.

விளக்கம் கிடைத்த உடன் பழக்கத்தை விடுகிற பக்குவம் தான் வேதாத்திரி விருட்சத்தின் விதையாக மிளிர்ந்து இன்று விருட்சமாக காட்சி தந்து கொண்டிருக்கிறது.

விளக்கம் கிடைத்த உடன் பழக்கத்தை மாற்றுவதுதான் மகத்தான செயல்.அவ்வாறான செயல்களில் தொகுப்பில் தான் பொதுவாக மகான்கள் உருவாகிறார்கள்.

இறைநிலை விளக்கம் கிடைத்து, பழைய பழக்கத்திலிருந்து விடுபட்டபோது தான் ஏசுகிறிஸ்து பைபிளாக மாறினார்.

முகம்மது நபிகள் திருக்குரான் அருளினார். இராமலிங்க வள்ளலார் அருட்பாவை இயற்றினார். வேதாத்திரி மகரிசி வேதாத்திரியத்தை வழங்கினார்.

செயல் பேச்சு இரண்டிற்கும் எண்ணம் மூலம்,
சிந்தனையால் எண்ணத்தை ஆய்ந்து தேர்ந்து
செயல்களெல்லாம் நலமளிக்கும் வகையில் காத்தால்
சிவக்கருணை சீவனிலே துளிர்க்கும் அன்றோ?
செயல்களிலே விளைவாகச் சிவத்தின் செய்கை
சீரமையும் உண்மையினை உணர்ந்து போற்ற
செயல்களெல்லாம் சிவபூஜையாகும்; தோவோம்
சிறுதெய்வம் சிலை மந்தரம் பொருள் வெற்றிக்கே''

(ஞா.க. 1790)

# 17

# சித்தர்களும் வேதாத்திரியமும்

இறைவனோடு தன்னை ஐக்கியப்படுத்தி இரண்டறக் கலந்து கரைந்து இறைமையோடு இறைமையாக ஒன்றிவிடும் தன்மையே சித்தானுபவம்.

இறைவன், அனுபவப் பொருளாக அல்லாமல் சித்தர்களின் அனுபவமாகிவிடும்நிலை.

இவ்வனுபவ நிலையை நாடுவதே சித்தர் நெறி.

இன்றைய விஞ்ஞான காலத்திற்கேற்றது சித்தர்கள் வாழ்க்கை நெறி.

இதுவே கர்மயோகம் என்ற உலக மயமான சிறந்த வாழ்க்கை நெறியாகும்.

அதனை மனவளக்கலை யோகம் என்ற பெயரில் பயிற்சியாக அளிக்கப்பட்டு வருகிறது.

வேதாத்திரியத்தில் அருள்தந்தையவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கின்ற மனவளக்கலைப் பயிற்சியில் தீட்சை வழங்கப் படுகிறது. அந்த தீட்சை முறைகளில் சித்தர் பெருமக்களின் பாடல்களும் முறைகளும் கலந்துள்ளன.

ஆசானால் சீடனுக்கு ஆற்றல் பாய்ச்சப்படுவதே தீட்சை என வழங்கப்படுகிறது. தீட்சை என்ற வட சொல்லுக்குக் கொடுத்துக் குறைப்பது என்று பொருள். (இறையுணர்வைக் கொடுத்து ஆன்மக் களங்கங்களைக் குறைப்பது)

ஆன்ம ஞானம் வேண்டுவோருக்கு மெய்ப்பொருளுணர்ந்த குரு ஆசானாக அமர்ந்து அவர் உயிரைக் கருணையோடும், இந்த உயிர் உய்ய வேண்டும் என்ற சங்கற்பத்தோடு ஒரு சீடனுக்கு பாய்ச்சும் முறை மூவகைப்படும்.

1. தொட்டுப் பாய்ச்சுதல் (ஸ்பரிச தீட்சை) 2. கண் மூலம் பாய்ச்சுதல் (சட்சு-நயன தீட்சை) 3. நினைவின் மூலம்பாய்ச்சுதல் (ஞான தீட்சை)

## தொடு தீட்சை

ஆக்கினை தீட்சை இம்முறையிலேயே கொடுக்கப் படுகிறது. ஸ்பரிச தீட்சைக்கு உதாரணமாக கோழி அடைக்காத்தலைக் குறிப்பிடுவார்கள்.

கோழி எவ்வாறு தனது உடல் வெப்பத்தினை, அதன் முட்டைக்குப் பாய்ச்சுகிறதோ, அவ்வாறே குருவும் தனது சீடனுக்குத் தனது கை மூலம் ஆற்றலைக் கொடுத்து, மூலாதாரத்திலிருந்து குண்டலினியை எழுப்புகிறார்.

இந்தத் தொடுமுறை தீட்சை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழங்கி வருவதை நாம் திருமந்திரத்தின் பாடலினின்று அறியலாம்.

**''உடல்பொரு ளோடாவி உதகத்தாற் கொண்டு**
**படர்வினை பற்றறப் பார்த்துக் கைவைத்து**
**நொடியில் அடிவைத்து நுண்ணுணர் வாக்கி**
**கடியப் பிறப்பறக் காட்டினான் நந்தியே!''**

மேலும் தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது என்ற பழமொழியும் தொடுமுறை தீட்சையினை உறுதிப் படுத்துகிறது.

**நயன தீட்சை**

குருவானவர் தனது ஆற்றலைத் தன் கண்கள் வழியாகச் சீடனின் கண்களுக்குப் பாய்ச்சுதல் நயன தீட்சை. துரிய தீட்சை இம்முறையிலேயே அளிக்கப்படுகிறது.

நயன தீட்சைக்கு உதாரணமாக மீனைக் குறிப்பிடுவார்கள். மீன் தனது கண்களால் முட்டைகளை உற்று நோக்கியே குஞ்சுகளைப் பொறிக்கும்.

**கண்ணினொளி பாய்ந்ததுவும் கருத்தறிந்து கொண்டதுவும்**
**விண்ணினொளி கண்டதுவும் வெளிப்படுவதெக்காலம்?**

என்ற பத்திரகிரியாரின் மெய்ஞானப் புலம்பலில் வரும் பாடல் நயன தீட்சையை உறுதிப்படுத்துகிறது.

**மானஸ தீட்சை**

இம்முறையில் குரு தன் மனத்தின் ஆற்றலினால், மாணாக்கனின் ஆற்றலை உயர்த்தி. இறைநிலையை உணர வைக்கிறார். இந்த ஞான தீட்சை முறையிலேயே துரியாதீதம் அளிக்கப்படுகிறது.

இதற்கு உதாரணமாக, நமது வேதாத்திரியத்தில் மகரிசி ஆமையைக் குறிப்பிடுவார்கள். ஆமையானது, கரையில் குழி தோண்டி முட்டையிட்டு விட்டு, அவற்றை மண்ணால் மூடி விட்டுச் சென்று விடும். என்றாலும். அம்முட்டைகளோடு தன் எண்ணத்தை இணைத்தவாறே இருக்கும்.

**கடலிலே திரியுமாமைக் கரையிலேற முட்டையிட்டுக்**
**கடலிலே திரிந்தபோது ரூபமான வாறுபோல்**
**மடலுளெ இருக்குமெங்கள் மணியரங்கச் சோதியை**
**உடலுளே நினைந்து நல் உண்மையான துண்மையே**

-சிவவாக்கியர்.

**குளத்திலே கிடக்குமாமை குளக்கரை முட்டையிட்டுக்**
**குளத்துநீர்க் குள்ளிலிருந்து குறிப்புடன் நினைக்கும்போது**
**குளத்திலே புதைந்த முட்டை கருவுருவா னாற்போலுன்**
**உளத்திலே நாகைநாதர் உருவறிந் துணர்வாய்நெஞ்சே!**

-கணபதிதாசர்

இந்த மூன்று தீட்சை முறைகளையுமே நாம் கவனித்தால் உதாரணங்களுக்கடையே ஓர் ஒற்றுமை புலப்படும்.

மூன்றுமே பிறத்தலைக் குறிக்கின்றன. அதுவும் மறுபிறத்தலையே குறிக்கின்றன.

முட்டைகள் முதலிலேயே வெளி வந்து விட்டாலும், முழுப் பக்குவம் பெற்ற பின்னரே உயிராக வெளிப்படுகின்றன.

அதுபோல், நாமும் ஏற்கனவே, உலகத்தில் பிறந்து விட்டாலும், பக்குவ நிலையடையும் வரை, நாம் முழுமையடை வதில்லை. குருவின் மூலம் தீட்சை பெற்ற பின்னரே நாம் முழுமை பெறுகிறோம். அதாவது மீண்டும் பிறக்கிறோம். அதுவே அறிவிற்கு மறுபிறவியாகும்.

‘‘வாசியோக முறையொன்றும் இங்கு இல்லை
வாய்விட்டு உச்சரிக்கும் மந்திரமில்லை;
ஊசிமுனை வாசல் ஒன்றைத் திறந்துகாட்டி
உன்னையே அங்குக் காவல் சிலநாள் வைத்து
தேசிகனார் அருள் ஒளிரும் பார்வைமூலம்,
தீட்சை மறுபடியும் ஈந்தழைத்துச் சென்று
மாசில்லா ஆதிநிலை யறியும் உச்சி மன்றம்
அமர்த்திடுவேன் அமைதி காண்பீர்’’.

(ஞா.க. 1578)

# 18

# நாமக்கல் கவிஞரும் வேதாத்திரியமும்

**கா**ந்தியக் கவி என்றழைக்கப்படும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் 19.10.1888 ஆம் ஆண்டு பிறந்தார்.

**கத்தியின்றி இரத்தமின்றி**
**யுத்தம் ஒன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை**
**நம்பும் யாரும் சேருவீர்.**

இந்தப் பாடல் இவரை தேசியக் கவிஞர் எனச் சிறப்பான இடத்தை பெறச்செய்தது.

இவர்தம் பெற்றோருக்கு எட்டாவது பிள்ளை. அருட்தந்தை அவர்களும் எட்டாவது பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது. ஆன்மீகச் சிந்தனையில் இருவருமே அத்வைத 'கொள்கைகளைக் கொண்டவர்கள்.

**ஒரு நாளைக்கு ஒரு தரம்**
**ஒரு நொடி பொழு தேனும்**

**உன்னை படைத்தவனை**
**எண்ணி துதித்த துண்டோ மனமே!**
**திருநாளும் தேரும் என்று தேடியலைந்தல்ல**
**சிந்தனை அலையாமல் தியானத்தில் நிறுத்தியே**

நாமக்கல் கவிஞரின் விருப்பத்தை செயலில் கொண்டு வந்தது வேதாத்திரியம்.

**புருவத்திடை உந்தன்**
**பூவிரலால் தொட்டு எந்தன் உயிருணர்தி**
**புன் செயல்கள் பதிவழிந்து**
**பூர்வநிலை அறவறியத் துரியம் காட்டி**
**உருவத்தில் உயிரை உயிர்க்குள்**
**உள்ள மெய்ப்பொருளை அறிவாய்க் காட்டி**
**ஒழுக்கத்தால் உலகினையே**
**நட்புக் கொள்ளும் அன்புநெறி விளங்க வைத்து---**

மானுடத்தை வழிநடத்தியவர் அருள்தந்தை.

நாமக்கல் கவிஞர் ஒரு கோடு போட்டார்கள். அதற்கு நம் அருட்தந்தை அவர்கள் ரோடு போட்டு அதற்கு திசைக்காட்டி, கம்பங்களும் வைத்து நாம் எங்கு செல்ல வேண்டுமோ எப்படிச் செல்ல வேண்டுமோ அங்கு சரியான வழியில் அழைத்து செல்கிறார்கள்.

பொருளை நாடிச் செல்லும் மக்களைப் பார்த்து மனம் நொந்து தனது வேதனையை பாடினார் நாமக்கல் கவிஞர்.

**அரைக்காசுக் கானாலும்**
**ஒரு நாள் முழுதுங்காப்பாய்**
**ஆயிரம் பேரையேனும்**
**அலுப்பின்றிப் போய்ப் பார்ப்பாய்**

**உரைப்பார் உரைகட்கெல்லாம்**
**உயர்ந்திடும் செல்வனை**
**உன்னுள் இருப்பவனை**
**எண்ணிட நேரமில்லை**

அருள்தந்தை அவர்கள் இப்படி நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் மானுடத்தை நிறுத்தி-

**உன்னையோ கடவுளையோ அறியவென்றால்**
**ஒரு குறுக்கு வழியுண்டு உள்ளுணர்ந்து**
**தன்னை யறிந் தந் நிலையில், நிலைத்து வாழும்**
**தனிக்கருணை வடிவான குருவடைந்தால்**
**அன்னை வயிற்றடைந்துருவாய் உடலாய் வந்த**
**ஆதி கருவைப் புருவத்திடை யுணர்ந்தப்**
**பின்னை நீ அவ்விடத்தில் நிலைக்க உந்தன்**
**பேதமற்ற நிலை கடவுளாகி நிற்கும்.**

(ஞா.க.. 1536)

என்று நம்முள் இருப்பவனை மட்டுமல்ல- எல்லாவற்றிற்கும் மூலமான இறைவனையே பாமரர்களுக்கு உணர்த்தினார்கள்.

# 19

# தொல்காப்பியமும் வேதாத்திரியமும்

**ச**ற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் தொல்காப்பியர். தொன்மையைக் காப்பவர்.

உயிர்கள் ஆறு வகைப்படும். இது அறிதலின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர் மிக அழகாக ஒரு நூற்பாவில் தருகிறார்.

**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனொடு நாவே**
**மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கு அறிவதுவே அவற்றோடு கண்ணே**
**ஐந்து அறிவதுவே அவற்றோடு செவியே**
**ஆறு அறிவதுவே அவற்றோடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே**
(தொல்.1526)

மனதினால் தான் சிந்திக்கவும், எழுதவும், எடுத்துக் கூறவும் இயலும்.

மனிதத்திற்கு மிக இன்றியாமையாதது மனம். மனம் இல்லையெனில் மனித வடிவத்தால் உயிரும் உடலும் இருந்தும் பயனற்ற வாழ்க்கையாகின்றன.

வேதாத்திரியம், தமது மன்றங்களுக்கு மனவளக்கலை மன்றம் என்றே பெயர் தந்துள்ளதிலேயே மனத்திற்குக் கொடுத்துள்ள முக்கியத்துவத்தை உணரலாம்.

☆ பேரறிவு என்னும் எல்லாம் உணரும் ஆற்றல்தான், அதன் முழுமையில் அலை இயக்கமாகி மனித மனமாகத் திகழ்கின்றது. இருப்பு, இயக்கம் என்னும் இரண்டு தத்துவங்களாக இயற்கை விளங்குகின்றது. இருப்பு நிலையில் உள்ளதுதான் இறைவழி. இதுவே சிவம், தெய்வம், பிரம்மம் என்றும் வழங்கப்படுகிறது. எல்லாத் தோற்றங்களுக்குள்ளும் அலைநிலையில் உள்ள காந்தம்தான் அழுத்தம், ஒளி, சுவை, மனம் என்ற சிறப்பு நிகழ்ச்சிகளாகத் தன் மாற்றம் பெற்று விளங்குகின்றது.

☆ மனிதமனம் ஜீவகாந்த ஆற்றலின் அலை இயக்கமென்று உணர்ந்தோம்.

☆ மனதுக்கு அடித்தளம் இறையாற்றலே.

மனதைப் பற்றிய முழுமையான விளக்கத்தோடு, மன ஓர்மைக்கும், தூய்மைக்கும் பயிற்சியும் அளிக்கிறது.

**''மனமது தன் மயக்கநிலை தெளிந்து அதன்மூலம்**
**மறைபொருளாம் இறைவெளியே அறிவு எனக் கண்டால்,**
**மனம் சிறந்து அறிவாகும் இறையாம் அவ்விரிவில்,**
**மயக்கமெலாம் ஒழிந்தறிவு போரொளியாய்த் திகழும்**

மனம் என்னும் புதினத்தை எல்லோரும் உணர
மனம்மீது மனம் வைக்கும் குண்டலினி யோகம்
மனம் விரும்பும் அனைவருக்கும் கற்றுத் தருகின்ற
மனவளக் கலைக் கல்வி உருவாக்கி உள்ளேன்''

(ஞா.க.1733)

# 20

# திருவாசகமும் வேதாத்திரியமும்

**சா**த்திரங்களில் சிறந்தது திருமந்திரம். தோத்திரங்களில் சிறந்தது திருவாசகம்.

திருவாசகம் என்பது மெய்ப்பொருள் நிரம்பிய வார்த்தை.

திருவாசகத்தை தமிழ் மொழியில் அமைந்த வேதம் என்பார். அருள் நாட்டம் கொண்டிருப்பவர்களுக்கு அருள் தாகத்தை வளர்க்கும் தன்மையதாய்த் திருவாசகம் அமைந்திருக்கிறது.

சாதன வகைகளின் முறைமைகளை எல்லாம் திருவாசகம் தன்னகத்தே அடக்கி வைத்திருக்கிறது. சாதனத்தில் நிலைக்கு ஏற்பச் சாதகனுக்கு அவை யாவும் விளங்கும். சத்சங்கம் பண்ணுவதற்கு நிகர் திருவாசகத்தில் திளைத்திருப்பது.

திருவாசகத்தில் திகழ்கிற பரம்பொருள் விளக்கம் அனுபூதிவான் களுக்குப் பரவசத்தை உண்டுபண்ணுகிற அருள் விருந்தாகும்.

திருவாசகத்தில் இறையனுபவம் பலமுறை கூறப்பட்டிருப் பினும் அதன் திருவண்டப்பகுதியில்,

தடக்கையின் நெல்லிக்கனி எனக்காயினன்
சொல்லுவது அறியேன் வாழ் முறையோ
தரியேன் நாயேன் தான்எனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்கு
அருளியது அறியென் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் அள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
ஏற்புத் துளைதொறும் ஏற்றனன் உருகுவதே
உள்ளங் கொண்டோர் உருச் செய்தாங்கு எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனர்.

எனக் கிடைத்தற்கரிய அப்பேரின்பம் மகிழ்ச்சி வெள்ளப் பெருக்காக காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

திருவாசகத்தின் ஆர்ப்பாட்டமான இந்நிலை
வேதாத்திரியத்தில்,

அழுத்தமெனும் உந்தாற்றல் ஒன்றைக் கொண்டே
அணுமுதலாய் அண்டகோடி அனைத்துமாக்கி
வழுத்தும் ஓரறிவுமுதல் ஐந்தும் ஆறும்
வகைவகையாய் உயிரினங்கள் தோற்றுவித்து

முழுத்திறனுடன் காத்து முடிக்கும் மேலாம்
முழுமுதற் பொருளே நம் அறிவாய் ஆற்றும்
பழுத்தநிலை வரும்வரையில் நீ நான் என்றோம்
பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்'

- (ஞா.க.)

என அமைதியாகக் காட்டப்பட்டுள்ளது.

இறைஅனுபவம் ஒன்றாயினும் ஆர்ப்பாட்டமான திருவாசக நிலை வேதாத்திரியத்தில் அமைதியாகக் காட்டப்பட்டுள்ளது.

''உய்யும் வகைதேடி உள்ளம் உருகி நின்றேன்
உயர் ஞான தீட்சையினால் உள்ளொடுங்கி,
மெய்யுணர்வு என்ற பெரும் பதமடைந்தேன்
மேல் நிலையில் மனம் நிலைத்து நிற்க நிற்க,
ஐயுணர்வும் ஒன்றாகி அறிவறிந்தேன்
ஆசையென்ற வேகம் ஆராய்ச்சியாச்சு
செய்தொழில்களில் கடமை உணர்வு பெற்றேன்
சிந்தனையில் ஆழ்ந்து பலவிளக்கம் கண்டேன்

(ஞா.க. 9)

# 21

# வேதாத்திரியத்தின் நான்கு தூண்கள்

**வே**தாத்திரிக்கு சிறு வயதிலேயே அவரது தந்தையார் சில துதிப்பாடல்களைச் சொல்லிக் கொடுத்திருந்தார்.

### 1. முதல் அடித்தளம் பெற்றோர்கள்

பெற்றோர் கூறிய பல கற்பனைக் கதைகளை இவர் ஏற்க மறுத்தார். வேதாத்திரியின் மனநிலையை உணர்ந்த அவரின் தந்தை தான் மனப்பாடம் செய்து வைத்திருந்த அறப்பளீசுர சதகம், தண்டலையார் சதயம், குமரேச சதகம் ஆகியவற்றைச் சொல்லிக் கொடுத்தார். பருவம் வந்ததும் அறநூல்களையும் வாங்கிக் கொடுத்தார்.

ஒழுக்கம், சத்தியம் தவறாமை, பொய் பேசாமை, பிறர் மனம் நோகப் பேசாமை, ஊருக்கு இலவச மருத்துவம் முதலான பொதுச் சேவைகள், கடினமான உழைப்பு போன்ற பெற்றோரின் பண்பு நலன்கள் இவரது யோக வாழ்விற்கு, நல்வாழ்விற்கு முதல் அடித்தளமாக அமைந்தன.

## 2. வழியில் கண்டு வழிகாட்டிய பாலகிருஷ்ணன்.

பத்து வயதில் வேதாத்திரியை பக்திமார்க்கம் ஆழமாக ஈர்த்தது. இந்த பருவத்தில் 75 வயதான ஏ. பாலகிருஷணன் என்ற இரண்டாவது குரு கிடைத்தார்.

சுத்த அத்வைத தத்துவம் பேசிய இவரது போதனையால் அடக்கம். பணிவு , கனிவு, ஒழுக்கம்,. நற்சிந்தனை போன்றன வரப்பெற்றார்.

அவர் விளக்கும் கருத்துகளின் அடிப்படை உண்மைகளை அறிய எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருந்தார்.

இன்பதுன்பம் என்றால் என்ன? முடிவு என்ன? உயிர் என்பது என்ன? நான் யார்? கடவுள் யார்? ஏழ்மை ஏன்? என 12 வயதிற்குள் இவரது மனம் பல வினாக்களை எழுப்பிக் கொண்டே இருக்கத் தொடங்கியது.

குரு போதித்த பஜனைப் பாடல்களும் சதகங்களும் இவரது வினாக்களுக்கு உள்ளொளி விளக்கங்களாக அமைந்தன.

## 3. கண்டவனை கல்கண்டாய் மாற்றிய எஸ். கிருஷ்ணராவ்.

18 வயதில் ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவர் வைத்திய பூபதி எஸ். கிருஷ்ணராவ் ஆசானாகக் கிடைத்தார்.

அவரிடமிருந்து ஆயுர்வேதத்தை முறையாகவும், சித்த மருத்துவத்தை ஓரளவும் கற்றார்.

சரக சம்ஹிதை, சுச்ருத சம்ஹிதை, மாதவ நிதானம், அஸ்டாங்க ஹிருதனம், ரசரத்ன சமுச்சயம் முதலான சமஸ்கிருத நூல்களின் மொழிபெயர்ப்புகளையும். தத்துவ விளக்கத்தையும், புருவத்திடையே தியானம் செய்யும் யோக முறையையும் பயின்றார்.

தனது 22 வயதுக்குப் பின் உயிர், கடவுள். வறுமை பற்றிய சிந்தனைகள் வலுக்க 35 வயதுக்குள் தெளிவான விளக்கங்களைக் கண்டார்.

## 4. வந்தவரை வரவேற்று வழிகாட்டிய பரஞ்சோதி

சென்னையில் உள்ள பரஞ்சோதி மகான் என்பவரின் உலக சமாதானம் என்ற ஞானசபையில் சேர்ந்தார்.

குண்டலி யோக தீட்சை முறை, சாந்தி யோகமெனும் இறங்குபடி தவமுறை ஆகிய சிறப்பான பயிற்சிகளில் ஒழுங்கான முறையில் தீட்சை பெற்றார்.

தனது மனதுக்கு ஒத்ததாக இருந்த இம்முறையுடன் தாம் அறிந்திருந்த தத்துவ விளக்கம், தியானமுறை போன்றவற்றை இணைத்து ஆராய்ந்தார். கூட்டுத்தவம் பயின்றார்.

# 22

## கன்பூசியஸும் வேதாத்திரியமும்

**உ**ங்களுக்கு எதை விரும்பமாட்டீர்களோ, அதை நீங்கள் பிறருக்குச் செய்யாதீர்கள்! என்று இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஒருவர் போதித்தார்.

அவர்தான் சீனநாட்டின் மாபெரும் சிந்தனையாளர் கன்பூசியஸ்

கன்பூசியஸ் சீன நாட்டின் மாபெரும் ஞானி மட்டுமல்ல, உலகம் முழுவதற்குமே பொதுவான ஒரு தத்துவஞானி.

கன்பூசியஸீக்கு முன்னாலும் சீனாவில் இலக்கியம், சரித்திரம், முதலான பொக்கிஷங்கள் இருக்கத்தான் செய்தன. ஆனால் அவையெல்லாம் ஒன்றோடொன்று சம்பந்தப்படாமல் பலவாறாகவும் சிதறிக்கிடந்தன. அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்தவர் கன்பூசியஸ் தான்.

புராதன ஞானிகளும் மன்னர்களும் வைத்துவிட்டுப் போன சிந்தனைப் பொக்கிஷங்களில் சிறந்தனவற்றை எல்லாம் இவர் ஒன்றாகத் திரட்டி, கடந்த கால மரபின் அடிப்படையில் ஒரு மாபெரும் தத்துவ மார்க்கத்தை எழுப்பினார். இந்தச் சாதனையில் கன்பூசியஸ் உலக சிந்தனையாளர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

நம் திருவள்ளுவரைப் போல் வேதாத்திரி மகரிசியைப் போல் இவர் ஒரு அறநெறியாளர். அதோடு இராஜ தந்திரியாக அனுபவம் பெற்றவர். குருகுல மகான்.

கல்வி கற்பிக்கும் போதனாசிரியர். பழம் நூல்களை தொகுக்கும் பதிப்பாசிரியர். சீடர்களோடு, நடமாடும் ஒரு பல்கலைக் கழகம். கவிஞர். இசைப்பாடகர். சங்கீதமேதை. அரசியல்வாதி. இயற்கைவாதி. இலட்சியவாதி. காரியவாதி. தத்துவ ஞானி.

2500 ஆண்டுகளுக்கு முன் கன்பூசியஸ் தான் சிந்தித்த பண்புகளை அஸ்திவாரமாக அமைத்து அதன் மீது அறநெறிகள் வகுத்து ஒரு கொள்கையை எழுப்பி உலகின் முன் நிறுத்தினார்.

அதை இன்று கன்பூசியனிஸம் எனப் போற்றி உலகம் சிந்தித்து வருகிறது.

மனிதன் மகிழ்ச்சியோடும் நெறியோடும் வாழ்வது எப்படி என்பதை கன்பூசியஸைப் போல் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியவர் வேறுயாருமே இல்லை.

மனித இனத்திற்கு உபயோககரமான முறையில் இவரைவிட வேறுயாருமே போதிக்கவில்லை. இவர் சீனாவின் முடி சூடா மன்னர் என்று சிந்தனையாளர் வால்டரே (எவரையும் நையாண்டி செய்யும் வால்டரே!) - உணர்ச்சியுடன் எழுதியிருக்கிறார் என்றால் அது ஒன்றே இவரது சிறப்பிற்குப் போதும்.

கன்பூசியசை அருட்தந்தை வானளாவப் புகழ்ந்திருக்கிறார்.

உலகம் முழுவதற்கும் ஓர் ஒழுங்கு, ஒரு ஒழுக்கம், ஒரு பொதுச் சமுதாயம் அமைய வேண்டும். அதற்கு உலகப் பொதுத் திட்டம் ஒன்று வேண்டும் என்று கன்பூசியஸ் சிந்தித்தார்.

கன்பூசியஸ் சிந்தனைக்கு செயல்வடிவம் தந்தது வேதாத்திரியம். உலக சமாதான நூலில் உலகப் பொதுத் திட்டம் பற்றி அருட்தந்தை அழகாக தந்துள்ளார்கள்.

தன் வீட்டில் தன் குடும்பத்து அங்கத்தினர்களுடன் அன்பு நிலையில் வாழ்பவன் தான் நாட்டு மக்களுக்கு அமைதியைப் பற்றிக்கூற தகுதியுடையவன் ஆகிறான்.

இதைத்தான் வேதாத்திரியம் முதலில் தனிமனித அமைதி. குடும்ப அமைதி, ஊர் அமைதி, உலக அமைதி என வலியுறுத்துகிறது.

பல விஷயங்களைப் பற்றி நன்கு ஆராய்வதில் ஈடுபடுவதால் அறிவு பிறக்கிறது. அறிவு நிறைவும் பெறுகிறது. அறிவானது நிறைவு பெறுவதால் சிந்தனையும், எண்ணங்களும் தூய்மை பெறுகின்றன என்பது கன்பூசியனிஸம்.

வேதாத்திரியமும் அறிவின் நிலைப்பற்றியும். அறிவே தெய்வமாக இருப்பது பற்றியும். எண்ணங்கள் தூய்மை பெறுவதற்குரிய பயிற்சி முறையையும் வழங்கியுள்ளது.

என்னதான் நிர்வாகக் கலையைப் பற்றிப் பேசினாலும் முடிவில் மனிதர்களின் நடவடிக்கைகள்தான் நிர்வாகத்திறன் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கின்றன.

தவறான மனிதர்களைக் கொண்ட நிர்வாகம் எந்த திறமைசாலிகளின் முயற்சியாலும் வெற்றியடைந்து விடுவதில்லை.

கன்பூசியஸிடம் - ஒருமுறை மன்னன் இந்த உலகத்தை ஆளுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்.

கன்பூசியஸ் பின்வருமாறு பதிலளித்தார்.

☆ உன்னுடைய எண்ணங்களில் நீ தூய்மையாக இருக்க வேண்டும்.

☆ எதையும் விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும்.

☆ உன்னையே நீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.

☆ உன்னுடைய குடும்பத்தை ஒழுங்காக நிர்வகிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

☆ நீ வசிக்கின்ற கிராம மக்களிடம் உனக்கு மரியாதை ஏற்படுத்திக கொள்ள வேண்டும்.

☆ இவை எல்லாம் சரியாக நடந்தால் நீ உலகத்தை ஆளலாம்.

இந்த யோசனைகள் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் மனித உறவை ஏற்படுத்திக் கொள்ளுதற்குத் தேவையான அடிப்படை குணங்களை அவர் கூறியிருக்கிறார். வேதாத்திரியத்தில்,

**ஆக்கத்துறையில் அறிவைச் செலுத்து**
**ஊக்கமுடன் உழை**
**உயர்வு நிச்சயம்**

**(ஞா.க. 250)**

**''ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் உள்ளுணர்வு பெற்றோர்கள்**
**உடல் நலமும் மனவளமும் உயர் அறிவும் பெறுவார்கள்,**
**அழுக்காறு அவா வெகுளி அனைத்துக் களங்கம் மறையும்**
**ஆன்மீக உணர்வு மிகும் அறிவறியும் பேறுகிட்டும்.**
**வழுக்காமல் நன்னெறியில் வாழ்வார்கள் அவர்தொண்டு**
**வாழ்மக்கள் அனைவர்க்கும் வழிகாட்டியாய் அமையும்.**
**பழக்கத்தில் நல்வினையே ஆற்றுவதால் உலகுக்குப்**
**பயனுடைய செயல் பலவும் எளிதாகும் அவர் வாழ்வில்''**

(ஞா.க. 360)

தான் உயரவும், மற்றவரை உயர்த்தவும் வல்ல மனவளக் கலை கன்பூசியசத்தின் செயல் வடிவமாகிறது

# 23

# ஆதிசங்கரரும் வேதாத்திரியமும்

**ஆ**திசங்கரர் பகவத்பாதாள் பாரதம் முழுவதும் சுற்றி வந்து அத்வைதத் தத்துவத்தை நிலைநாட்டினார்.

பௌத்த மதத்தை சேர்ந்த பலரும், இந்து சமயத்திலே பல்வேறு வழிபாட்டு முறைகள், உருவ வழிபாடு உள்ள பலரும், பல துவைத ஆச்சாரியார்களும், சாக்த வழிபாட்டு மதத்தலைவர்களும் அவருடன் தர்க்கம் செய்து தோற்றுப் போயினர். பின்னர் அத்வைதக் கொள்கையை ஏற்றுக் கொண்டு சீடர்களாயினர்.

ஆதிசங்கரரின் மாயாவாதமும் வேதாத்திரியத்தின் பரிணாம வாதமும் மானுடத்திற்கு பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

ஆதிசங்கரரின் விளக்கத்தின்படி பளபளக்கும் கிளிஞ்சலை வெள்ளியென்று எண்ணுகிறோம். இருளில் கயிற்றைக் கண்டு பாம்பென்று நினைக்கிறோம்.

அருகில் சென்று அது வெள்ளியல்ல, கிளிஞ்சலே. பாம்பல்ல, கயிறே என்று அறியுமட்டும் நாம் கண்ட தோற்றம் உண்மையாக இருப்பினும் அது இறுதி உண்மையல்ல.

மனிதர்கள் தங்களை உடலாக கருதுவதற்கும், ஒன்றேயான பிரம்மத்தை பல படித்தான தோற்றங்களாகக் காண்பதற்கும் காரணம் மாயை என்கிறார் சங்கரர்.

மாயை என்றால் எது இல்லையோ அது என்பது பொருள். இம்மாயையைக் கடந்து உண்மைநிலையை நாம் அறிய வேண்டும்.

காண்பன யாவும் நான் என்று அறியும் போது அன்புமயமாக, அறிவுமயமாக, ஆனந்தமயமாக ஆகி, கர்மத்தளையை உடைத்து பிறப்பு இறப்புகளிலிருந்து மீண்டு, அமர நிலையை அடைய வேண்டும் என்கிறார் சங்கரர்.

வேதாத்திரியமோ, ஆதியின் அசைவே பரம அணு என்றும் அவை ஒவ்வோர் அளவில் கூடி வேதம் கூறும் ஐம்பூதங்களாயின என்று பரிணாமக் கொள்கையின்படி அத்துவைதத் தத்துவத்தை விளக்குகிறது.

**ஒவ்வொரு பொருளும் பரமுதலாய்**
**அவ்வுரு வரையில் வந்த கதை**
**செவ்விய சிறுசொல் பரிணாமம்**
**சிறப்பை உணர்வாய் நீயுமதே**

(ஞா.க. 1628)

**பொருள் என்றால் தெய்வநிலை ஒன்றே அஃது**
**பூரித்த நிகழ்ச்சிகளே பிரபஞ்சம் ஆம்**
**அருளான மெய்ப் பொருளின் நிலை உணர்ந்தால்**
**அவன் அதுவாய் எல்லாமாய் அறிவிற்கெட்டும்,**

(ஞா.க. 1170)

எல்லாம் வல்ல இறையாற்றல் எவ்வாறு அணுவாகவும், காந்தமாகவும், ஐந்து பௌதீகப் பிரிவுகளாகவும், பஞ்சதன்

மாத்திரைகளாகவும் உடல் உயிர்களில் மனமாகவும் பரிணமித்துள்ளன என்பதை பிரம்ம ஞானக் கவிகளில் வேதாத்திரியம் விளக்கியுள்ளது.

**இறைவெளியே தன்னிறுக்கச் சூழந்தழுத்தம் ஆற்றல்**
**இதன் திணிவு மடிப்பு விழச் சுழலும்நுண் விண்ணாம்**
**நிறைவெளியில்விண் சுழல நெருக்குகின்ற உரசல்**
**நிலைவெளியில் எழுப்புகின்ற நேர் அலைகள் காந்தமாம்**
**மறை பொருளாம் காந்தம் தன் மாத்திரைகள் ஐவகை**
**மலைக்காதீர் விண்கூட்டம் மாபூதம் ஐந்துமாம்**
**முறையாய் அக்காந்த அலை மனமாம் உயிர் உடல்களில்**
**மதி உயர்ந்திவ்வுண்மை பெற மா பிரம்ம ஞானமாம்.**

ஆதியாக இருந்த சக்திக்கு மேலாகவும், அப்பாலாகவும் வேறொன்றுமில்லை.

எல்லை கட்டியுள்ள அறிவை விரித்து உணர்வதே மெய்ஞானம்.

# 24

# புத்தரும் வேதாத்திரியமும்

"ஆசையே'' துன்பத்திற்கு அடிப்படைக் காரணம் என்னும் தத்துவத்தை உலகிற்கு போதித்தவர் கௌதம புத்தர்.

உலக மகா ஞானிகளில் தனக்கென தனி இடம் பிடித்தவர். பௌத்த மதம் என்னும் சமயத்தை தோற்றுவித்து மக்கள் யாவரும் முக்தி அடைய ஒரு எளிதான வழியைக் காட்டியவர்.

உலகம் துன்பமானது என்பதிலும், அத்துன்பநிலை நீக்கப்பட வேண்டியது என்பதிலும் புத்தரும் வேதாத்திரியமும் வேற்றுமையில் ஒற்றுமை என்றவாறான கருத்து நிலையைக் கொண்டுள்ளனர்.

உலகியல் வாழ்வியலைக் கண்ணுற்ற புத்தர் நால்வகை வாய்மைகளை உருவாக்கி மானுட உயிர்கள் துன்பமில்லா வாழ்வை நோக்கிச் செல்ல ஆற்றுப்படுத்துகிறார்.

- ☆ துன்பம் என்பது இவ்வுலக வாழ்வில் உள்ளது.
- ☆ துன்பங்களுக்கான தோற்றுவாய் உள்ளது. இது பன்னிரு சார்புகளினால் தோன்றும். ஆசையில் அடங்கியுள்ளது.
- ☆ இத்துன்பங்களிலிருந்து நீங்க முடியும்.

☆ துன்ப நீக்கங்களுக்கான வழிமுறைகள் உள்ளன. அவை, எண்வகை நெறிகள் ஆகும்.

இவ்வுலகப் பொருள்களும், அதன் பொருட்டு எழும் உணர்வுகளும் மாறிக் கொண்டே இருக்கின்றன. மாறிக் கொண்டிருக்கும் உண்மையை அறியாமல் ஒவ்வொன்றிலும் நிலை கொள்ளும் ஆசையே துன்பங்களுக்கான காரணியாய் உள்ளது என்பதே புத்தரின் மெய்யியல் கண்டுபிடிப்பாகும்.

எனவே, ஆசையின் பொருட்டே துன்பங்கள் விளைகின்றன என்பதை அறியாமையே துன்பங்கள் நீடிப்பதற்கான காரணியாய் உள்ளது என்பதும் புத்தரின் கண்டுப்பிடிப்பாகும்.

துன்பம், துன்ப விடுதலை குறித்து வேதாத்திரிய சிந்தனைகள் இன்றைய வாழ்வியல் சிந்தனைகளின் ஊடாக வெளிப்படுகின்றன.

துன்பங்களுக்கான காரணங்களாக பின்வரும் நான்கு முடிவுகளை கூறுகிறது வேதாத்திரியம்.

மனிதன் நான்கு விதக் குறைபாடுகளால் துன்பமடைகின்றான். அமைதியிழந்து அல்லலுறுகிறான்.

☆ கடவுளைத் தேடிக்கொண்டேயிருந்தும் காண முடியாத குறை.

☆ வறுமை என்னும் பற்றாக்குறை.

☆ விளைவறியாமலோ விளைவையறிந்தும் அலட்சியம் செய்தோ, அவமதித்தோ செயலாற்றி அதன் பயனாய்த் துன்பம் அனுபவிக்கும் முறை.

☆ மனிதனின் சிறப்பறியாமல் பிறர்மீது அச்சமும், பகையும் கொண்டு துன்புறுத்தியும், துன்புற்றும் அல்லலுறும் குறை. (ஞானமும் வாழ்வும் ப.3)

துன்பங்களிலிருந்து விடுதலை அடைவது எவ்வாறு? வேதாத்திரியம் வழிகாட்டுகிறது.

☆ இன்பதுன்பங்களாக இயங்கும் அறிவின் நிலை.

☆ இயற்கை விதி என்னும் ஊழ் அல்லது தெய்வநிலை.

☆ சமுதாய அமைப்புமுறை நீதி என்னும் அறவாழ்வின் நெறி. அல்லது அரசாங்கம் ஆகிய மூன்று துறைகளிலும் மனிதன் அடையும் தெளிவுதான் வாழ்வை உய்விக்க வல்லது. துன்பங்களை களைந்து இன்பத்தை காக்க வல்லது (ஞானமும் வாழ்வும். பக்.6)

☆ அறிவின் நிலையில் இன்பதுன்பங்களை அறிந்து ஊழ் அல்லது தெய்வநிலையில் அவை வருவதும் நீடிப்பதுமான இயல்பறிந்து, அறவாழ்வின் நெறிநின்றால் துன்ப விடுதலை சாத்தியமாகும் என்பது வேதாத்திரியத்தின் சிந்தனை.

# 25

# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் வேதாத்திரியமும்

19 ஆம் நூற்றாண்டில் ஆன்மீகத்தில் எழுச்சியை ஏற்படுத்தியவர் ராமகிருஷ்ணர். 20ஆம் நூற்றாண்டில் ஆன்மீகத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் வேதாத்திரி.

குரு ராமகிருஷ்ண பரமஹம்சர் கலியுகத்தில் அநுபூதி அடைந்த உன்னதமான ஆத்துமாக்களுள் ஒருவராவார் ! இவர் சிறந்த பக்தர் பக்தி நெறியை பரப்பியவர் என்பதாக மட்டுமே பலரால் மேம்போக்காக கருதப்படுகிறார்!

ஆனால் உண்மை என்னவெனில் அவர் ஞானத்தில் முற்றியவர் நிறை ஞானி என்பதே!

இராமகிருஷ்ண பரமஹம்சருக்கும் வேதாத்திரி மகரிசிக்கும் ஆன்ம அனுபவம் மட்டுமல்ல, உலக அனுபவங்களும் உண்டு.

இவர்கள் ஏதோ ஒரு தவ உலகில் தனித்திருந்தவர்களாய்த் தம் வாழ்க்கை முழுமையையும் கழித்தவர்கள் அல்லர்.

உலகத்திலிருந்து கொண்டே உத்தம வாழ்க்கை வாழும் பெருவழியை காட்டியவர்கள். இருவரும் தெய்வத்தின் குரலைக் கேட்டவர்கள்.

இராமகிருஷ்ணரின் மொழிகள் அமுதமொழிகளாகவும், வேதாத்திரியாரின் மொழிகள் வேதாத்திரியமாகவும் வலம் வந்து கொண்டிருக்கின்றன. முன்னவரின் உபதேசங்கள் அனைத்தும் வேதாத்திரியத்தில் கலந்துள்ளன.

இராமகிருஷ்ணர் தமது கதைகள் மூலமாக உபதேசித்தார். வேதாத்திரியார் கவிதை வாயிலாக உபதேசித்தார். இருவரும் அதிசய அனுபூதிக் கலைஞர்கள். இருவரும் ஓதாது உணர்ந்த உயர்ஞானிகள்.

இராமகிருஷ்ணர் இந்து மதத்திற்குரிய தெய்வங்களைத் தரிசித்தது போல், கிறிஸ்துவ மதக் கொள்கைகளையும், இஸ்லாம் மதக் கொள்கைகளையும் கடுமையான சாதனங்களாலும் தவங்களாலும் சோதித்துப் பார்த்து அவையும் உண்மையென்று கண்டு கொண்டார். இப்படி உருவாயிற்று இவரது சர்வ சமரசப் பெருங்கொள்கை.

இவர் இந்த விதமாக சோதனைகளில் ஈடுபடும் போதெல்லாம் அவசியமானபோது இவருக்கு வழிகாட்ட ஆசிரியர்களும் வந்தார்கள். இந்த ஆசிரியர்களில் தோதாபுரி என்ற ஞானியும் ஒருவர்.

வேதாத்திரியமும் இசுலாத்தையும் கிறிஸ்துவத்தையும் ஏன் உலகில் உள்ள அனைத்து ஆன்மீக பொக்கிஷங்களையும் தன்னகத்தே ஈர்த்துக் கொண்டது.

**மனிதரிடை மனிதர்களாய் வாழ்ந்த நல்ல**
**மகான்கள் பலர் அவர்களிலே ஓர்சிறந்த**
**புனிதர் நபிநாயகம் பேரருள் சுரந்து**
**பூவுலகில் மனிதர் வாழ்வை இனியதாக்கத்**

**தனிமனிதன் கடமைகளைக் கூட்டு வாழ்வின்**
**தத்துவத்தை மிக உயர்வாய் வகுத்து வைத்தார்**
**இனிதான இத் தொகுப்பும் வேதமாச்சு**
**எல்லார்க்கும் இதன் கருத்து பொதுவேயாகும்.** (783 )

ராமகிருஷ்ணருக்கு பல குருமார்கள் வந்து வழிகாட்டியதைப் போல் வேதாத்திரியாருக்கும் பல குருமார்கள் வழிகாட்டினார்கள்.

**மனித இன நல் வாழ்விற்கெனவே தன்னை**
**மன முவந்து அர்ப்பணித்துக் காலமெல்லாம்**
**புனித முறையில் அன்பின் நிலையுணர்த்திப்**
**பூவுலகில் ஆன்மீக ஒளிபரப்பி**
**தனிமனிதன் சமுதாயக் கடமை காட்டி**
**தரித்திரம், நோய், பஞ்சமா பாதகம் போக்கும்**
**கனிவுடனே உயிர் வாழ்ந்தஇயேசுநாதர்**
**கருணை செயல் மறவாது அன்பாய் வாழ்வோம்**
(777)

# 26

# பகவத்கீதையும் வேதாத்திரியமும்

பகவத்கீதை என்பது ஒரு ஞானக் கருவூலம். மகாபாரதத்தில் குருசேத்திரப் போரில், உறவினர், குரு, சான்றோரைக் கொண்ட எதிரணியுடன் போரிட மாட்டேன் என்று அர்ஜுனன் பின்வாங்க, கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு மனிதனுடைய மூலம் எது? அவனுடைய கடமை எது? என்று உணர்த்தி, ஞானம் ஊட்டிய விளக்க நூல்தான் கீதை.

உலகின் அருள் வாக்குகளிற் சிறந்ததொன்று உபநிஷத்து. அதுவே வேதத்தின் ஞான மகுடம், வேதாந்தத்தின் தாயூற்று, உபநிஷத்தென்னும் காமதேனுவில், கோபாலன் கறந்து, விஸயக் கன்றிற்கு ஊட்டியதே கீதையாகும்

ஆண்டாண்டு காலமாக அஞ்ஞானத்தால் கட்டுண்ட, ஸம்சாரக் கடலில் அமிழ்ந்து வரும் ஜீவன், பரமாத்மாவை அடையச் செய்வது தான் கீதையின் முக்கிய நோக்கம்.அதற்குண்டான இரண்டு வழிகளை கீதை வலியுறுத்துகின்றது.

1. ஞான நிஷ்டை (தியானம்)

2. யோக நிஷ்டை (கர்மயோகம்)

1. இதைத்தான் நம்முடைய வேதாத்திரியமும் கூறுகிறது. வாழ்க்கையின் நோக்கத்தையும், அந்நோக்கத்திற்கு ஏற்ற வாழும் முறை என்ன என்பதையும் அறிந்து கொள்வது தான் ஞானம்.

2. ஒரு மனிதன் விளைவைத் தெரிந்து கொண்டு, வினைகளை முறைப்படுத்திக் கொண்டு அறநெறியோடு வாழக்கூடிய ஒரு தவவாழ்வு தான் கர்மயோகம் என்று தன்னுடைய பாடல்களில் விளக்குகிறது வேதாத்திரியம்.

ஒரு மனிதனுக்கு கீழ்க்கண்ட விஷயங்களைப் பற்றிய உண்மை அறிவு அவசியம் என்று கீதை போதிக்கிறது.

- ☆ பிரம்மம் என்றால் என்ன?
- ☆ பிரபஞ்சம் எது?
- ☆ ஈசுவரன் யார்?
- ☆ மாயை (தோற்றம்) என்பது என்ன?
- ☆ பிரபஞ்சம், மாயை இவற்றின் தொடர்பு என்ன?
- ☆ நான் யார்?
- ☆ எங்கிருந்து வந்தேன்?
- ☆ நான் செய்ய வேண்டியது என்ன?
- ☆ நான் என்ன செய்து கொண்டு இருக்கின்றேன்?

இவற்றைப் பற்றிய உண்மை அறிவை மனிதன் அடைந்து விட்டால். அகங்காரம், மமதை, பற்று, ஆசை முதலியவை மனிதனிட மிருந்து விலகி விடும். அவன் பிரம்ம நிலையை அடைந்து விடுவான் என்று பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய இக்கருத்துக்களைத் தான் நம்முடைய வேதாத்திரி மகரிசியும் அவருக்கே உரித்தான தெளிவான எளிய நடையிலே பாமரரும் புரிந்துக் கொள்ளக் கூடிய வகையிலே வேதாத்திரியத்தில் கூறியுள்ளார்.

**“இறைவெளியே பிரம்மம் தெய்வம் என்றும், அதே தன்**
**இறுக்கமான சூழ்ந்தழுத்த இயல்பினால் விண்ணான பின்,**
**முறையான தற்சுழலால் மோத வெளி உரசிட,**
**முகிழ்ந்த சிறு அலைகள் நிழல்விண் என்னும் காந்தமாம்.**
**மறைபொருளாம் காந்தம் தன் மாத்திரைகள் ஐந்துமாய்,**
**மனமுமாக உயிர்வகையில் மலர்ந்தவகை கண்டிட**
**கறைகள் என்ற தீயவினைக் கடல் கடந்து இறைவனில்**
**கலந்து நிற்கும் பேரறிவே பிரம்மஞானம் பூரணம்”**

(ஞா.க. 1669)

# 27

# கண்ணதாசனும் வேதாத்திரியமும்

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும், உலகத்து நடப்பிலும் எந்த நிகழ்ச்சிகள் நேர்ந்தாலும், அங்கே கண்ணதாசனின் பாடலொன்று எதிரொலிக்கும்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களில் கண்ணதாசனும் ஒருவர். மற்றெவர்க்கும் கிடைக்காத பேரும், புகழும், செல்வமும், செல்வாக்கும் அவருக்குக் கிடைத்தன.

அவர் தன்னை உற்று நோக்கி தனக்குள் ஒளிந்திருந்த தன்னைக் கண்டவர். அந்தத் தேடுதலில் கண்டுணர்ந்த தன்மைதான் ஊற்றுக் கண்களாகிக் கவிதைகளாகப் பொங்கிப் பிரவகித்தவை.

அவள் ஒரு தொடர்கதை என்ற திரைப்படத்தில் நம்மைக் கவர்ந்த பாடலில் சில வரிகள் வரும்.

**தெளிவாகத் தெரிந்தாலே சித்தாந்தம் - அது**
**தெரியாமல் போனாலே வேதாந்தம்**
**மண்ணைத் தோண்டி ஞானம் கண்டேன் அன்புத் தங்கச்சி**

**என்னைத் தோண்டி ஞானம் கண்டேன் -**
**இதுதான் என் கட்சி**

சிந்தாந்தத்தை புரிந்து கொண்ட கவிஞருக்கு வேதாந்தத்தை புரிந்து கொள்ள முடியவில்லை.

வேதம் என்பது தர்மத்தைப் பற்றியது

வேதாந்தம் என்பது பிரம்மத்தைப் பற்றியது.

வேதம் என்றால் மறை என்று பொருள். எல்லா தர்மங்களுக்கும் வேரான வேதம் வேரைப் போலவே வெளியே தெரியாமல் அதாவது எல்லோரிடமும் புழக்கத்திற்கு வராமல், அதை ரட்சிப் பதற்காக கடும் நியதிகளைப் பின்பற்றும் சிலரிடம் மறைந்து இருக்க வேண்டும் என்ற கருத்தை குறிக்கும் முகத்தான் காரணப் பெயராகத்தான் மறை என்ற பெயரை பெற்றது என்பார்கள்.

| | |
|---|---|
| ரிக் வேதம் | - பிரக்ஞானம் பிரம்மம் என்றும் |
| யசூர் வேதம் | - அகம் பிரம்மாஸ்மி என்றும் |
| சாம வேதம் | - தத்துவமஸி என்றும் |
| அதர்வண வேதம் | - அயனாம்சம் பிரம்மம் |

என்று வலியுறுத்துகின்றன.

இவ்வேத வாக்கியங்களின் நுட்பத்தை உணர்ந்து கொள்ள நம் முன்னோர்கள் நாதாந்தம், கலாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என்ற முறைகளைக் கையாண்டார்கள்.

வேதத்தை நான் படித்ததில்லை ஆனால் வேதத்தின் உட்பொருளாய் என்னைக் கண்டேன்.வாதத்தில் நான் கலந்து கொள்வதில்லை. வாதிப்போர் அனைவருக்கும் பொருளாய் உள்ளேன் என்கிறது வேதாத்திரியம்.

**அறிவதனை அறிந்தோர்கள்**
**ஆழ்ந்து, சிந்தித்து, ஆராய்ந்து**
**அகன்ற நோக்கில்**
**அனுமானமாய் உணர்ந்த**
**அவ்வுண்மை பிறர்க்குரைக்க**
**அதுவே வேதம்!**

என்கிறது. மேலும் அருட்தந்தை அவர்கள்,

**உன்னிலே நான் அடங்க, என்னுள்ளே**
**நீ விளங்க, உனது தன்மை ஒளிர**
**எனதுள்ளத் தூய்மை பெற்றேன்**
**இன்னும் வேறென்ன வேண்டும்**
**இப்பேறு பெற்ற பின்னர் எடுத்த**
**மனிதப் பிறப்பு எய்தியதே முழுமை.**

என்று வேதாவாக்கியங்களுக்கு வேதாத்திரியத்தில் எளிமையாக விளக்கமளிக்கிறார்.

கண்ணதாசன் கவிதைகளில் வரும் சித்தாந்தத்திற்கும் வேதாந்தத்திற்கும் மிக மிக எளிமையான விளக்கத்தை வேதாத்திரியத்தில் காணலாம்.

**இயற்கையின் ஆதிநிலை பிரம்மம் தெய்வம்**
**இயக்கநிலை அணுமுதலாய் அண்ட பிண்டம்**
**இயற்கையின் உணர்வுநிலை அறிவு ஆகும்.**
**இம்மூன்றைப் பிரித்துப் பேசும் சித்தாந்தம்**

இயற்கையே அனைத்துமாய் உள்ளதென்று
எடுத்துரைக்கும் வேதாந்தம். வெவ்வேறல்ல,
இயற்கைஎது? நான்யார்? என்றகத்ததே நோக்க
எண்ணியவன் ஒடுங்கும்போது இரண்டும் ஒன்றே.
(1177)

உலக மக்களுடைய மனத்தின் இருளைப் போக்கக் கூடிய அரிய சிந்தனைக் கருபவூலமாகத் திகழ்கிறது வேதாத்திரியம்.

''மரத்தினிலே விதையும் அந்த வித்தினிலே மரம்போல்
மனிதனுக்குள் தெய்வம், அந்தத் தெய்வத்திற்குள்
மனிதனாம்
பரந்தையுணர் அதுவெளியாம். பஞ்ச பூதக் கூட்டெனும்
பதமடைந்த உடலுக்குள் அப்பரவெளியே அறிவு ஆம்
உரத்த ஓசை ஒடுங்க மோனம் உணரவல்ல அறிவுகளாய்
உருவம், ஓசை, ஒளி, சுவைகள், மனம் இவைக்கும்
மூலம் காண்.
துரத்திடாதே உன் மனதைத் துன்ப இன்ப ஆழ்விலே
தோன்றிய நீ அமருமிடம் சுத்தவெளி தேர்ந்துநில்''
(ஞா.க. 1199)

# 28

# வேத சாசனமும் வேதாத்திரிய சாசனமும்

மனிதமரபு தோன்றிய போதே அதற்கொரு வழி பிறந்தது. அதையே அறம், தருமம் என்பார்கள். அதையே வேதம் ஓதுகிறது. பண்டறமான சனாதன தரும வேதம் எல்லையற்றது.

வேதத்தில் பூரணப்பொருள் ஒன்றே என்று குறிப்பிடும் சுலோகம் பிரபல்யமானது.

**ஓம் பூர்ணமத பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதரச்யதே!**
**பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமே வாவிஸிஷ்யதே!!**

இதற்கு தமிழில் விளக்கம் தருகிறார் சுத்தானந்த பாரதியார்.

**அதுவும் பூரணம் இதுவும் பூரணம்**
**பூரணத்திற் போந்தது பூரணம்**
**பூரணத்திற் பூரணம் எடுத்தும்**
**நிற்பது பூரண நிறைவாம் ஒன்றே!**

இன்னும் புரியவில்லையா? பூரணத்திற்கான விளக்கத்தை புட்டு புட்டு எளிமையாகவும் தெளிவாக தருகிறார் அருட்தந்தை.

☆ பூரணம், பிரம்மம், அறிவு, ஆற்றல் எல்லாம் ஒன்றே.

☆ எங்கும் நிறைந்தது. வற்றாயிருப்பு.

☆ தமிழில் வற்றாயிருப்பு என்ற பெயரை அதிகமாகக் கேட்டு இருக்க மாட்டீர்கள். பூரணம்என்ற ஒரு வார்த்தை இருக்கிறது இல்லையா? பூரணம் என்பது வடமொழி வார்த்தை. அதற்கு அட்சயம் என்று சொல்வார்கள். சயம் என்றால் குறைந்து கொண்டே போவது. அதற்கு அ போட்டுவிட்டால் அ+சயம் = அட்சயம். குறையவே குறையாது. எவ்வளவு எடுத்தாலும் அது குறையாது. அத்தகைய ஒரு தன்மை உடையது இறையாற்றல்.

பிரபஞ்சக் காட்சிகள் அனைத்தும் இறைவெளியிலிருந்து வந்தனவாதலால், இறை நிலையைப் பூரணம் என்றும், தன்னையே இறுக்கத்திற்கு உள்ளாக்கி ஆற்றலாக வெளிப்பட்டு, பிரபஞ்சமாகவும் மலர்ந்து, அப்பிரபிஞ்சத்தையே இயக்கும் தன்மை உடையதால் அது பேராற்றலுடையது எனவும் விண் முதல் மண் வரை விரிந்து, பின்னர் பிரபஞ்சமாகவும், ஓரறிவு சீவன் முதல் ஆறறிவு மனிதனாக மலர்ச்சி பெற்றதில் இறையாற்றலில் உள்ள இயக்க ஒழுங்கு, இயக்க நியதி என்ற இறையாற்றலின் தன்மைகளை வேதாத்திரியம் பேரறிவு என்று அழைக்கிறது.

இறைவெளியில், இயல்பாக அழுத்தமும் நுண்ணதிர்வும் உள்ளன.

இரு அதிர்வுகளுக்கிடையே உள்ள இடைவெளியை காலம் என்றும், காலத்திற்கு உரிய, புதிய, துல்லியமான விளக்கத்தை அளித்துள்ளது வேதாத்திரியம்.

வேதாந்தம் இந்திய நாட்டின் பலம். அது முறையாக உணர்ந்து முறையாகப் பரப்பாமல் முடக்கி வைக்கப்பட்டது இந்த நாட்டின் பலவீனம்.

பலத்தைத் தக்கவைத்துக் கொண்டு பலவீனத்தை அகற்றுகிறது வேதாத்திரியம்.

முடக்கி வைக்கப்பட்டதின் முடிச்சுகளை அவிழ்க்க முனைந்து அதைத் தாராளமயமாக்கிய பெருமை வேதாத்திரியத்தைச் சாரும்.

# 29

# அறம் வகுத்தோரை நினைவுகூர்ந்த வேதாத்திரியம்

ஒரு இலக்கியப் படைப்பாளனின் இலக்கியம் இன்னொரு இலக்கியப் படைப்பாளனின் நெஞ்சைக் கவரும் போது அவனை அறியாமலேயே அவ்விலக்கியத்தில் தோய்ந்து, அதில் பொதிந்துள்ள கருத்துக்களையே அல்லது நெஞ்சில் நிலைத்த வரிகளையே தன்னையும் அறியாமல் தான் படைக்கும் இலக்கியத்தில் சேர்த்து மக்களுக்கு வழங்குவதுண்டு.

அப்படி இலக்கியம் படைத்த சான்றோர் பலரை நம் தமிழ் இலக்கியத்தில் காணலாம்.

தாயுமானவர், திருவள்ளுவர்., திருமூலர், வள்ளலார் ஆகிய அறிஞர்களிடம் காணும் நற்கருத்துக்களை வேதாத்திரியமும் இணைத்துக்கொண்டது.

வேதாத்திரியம் தன்னிடம் கலந்துள்ள நதிகளுக்கு நன்றி பாராட்டியுள்ளது. அறம் வகுத்தோரை நினைவு கூர்ந்துள்ளது.

தாயுமானவர் அறிவேதான் தெய்வம் என்று கூறினார். திருவள்ளுவர் அத்தெய்வமாகிய மெய்ப்பொருள் உள்ளத்துள்ளே இருக்கின்றது என்று எடுத்துக்கூறி அறிவு பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தினார்.

திருமூலர் அவ்வாறு உள்ளே இருக்கின்ற அறிவை நாம் அறிந்து கொள்வதற்கு வழிமுறைகள் சொன்னார்.

இராமலிங்கர் வள்ளலார் அத்தெய்வமாகிய அறிவில், உள்ளத்துள்ளே இருக்கின்ற அறிவில், ஆழ்ந்து இன்பந்தரும் கவிதைகள் எல்லாம் வள்ளலார் வழங்கினார்.

அறிவில் அறிவாகத் தோய்ந்து, அறநெறிகள் வகுத்துக் காட்டியவர்களையும் அதன்படி வாழ்ந்து காட்டியவர்களையும் நினைவு கூர்ந்தது வேதாத்திரியம்.

**அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்**
**அகத்ததுதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக்காட்டி**
**அறிவதனை அறிவித்தார் திருவள்ளுவர்**
**அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்**
**அறிஞர் திருமூலர் அவ்வறிவில் ஆழ்ந்து**
**ஆனந்தக் கவியாத்தார் இராமலிங்கர்**
**அறிவில் அறிவாய் நிலைத்து அறம்வகுத்தோர்**
**அதை வாழ்ந்து காட்டினோர் நினைவு கூர்வோம்.**

- (ஞா.க.)

எனும் கவியை குருவணக்கமாக்கியிருக்கிறது வேதாத்திரியம்.

# 30

# மார்க்ஸீயமும் வேதாத்திரியமும்

உலக வரலாற்றில் மங்காப்புகழுடன் தலைசிறந்து விளங்குபவர் காரல் மார்க்ஸ்.

உலக நாடுகளிலுள்ள சோஷலிஸ்ட்டுகளுக்கு போதனை செய்த பேராசிரியர். உலகம் எங்கும் தொழிலாளி வர்க்கக் கட்சிகள் உருவாகக் காரணமாய் இருந்தவர். உதவி செய்தவர்.

இலக்கிய பேராற்றல்மிக்க ஆசான் அவர். அவரது வாக்கிய கட்டமைப்புக்குள் பல இலக்கியங்கள் மேற்கோள்கள் இருப்பதைக் காண முடியும்.

மாபெரும் ஜெர்மன் கவி ஹென்ரிச் ஹெய்னே-வை நேசித்தவர். ஷேக்ஸ்பியரை ரசித்தவர். கதேயுடன் கைகுலுக்கியவர்.

மார்க்ஸினுடைய போதனைகளும் தத்துவங்களும் மார்க்ஸீசம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன.

இன்றைய சமுதாய இயக்கத்தின் பொருளாதார நீதியை வெளிப்படையாக்குவதுதான் இந்த நூலின் நோக்கம் என்று மூலதனம் எனும் நூலிற்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

சமுதாயத்தின் பொருளாதார இயக்கமானது முதலாளித்துவ சமுதாயம் சோஷலிச சமுதாயமாக மாற்றமடைவதென்பது தடுக்க முடியாத நிகழ்ச்சியாவதை மார்க்ஸ் சுட்டி காட்டுகிறார்.

☆ சமுதாயமானது சக்திக்குத் தகுந்த உழைப்பு உழைப்புக்குத் தகுந்த ஊதியம் என்பதிலிருந்து சக்திக்கு தகுந்த உழைப்பு, தேவைக்கு தகுந்த ஊதியம் என்ற நிலைமைக்கு வளர்ச்சி அடையும்.

பொருளாதார விடுதலையே மனிதகுலம் மாண்படைய வழி எனச் சிந்தித்த காரல்மார்க்ஸ் தத்துவம், வேதாத்திரியத்தில் மிகவும் எளிமையாக விளக்கப்படுகிறது.

காரல்மார்க்ஸ், லெனின் தொடங்கி அவர்கள் சிந்தனை வரிசையில் பாரதிதாசன் அவரைத் தொடர்ந்த பரம்பரைக் கவிஞர் பலரும் தொழிலாளர் நலன்பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டினர். இவர்கள் வரிசையில் வேதாத்திரியமும் பொதுவுடை மையை வலியுறுத்தியுள்ளது.

பொது உடைமைப் பொருளாதார அமைப்பு. உலகமெல்லாம் தழைக்க வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

**போராட்டம் தனிமனிதரிடை ஒழிந்து**
**போகவெனில் பொதுஉடைமை**
**முறையே வேண்டும்.**

பொதுஉடைமைத் தத்துவம் என்பது ஒரு பொருளாதாரச் சமன்பாட்டு நெறி மட்டுமல்ல, அது ஒரு சமூக நல வாழ்வுத் தத்துவம் என்பதை வேதாத்திரியம் மிக அழுத்தமாக கொண்டுள்ளது.

பொதுவுடைமைக் கோட்பாட்டை ஓர் அரசியல் தத்துவ மாகவோ. பொருளாதாரத் தத்துவமாகவே வேதாத்திரியம் கருதவில்லை.

சமுதாய நலனுக்காக-இயற்கைப் பேராற்றல் இசைந்து கொடுக்கும் ஒரு சமூகத் தத்துவமாகவே வேதாத்திரியம் நம்புகிறது.

பொதுவுடைமைச் சமூக அமைப்பு என்பது பொருள் களையும். சொத்துக்களையும்- தனியாள் உரிமை விலக்கி விட்டு அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்படும் ஓர் இயந்திரத்தனமான நெறிஅல்ல மாறாக மக்கள் நலனை முன்னோக்கிய ஒரு இயங்கியலாக வேதாத்திரியம் கருதுகிறது.

பொதுவுடைமைத் தத்துவம் மக்கள் தத்துவமாக மாற வேதாத்திரியம் பின்வரும் செயல் நிலைகளைப் பயன்விளைவு களாக உலகத்தின் முன் வைக்கிறது.

☆ மக்கள் பொது நலத்தில் தனியாள் தனிநலம் இணைந்து விடும்.

☆ பொருள் ஈட்டுதலிலும் பொருள் உற்பத்தியிலும் ஒற்றுமையும் உழைப்பும்.

☆ நல்லவர், சான்றோர் சிந்தனைகள் செயல்வடிவம் எளிதாக அமையும்.

☆ பொருள் ஈட்டத் தெரியாதோர்க்கும், பொருளீட்ட இயலா தோர்க்கும் போதுமான வசதிகள் எளிதில் கிடைக்கும்.

☆ மக்கள் வாழ்க்கை என்பதே பொதுத் தொண்டு ஆற்று வதற்காக என்றே கருத்தியல் உருவாகும்.

☆ அறநெறி தழைத்துச் சிறக்கும்.

பொதுவுடைமைக் கோட்பாடு என்பது, மேலோட்டமாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிற சொத்துரிமை அழிப்பு, பொருளாதாரச் சமன்பாடு என்பது மட்டுமல்ல.

எல்லோரும் நலமாக வாழ வேண்டும். பொருள் ஈட்டத் தெரியாத, இயலாத, முடியாத அனைவரும் அடிப்படைத் தேவை களைப் பெற வேண்டும்.

அறநெறி சார்ந்த வாழ்வியல் ஒற்றுமையும், பொது நலமும் சிறக்கும் வாழ்வியல் அமைய வேண்டும் என்பதை வேதாத்திரியம் மிக அழுத்தமாக எடுத்துரைக்கிறது.

**''ஒருலக ஆட்சி உயர் ஒழுக்கத்தோடு**
**உலகினிலே குழந்தைகளை வளர்க்கும் திட்டம்**
**பார் முழுதும் பொருள்துறையில் சமநேர்நீதி**
**பலநாடும் ஒன்றிணைந்த பொருளாதாரம்**
**சீர்திருத்த சிக்கனமாம் சிறந்த வாழ்வு**
**தெய்வநிலை அகத்துணரும் இறைவணக்கம்**
**நேர்வழியில் விஞ்ஞானம் பயனாய்க் கொள்ளும்**
**நெறிமுறைகள் இவை இணைந்த வாழ்வு காண்போம்.''**

# 31

# ஔவையாரும் வேதாத்திரியமும்

**பா**மரமக்களின் தத்துவஞானி அருட்தந்தை அவர்கள் உலகம் கண்டபல மெய்ஞ்ஞானங்களையும் விஞ்ஞானங்களையும் உள்வாங்கி இன்றுவரை உருவான மதங்களுக்கு நடுநின்று, உள் உணர்ந்து செயல்களின் விளைவாக ஏற்படும் தத்துவம் பற்றியும், ஒவ்வொரு வினைக்கும் அதற்கீடான மற்றும் ஒரு எதிர்வினை ஏற்படும் என்பது பற்றியும் எளிமையாக விளக்குகிறார்.

**அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்**

என்ற ஔவையாரின் கருத்துக்கு முழு வடிவம் தந்து மானுடத்தை விழிப்படையச் செய்தது வேதாத்திரியம்.

ஔவையாரின் இந்தக் கருத்தை வேதாத்திரி செயல் விளைவுத் தத்துவம் என்றார்.

**கல்லார் கற்றார் செயல்விளைவாய்க்**
**காணும் இன்ப துன்பமவன்**

எனும் வேதாத்திரியத்தின் வரிகள் வாழ்க்கைநெறியின் அடித்தளமாக அமைகின்றன.

தெய்வம் என்பது எங்கோ இருந்து கொண்டு அவ்வப் போது பூமிக்கு இறங்கி வருகின்ற அவதாரமல்ல. மாறாக மரத்தின் பச்சையிலும், மல்லிகையின் மணத்திலும், நெருப்பின் அனலிலும் வெளிப்படுகிறது.

இறைநிலை என்கின்ற மெய்பொருள் எல்லாப் பொருட் களிலும், உயிர்களிலும் ஊடுருவி ஒவ்வொரு செயலுக்கும் ஏற்ற விளைவை இறைநீதியாக அளிக்கிறது என்ற உண்மையை ஆய்ந்தறிந்து அதனைப் பின்பற்றி செம்மையாக வாழ வழிகாட்டும் தத்துவம்தான் செயல்விளைவுத் தத்துவம் ஆகும்.

ஒரு செயலைச் செய்தால் ஒரு விளைவு நிச்சயம் வரும். அதுவே இறைநீதி அல்லது அல்லது தெய்வம் நின்று கொல்லும் செயல்விளைவுத் தத்துவம்.

☆ ஒரு செயலை நாம் செய்கிறோம். அச்செயலுக்கான விளைவைத் தருவது இறைநிலை. விளைவு நிச்சயம் வரும்.

☆ அந்த விளைவு இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்ற அனுபோகமாக இருக்கும்.

☆ நோக்கம். திறமை, தொடர்பு கொள்ளும் பொருள்-நபர், இடம், காலம் இவற்றிற்கு ஏற்ப விளைவு இன்பமாகவோ, துன்பமாகவோ, அமைதியாகவோ, பேரின்பமாகவோ வரும்.

☆ சிறிதளவு கூட தவறாமலும் பிழை இல்லாமலும் விளைவு நிச்சயம் வரும்.

செயலின் விளைவு உடனடியாக வரலாம். ஒரு நாளில் வரலாம். ஒரு வாரம் கழித்து வரலாம். ஒரு மாதம் கழித்து வரலாம். ஓராண்டு கழித்து வரலாம். பத்து ஆண்டுகள் கழித்து வரலாம்.

அடுத்த தலைமுறைக்கு வரலாம். செய்த செயலுக்கான விளைவு நிச்சயம் வரும். இதுதான் இறைநீதி எனும் செயல் விளைவுத் தத்துவம்.

நல்ல செயல் செய்தால் நல்ல விளைவு வரும். தீய செயல் செய்தால் தீய விளைவு வரும். இதுதான் இயற்கையின் சட்டம். Law of Nature அதாவது இறைநீதி.

நாம் விளைவை அனுபோகித்துத்தான் தீர வேண்டும். அதை இன்பமாகவோ, துன்பமாகவோ. அமைதியாகவோ பேரின்பமாகவோ அனுபோகித்து அனுபவமாகப் பெற வேண்டும்.

இந்த இறைநீதி சட்டமே விதி. இந்த விதியை மதியால் அறியலாம். வெற்றி பெறலாம். மதியைப் பயன்படுத்துவோம்.

நமக்கு என்ன வேண்டும்? நல்ல விளைவா? தீய விளைவா? வேண்டியது நல்ல விளைவு. அப்படியானால் நல்ல விளைவைத் தருவது எச்செயல்? நல்ல செயல்களே நல்ல விளைவுகளைத் தருகின்றன.

எனவே, மதியைப் பயன்படுத்தி நல்ல செயல்களையே நாம் செய்வோம். தீய செயல்களை விட்டுவிடுவோம். இதுவே வேதாத்திரிய உள்ளத்தை உணர்தல் நல்லன செய்தல் - அல்லவை விடுதல் என்பதாகும்.

# 32

## கந்தபுராணமும் வேதாத்திரியமும்

**நா**ம் வாழும் இயக்க பிரபஞ்சத்தை உருவாக்குவதற்கு பன்னிரண்டு அடிப்படைத் துகள்களை நம்பி இருக்கிறது இன்றைய விஞ்ஞானம்.

ஆனால் வேதாத்திரியத்தின் தத்துவத்தால் பிரபஞ்சத்தின் கட்டுமானப் பொருட்களாக வேதான்களும். அவற்றிடையே நிகழ்கின்ற பிணைப்பு அல்லது காந்த ஆற்றலாக யோகான்களும் ஆக இருவிதப் பொருள்களே கருதப்படுகின்றன.

வேதான் மற்றும் யோகான் என்ற இருவகைத் துகள்களே போதுமென்ற வேதாத்திரியத்தின் கோட்பாட்டை இன்றைய விஞ்ஞானம் கூர்ந்து நோக்கி கவனிக்கிறது.

இறைவெளி எங்கும் இறைந்து கிடக்கின்ற வான்காந்தத்தைப் பற்றியும், அது எவ்வாறு அழுத்தம், ஒலி. ஒளி, சுவை. மணமாக தன்மாத்திரையடைகிறது என்பது பற்றியும் விரிவாக விளக்குகிறது வேதாத்திரியம்.

உயிரினங்களில் காந்தம், ஜீவகாந்தமாகவும், உயிரினத்தின் மனம் அதன் தன்மாத்திரையாக விளங்குவதையும் வேதாத்திரியம் எடுத்துரைக்கிறது.

சைவ சிந்தாந்தத்தில் காந்த ஆற்றலைப் பாசம் என்றும், விஞ்ஞானத்தில் இதை Binding Energy அல்லது பிணைப்பு ஆற்றல் என்றும் கூறுகிறோம்.

**சான்றவன் ஆய்ந்திட தக்க வாம்பொருள்**
**மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன,**
**ஆன்ற தொல்பதி- ஆருயிர்த் தொகை**
**வான்திகழ் தளைஎன வகுப்பர் அன்னவே**

- கந்தபுராணம்.

அணுவிற்குள், குறிப்பாக ஹைட்ரஜன் அணுவிற்குள் அடைப்பட்டுக் கிடக்கும் காந்த ஆற்றலுக்கான சாம்யத்தையும் அது ஒளியாக தன்மாத்திரை அடைவதற்கான சாம்யங்களையும் கண்டறிந்தார், நோபல் பரிசுபெற்ற விஞ்ஞானி நீல்ஸ் போர்.

அணுவிற்குள் அடங்கியுள்ள காந்த ஆற்றல் = 2 என்ற சாம்யத்தின்படி அபரிமிதமாக தன்மாத்திரையடைவதை பரிசோதனை மூலம் விளக்கிய ஓட்டோ ஹான் மற்றும் ஸ்ட்ராஸ்மேன் என்ற இரண்டு விஞ்ஞானிகள் உலகப் புகழ் பெற்றார்கள்.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தில் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்**

என்கிறது திருமந்திரம்.

மரம் என்று நினைத்தால் அங்கு யானை இல்லை. யானை என்ற பார்த்தால் அங்கு மரமில்லை.

அதே போன்று, இறைவெளி முதல் மனித மனம் வரையிலான இயற்கையின் பரிணாம சரித்திரத்தை மெய்ஞ் ஞானமாக பார்க்கும்போது விஞ்ஞானம் குறைகிறது.

விஞ்ஞானமாகப் பார்க்கும்போது, மெய்ஞ்ஞானம் மறைகிறது. ஆனால் வேதாத்திரி மகரிசியின் பார்வை, மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் கலந்த பிரம்ம ஞானமாக வேதாத்திரியமாக அமைந்துள்ளது.

# 33

# பதஞ்சலி யோக சூத்திரமும் வேதாத்திரியமும்

## யோகம் என்றால் என்ன?

நமது உடலுக்கும் உயிருக்கும், உயிருக்கும் மனதுக்கும், மனதுக்கும் இறைநிலைக்கும் ஒரு இணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

மேலும், தனி மனிதனுக்கும், சமூகத்துக்கும் ஒரு இணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதுதான் யோகம்.

பல்வேறு வகையான யோக முறைகளை, பல கோணங்களில் ஆய்வு செய்து, முழுமையான யோக முறைக்கு ஓர் இலக்கண வரைவு தந்தார் பதஞ்சலி முனிவர்.

இவர் 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று தெரிய வருகிறது. யோக சூத்திரம் வழங்கிய பதஞ்சலி முனிவரின் குருநாதர் ஹிரண்ய கர்ப்பர் என்ற முனிவராவார்.

இவர்தான் முதன் முதலில் யோக கைவல்யம் என்ற இலக்கண நூலை வழங்கினார். அந்நூல் நமக்குக் கிடைக்கவில்லை. காலத்தால் சிதைந்து மறைந்தும் போயிருக்கலாம்.

கோரக்கர் என்ற சித்தரால் யோக மார்த்தாண்டம் என்னும் இலக்கண நூல் வழங்கப்பட்டுள்ளது.

பதஞ்சலி முனிவர் அருளிய யோக சூத்திரம் என்பது 195 சூத்திரங்களால் ஆனது. அவை 1. பியுக பாகம். 2. சாதன பாகம், 3. கைவல்ய பாகம், 4. சமாதி பாகம் என்பனவாகும்.

பதஞ்சலி யோக சூத்திரத்துக்கு வாசஸ்பதி மிகரர், போஜர், ராமானந்த சுவாமி, பிட்சு, நாகோஸ்பட்டர், சதாசிவ பிரம்மேந்திரர் என்பவர்களால் முறையே 9,11,15,16,18,19 ஆம் நூற்றாண்டுகளில் உரை வழங்கப்பட்டுள்ளது.

மகாகவி பாரதியார் பதஞ்சலி யோக சூத்திரத்தில் சமாதி பாகத்துக்கும், பின்னாளில் தஞ்சையை சேர்ந்த குப்புசாமி ராஜி என்பவராலும், கடலங்குடி நடேச சாஸ்திரிகளாலும், நான்கு பாகத்துக்கும் தமிழில் விளக்க உரை எழுதப்பட்டுள்ளது.

யோக இலக்கணம் வகுத்துத் தந்த பதஞ்சலி முனிவர் தனது சூத்திரத்தில் யோக முழுமை நிலை அடைய, ஆறு ஆதாரங்களையும் ஐந்து அவஸ்தைகளையும் அஸ்டாங்க யோகத்தையும் கடந்து வரவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் 4 இதழ் மூலாதாரத்திலிருந்து 2 இதழ் ஆக்கினைக்கு உயிர்ச்சக்தியைக் கொண்டு வரவேண்டும் எனவும், இதற்கு தீட்சை என்றும் ஒரு குருமூலம் மேலே கொண்டு வரவேண்டும் என்று கூறியுள்ளார்.

இதனைத்தான் நாலை இரண்டாக்கி நலம் பெறுவது எக்காலம்? என்று கேட்கிறார் பத்திரகிரியார்.

ஐந்து அவஸ்தைகள் என்பது 1. சாக்ரதம், 2. சொப்னம், 3. சுழுத்தி. 4.துரியம், 5. துரியாதீதம் எனலாம். இதனை நினைவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்பு அடக்கம் என்றும் கூறுவர்.

அஸ்டாங்க யோகம் என்பது இமயம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகதாரா, தாரணை, தியானம், சமாதி என்பனவாகும்.

அருள்தந்தை, வேதாத்திரியத்தில் வகுத்துள்ள மனவளக்கலை என்னும் யோகமுறையில் ஆறு ஆதாரங்களையும் கடந்து வருகிறோம். ஐந்து அவஸ்தைகளையும் அடைகிறோம். அஸ்டாங்க யோகத்தையும் முழுமையாக கடைப்பிடிக்கின்றோம்.

ஆதலால் இந்த யோக முறை முழுமையானது. தெளிவானது. புராணமானது. பாதுகாப்பானது என்று உறுதியாகக் கூறலாம்.

அருள்தந்தை அவர்கள் யோகத்தில் குண்டலினி யோகத்தையும், தத்துவத்தில் மிக உயர்வானதும், விஞ்ஞான பூர்வமானதும் ஆன அத்வைதக் கோட்பாட்டையும் எடுத்துக் கொண்டு மிகவும் எளிமைப்படுத்தி தனது அனுபவத்தையும் இணைத்து தந்துள்ளார்கள்.

மனவளக்கலை வெறும் யோகம் மட்டும் அல்ல. அது மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வாழ்க்கைக் கலைகள், வாழ்வியல் நெறிமுறைகள், கோட்பாடுகள் என்று கூறலாம்.

# 34

# கோளறுபதிகமும் வேதாத்திரியும்

**கோ**ள்களின் இயக்கம் ஈடு இணையற்ற... மாபெரும் இறைசக்தியின் வேலைக்குத் துணை புரிபவைகளே ஆகும்.

இந்த துணை சக்திகள் பூமி- பிரபஞ்சத்திலுள்ள அனைத்து நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன, ஊர்வன போன்ற உயிர் இனங்களையும் மற்றும் சடப்பொருள்களையும், தாவரங்களையும் உண்டாக்கி அவைகளை நெறிப்படுத்துகின்றன.

பேரியக்க மண்டலம் முழுவதும் நிறைந்துள்ள இறைவெளி வான்காந்தமாகத் திகழ்கிறது.

இறைவெளியொடு கலந்த இக்காந்த அலை பஞ்சபூதங்களுக் கிடையே ஐந்துவித மாற்றங்களாகி, பஞ்ச தன்மாத்திரையாகச் செயல்புரிந்து விண் கூட்டங்களுக்கு இடையேயும். கோள்களுக்கு இடையேயும் மோதி, பிரதிபலித்து, சிதறி, ஊடுருவி தன் ஆற்றலினால் உயிரினங்களுக்கு காந்த, மின்சக்தி, இரசாயன மாற்றங்களை விளைவிக்கிறது.

இப்பிரபஞ்சத்தில் எந்தப் பொருளாக இருந்தாலும் அது அணுக்களின் கூட்டமேயாகும். அணுக்கள் பரமாணுக்களின் கூட்டமாகும்

பரமாணுக்கள், அணுக்கள் எல்லாம் தற்சுழற்சி வேகம் பெற்றுள்ளன. அணுக்கள் சுழலும்போது அவற்றிலிருந்து எப்போதும் அலைகள் தோன்றி விரிந்து கொண்டே இருக்கும்.

இறைவெளியில் இவ்வலைகள் கூடும்போது காந்தக்களமாகி பேரியக்க மண்டலம் முழுவதும் காந்தக் களமாக மாறுகின்றது.

பொருளோடு பொருள், அலையோடு அலை, அலையோடு பொருள் சேரும்போது, அழுத்தம், தாக்கம் அதிகம், குறைவு, சமம் எவ்வாறிருக்கிறதோ அதற்கேற்ப மோதுதல், பிரதிபலித்தல், சிதறுதல், ஊடுருவுதல் இரண்டிடையே ஓடிக் கொண்டிருத்தல் எனும் ஐந்து வகையான இயக்க விளைவு ஏற்படும்.

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் திருஞானசம்பந்த பெருமான் தனது கோளறு பதிகத்தில் சிவனை வேண்டும் போது....

**வேயுறு தோளி பங்கன் விடமுண்டகண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்வெள்ளி**
**சனிபாம்  பிரண்டும் உடனே**
**ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல**
**அடியாரவர்க்கு மிகவே.**

என்று நவகோள்கள் இடத்தும் அடுத்த பாடலில் நட்சத்திரங்கள் இடத்தில் இருந்தும் பாதுகாப்பும் வேண்டும் என்கிறார்.

நாளும் கோளும் நலிந்தோர்க்கு இல்லை என்பது பழமொழி. நாளும் கோளும் இறைவனுக்குக் கட்டுப்பட்டது என்னும் கருத்தில். அருணகிரிநாதர்,

**நாளென் செயும் வினைதான் என்செயும் எனை நாடிவந்த**
**கோள்என் செயும் கொடும் கூற்றுஎன் செயும்கும ரேசர்இரு**
**தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்**
**தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.**

எனக் கந்தர் அலங்காரத்தில் பாடுகிறார்.

வேதாத்திரியமோ பஞ்சபூத நவக்கிரக தவம் கற்றுத் தருகிறது. விளக்கமும் தருகின்றது.

எந்த நட்சத்திரங்கள், கோள்களிலிருந்து அலைகள் வருகிறதோ, அந்த அலையில் அந்தக் கோளின் காந்தத் தன்மை அடங்கியிருக்கும். எந்தெந்த உயிர்களின் மீது மோதுகின்றதோ அங்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தும்.

அந்த உயிர் வகைகள் ஒவ்வொன்றும் எந்தளவுக்கு கோள்களி லிருந்து வருகின்ற அலைகளை வாங்கிக் கொள்கிறது என்பது அதற்குள்ளாக அமைந்திருக்கும் அறிவாட்சித்தர அமைப்பை பொறுத்தது.

கோள்களிலிருந்து வருகின்ற காந்த அலைகள் உடம்பின் சில பகுதிகளில் அதிக ஆதிக்கம் செலுத்துகின்றன.

சூரியனிலிருந்து வருகின்ற அலைகள் எலும்புகளோடும், புதன் தோல் மீதும், சுக்கிரன் வித்து ஆற்றலோடும். சந்திரன் இரத்தத் தோடும். செவ்வாய் எலும்புக்குள் அமைந்த மஜ்ஜையோடும், குரு மூளை செல்களோடும், சனி நரம்புகளோடும், ராகு-கேது மனதோடும் தொடர்பு கொள்கின்றன.

யுரேனஸ், நெப்டியுன். புளோட்டோ போன்ற கோள்கள் சோதிட சாஸ்திரம் கணக்கிடப்பட்ட காலத்தில் கண்டுபிடிக்கப் படவில்லை.

மேலும் அவை வெகு தொலைவில் இருப்பதால் அதன் பாதிப்பு குறைவாக இருக்கும் என்ற யூகத்தில் இக்காலத்திலும் இவற்றை முக்கியமாக எடுத்துக் கொள்வதில்லை.

பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே தியானித்து அவற்றிலிருந்து காப்புப் பெறவும், நவகோள்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகவும், பிரபஞ்சம் முழுவதையும் மனதை விரித்து தியானித்து உயிர்க்கலப்பு பெறவும் பஞ்சபூத நவகிரக தவம் இயற்றுவது வேதாத்திரியத்தின் சிறப்பாகும்.

கோள்களையே நினைந்து அவற்றுடன் உயிர்க் கலப்பு பெறுங்கள் எல்லாம் நல்லதாய் முடியும்.

எண்ணத்திற்கே வலு அதிகம் என்கிறார் வேதாத்திரியார். கோள்களோடு நட்பு பாராட்டச் சொல்கிறார். இந்த எண்ணம் கோள்களிலிருந்து வரும் காந்த அலைகள் நமக்கு நன்மை செய்யுமாறு அமைந்து விடும்.

**உண்ணும் உணவு உடல் மட்டும் பாயும்**
**எண்ணும் எண்ணம் எங்கும் பாயும்.**

என்கிற வேதாத்திரியக் கருத்தோடு கோள்களை நம் வசப்படுத்தி வளமோடு வாழ்வோம்.

**‘‘எப்பொருளை எச்செயலை எக்குணத்தை எவ்வுயிரை ஒருவர் அடிக்கடி நினைத்தால்,**

**அப்பொருளின் தன்மையாய் நினைப்போர் ஆற்றல் அறிவினிலும் உடலினிலும் மாற்றங்காணும்.’’**

இப்பெருமை இயல்பூக்க நியதியாகும் என்கிறது வேதாத்திரியம்.

# 35

# நாலாயிரத் திவ்ய பிரபந்தமும் வேதாத்திரியமும்

அருட்தந்தை சொல்கிறார்...............

தவத்தில் முழுமையான தவம்தான் துரியாதீத தவம்.. துரியாதீத தவம் தமிழ்நாட்டில் சித்தர்களும் யாருக்கும் நேரடியாகச் சொல்லவேயில்லை.

ஒரு பெரியார் எனக்கு துரியம் வரை கற்றுக் கொடுத்தார். ஆனால் எனக்கு நிறைவே இல்லாமலிருந்தது நீண்ட நாட்களாக.

ஒரு சமயம் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஒரு பாடலை நான் பார்த்தேன்.

**நன்றாய் ஞானம் கடந்து போய்**
**நல்லிந்திரிய மெலாம் ஈர்த்து**
**ஒன்றாய்க்கிடந்த அரும் பெரும் பாழ்**
**உவப்பிலதனை உணர்ந்துணர்ந்து**

**சென்றாங்கின்ப துன்பங்கள்**
**செற்றுக் களைந்த பசையற்றால்**
**அன்றே அப்போதே வீடு அதுவே**
**வீடுபேறாமே!**

அரும்பெரும் பாழ்-அது ஆதி. அனாதி. எல்லாவற்றிற்கும் ஆதியாக இருக்கிறது. அதற்கு ஒரு ஆதியில்லை என்பதாக அனாதி என்ற ஒரு வார்த்தை வருகிறது. அதுதான் இறைவெளி.

இறைவெளி விண்ணாகி அவற்றின் தொடராக பஞ்ச பூதங்களாகி அவற்றிற்கு இடையில் நிறைந்த காந்த தன்மாற்றங்கள், அழுத்தம் முதலான தன்மாத்திரைகளாகி பேரியக்க மண்டல காட்சியாக உள்ளது.

விண்ணாக மாறாத போது ஆதிநிலை எவ்வாறு இருந்திருக்கும்? சுத்தஇருட்டு. இந்த இருட்டு என்பதை தமிழில் கருப்பன் என்கிறோம். வடநூலார் கிருஷ்ணம் என்கிறார்கள். விஞ்ஞானிகள் Static என்று கூறுகிறார்கள். பாழ் என்றால் சுத்தவெளி. இயக்கம் கழிந்த நிலை இருப்பு. (பாழ் + தளம் = பாதாளம்).

வைணவப் பெரியார் பாடிய அப்பாடலை படித்து நானாகப் பழகிப் பழகி அந்த துரியாதீத நிலை பழகி அதனால் கண்ட அனுபவமும் பெற்ற மகிழ்ச்சியும் மன நிறைவும் தான் மற்றவர்களுக்கு நேரடியாக இப்பொழுது சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.

**ஒரு தத்துவமோ விஞ்ஞானமோ யார் மூலமாக வெளிவந்தாலும் அது இறைவனுடைய அருள்.**

**உயிரினங்களுக்குப் போய்ச் சேருவதற்காக அதற்கு ஏற்றபடி பக்குவமான மூளையின் மூலமாக உருவத்தின் மூலமாக சமுதாயத்திற்கு அளிப்பதுதான் அது.**

**அப்பொழுது சமுதாயத்திற்கு அத்தகைய பலன் சொந்தம். யார் மூலமானாலும் யார் நினைவிலிருந்து வந்தாலும் எல்லோருக்கும் சொந்தம்.**

அந்த முறையில் நீங்கள் எல்லோரும் உணர்ந்து, இந்த தத்துவத்தின் பயனைப் பெறலாம்.

நான் இவ்வளவு காலம் எடுத்துக் கொண்டதுபோல் நீங்களும் செய்யத் தேவையில்லை. நேரடியாக இருந்து காண்பித்து விட்ட பிறகு நீங்கள் ஒன்றும் அதிகமான சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியதே இல்லை.

ஆனால் மற்றதைப் போல் இதனை லேசாக நினைத்து விட்டால் அத்துரியாதீதம் மனதில் வராது. பழகிப் பழகி சிந்தித்து சிந்தித்து நமதாக்கிக் கொள்ள வேண்டும்.

# 36

# பஜகோவிந்தமும் வேதாத்திரியமும்

**வா**ழ்க்கையை நமக்கு அளிக்கப்பட்ட பாவமாக ஏன் தண்டனையாகக் கருதினார் பஜகோவிந்தத்தில் ஆதிசங்கரர்.

எத்தனை முறைதான் பிறப்பது. எத்தனை முறைதான் இறப்பது என்று சலிப்படைந்தார் ஆதிசங்கரர்.

மனித வாழ்க்கையை முடித்துக் கொண்டு உனதடி சேர கிருபையும் கருணையும் வேண்டும் என்று இறைவனிடம் கையேந்தினார் ஆதிசங்கரர்.

**புனரபி ஜனனம் புனரபி மரணம்**
**புனரபி ஜனனம் ஜனனம் சயனீ**
**இஹ சம்சாரே பஹீதுஸ்தாரே**
**க்ருபயாபாரே பாஹி முராரே**

பஜகோவிந்தத்தில் புலம்பினார் ஆதிசங்கரர். ஆனால் ஆண்டாளின் அணுகுமுறை வேறுமாதிரியாக இருந்தது.

ஆண்டாள் ஆதிசங்கரரிடமிருந்து வித்தியாசப்படுகிறார். ஏழு பிறவிகளிலும் வாழ விரும்புவதாகவும் ஆனால் யாருக்காக வாழ்வது? உனக்காகவே வாழ்வேன். ஆம். இறைக்காகவே வாழ்வேன். தனக்காக அல்ல என்பது ஆண்டாளின் அருள்மொழி.

**எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்**
**உந்தனோடு உற்றோமே யாவோம்**
**உமக்கே நாம் ஆட்கொள்வோம்**
**மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்**

ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும். இதுவே என் பிறவியின் நோக்கமாக அமைய வேண்டும் என்று இறைவனிடம் சொல்லும் அளவுக்கு வள்ளலாரின் தெளிவைப் பார்க்கிறோம்.

சிந்தனையும் செயலும் சேர்ந்ததே மனிதன் என்பார்கள். சிந்தைக்கு வேண்டியது இறைநிலை பற்றிய தெளிவான அறிவு. செயலுக்கு வேண்டியது மானுடத்தை நோக்கிய அன்பும், கருணையும்.

இதனை வலியுறுத்தும் பொருட்டே வள்ளலாரின் தாரக மந்திரம் அமைந்திருந்தது.

சிந்தை விண்ணிலிருக்க வேண்டும். செயல் மண்ணிலிருக்க வேண்டும். விண்ணையும் மண்ணையும் இணைக்கின்ற பாலமாக மனிதனிருக்க வேண்டும்.

இதைச் சுட்டிக்காட்டவே அட மண்ணில் தெரியுது வானம். அது நம் வசப்படலாகாதோ என்று பாடினார் பாரதியார்.

ஆனால் மனித நேயத்தை வாழ்க்கைத் தத்துவத்தின் அடித்தளமாக அமைக்கிறது வேதாத்திரியம்.

**''நீதிநெறியுணர் மாந்தராகி வாழும்**
**நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்''**

**''எத்தகைய உயிர்கட்கும் இன்பநிலை காத்து**
**இறையுணர்வில் இணைந்து அறம் ஆற்றி வாழும் பேறு''**

என்னும் வேதாத்திரிய வரிகள் நமக்கு என்ன உணர்த்துகிறது?

சிந்தைக்கு வேண்டியது இறையுணர்வு. செயலுக்கு வேண்டியது எத்தகைய உயிர்கட்கும் நாம் தரும் பாதுகாப்பும் (அன்பும்) பராமரிப்பும் (கருணையும்) இணைந்த அறநெறி.

இதுதான் வேதாத்திரிய வாழ்க்கை நெறி. இறையுணர்வும் அறநெறியும் வேதாத்திரியத்தின் இரு கண்கள்.

ஆதிசங்கரர் பஜகோவிந்தத்தில் புலம்பியதற்கு, வேதாத்திரியம் மரணமிலாப் பெருவாழ்விற்கு விளக்கமாக வழி முறைகளை செயல் முறைகளாக்கியுள்ளது.

# 37

# உபநிஷத்துக்களும் வேதாத்திரியமும்

**பா**ரதநாட்டு ரிஷிகளின் ஞானமெல்லாம், உபநிஷத் வடிவாக விளங்குகிறது. பாரத சமுதாயமே உபநிஷத்தை வேராகவும், அதன் அனுபவத்தைக் கனியாகவும் கொண்டது.

சஞ்சலமற்ற நிம்மதியான ஏகாந்த தியான சமாதியில், ஜீவனில் சிவமணம் பூத்த சித்த நிலையில், மகானுபாவர்களான பரமானந்த முனிவர்களின் உள்ளத்தினின்று பொங்கி எழுந்த ஞான கங்கையே உபநிஷத்து.

இந்தியா என்றால் - உபநிஷத் நாடு என்று உலகறியும். உலகமெல்லாம் பல மொழிகளில் பரவியுள்ளது. நமது நாட்டின் பெருமை எல்லாம் ஞான கங்கையாகப் பரவுகிறது.

ஜெர்மன் ஞானியான ஷோபனஹார், உபநிஷத்தைப் பாராயணம் பண்ணிப் பயன் பெற்றார். அவர் உலகில் உபநிஷத்தைப் போன்ற பயனுள்ள நூலில்லை, அதுவே என் வாழ்வின் ஆறுதல் என்றார்.

எமர்ஸன் உபநிஷத் ஞானத்தை அள்ளிப் பருகினார். மாக்ஸ்முல்லர் உபநிஷத்தே உள்ளறிவின் சிகரம். அதைக் கற்பதே என்னுயிர்க்கின்பம் என்றார்.

உபநிஷத்துக்களில் கடோபநிஷத்தும் ஒன்றாகும். அதில்

ஆத்மா எங்கேயுள்ளது? எப்படியுள்ளது?

ஆத்மா அணுவுக்கும் அணுவாய், மகத்திற்கும் மகத்தாய், உயிர்களின் இருதய குகையில் உள்ளது.

**அணோ ரணியான் மஹதோ மஹியான்**
**ஆத்மா அஸ்ய ஐந்தோ நிஹிதோ குஹாயாம்**

அதை யார். எப்படி அடைவார்கள்?

ஆசையற்றவர்கள், சோகத்தினின்றும் விடுபட்டு அந்தக் கரண சுத்தியாலும், சாந்தத்தாலும் ஆத்மாவின் மகிமையைக் காண்கிறார்கள்.

ஆத்மன் சும்மாயிருந்தாலும் நெடுந்தூரம் செல்கிறான். படுத்திருந்தாலும் எங்கும் செல்கிறான். விழிப்பில் இன்புற்றும், சமாதியில் உலகின்பத்தை உணராமலும் இருக்கும் என்னைத் தவிர அந்த ஜோதிப்பொருளை யாரே அறிவார்?

அந்தரங்கத் தத்துவமான ஆத்மாவை அவரவர் அந்தரங்க சுத்தியினாலேதான் அறியமுடியும். அது பிறரால் சுட்டிக் காட்டும் பொருளன்று. ஏன்?

அது உடலற்றது. அழியும் உடல்களில் எல்லாம் அதுவே உயிருக்குயிராயுள்ளது. அது எங்கும் நிறைந்த பரமாத்மா. அதை அறிந்த தீரன் விசனிப்பதில்லை.

தீச்செயலார், கொடியர், அமைதியற்றவர்கள். உள்ளடக்க மற்றவர்கள், தியானமற்றவர்கள், மனச் சமாதானமற்றவர்கள். அறிவினாலும் இதை அடைய முடியாது. இத்தீமையற்ற நல்லோர், உபசாந்தர், அடக்கமானவர், தியான சீலர்களே ஆத்மாவை அடைவார்கள்.

வேதாத்திரியத்தில் ஆத்மாவை எளிமையாக அடையாளம் காட்டுகிறார் வேதாத்திரி மகரிசி.

ஆத்மா என்ற சொல்லுக்கு ஒரு புதிய விஞ்ஞான விளக்கத்தை வேதாத்திரியம் தந்திருப்பது நமது சிந்தனைக்கு உரியதாக இருக்கிறது.

அனைத்துக்கும் ஆதியாக ஆதி மூலமாக இருக்கும் மெய்ப்பொருளை (வேதாந்தங்களும், உபநிடதங்களும்) ஆத்மா என்று கூறுகின்றன.

ஆனால், வேதாத்திரியம் ஒவ்வொரு ஜீவனிலும் உள்ள கருமையத்தை ஆத்மா ஜீவ ஆன்மா, சிற்றறிவு என்கிறது.

ஆத்மாவிலுள்ள பதிவுகள் மூளையின் வழியாக புலன்களை இயக்கும் போது அதுவே மனமாகிறது. மனம் என்பது ஓர் அலைத் தொகுப்பே என்பது வேதாத்திரியம் இவ்வுலகத்திற்குத் தருகிற மகத்தான ஞானமாகும்.

ஆதியில் அறிவாக இருப்பது அசைந்து அலையாகி, அவ்வலையே ஜீவனில் மனமாக வருவதால் மனமென்பது ஆதியின் மறுபக்கமே என்பது வேதாத்திரியம் தரும் ஞானம்.

"The other end of the mind is

Almighty the God" என்பது வேதாத்திரியம்.

உடலில் இயங்கிக் கொண்டிருக்கிற ஆத்ம அலைகள், உடலை விட்டபின் சாலோகம், சாமீப்யம், சாரூப்யம், சாயுஜ்யம் என்ற நிலைகளை அடைகிறது என்பதைத் தெளிவுறுத்துகிறது வேதாத்திரியம்.

முற்பிறவியில் நாம் யார்? நமது மறுபிறவி என்பதென்ன? வாசனைகள் எப்படி உடலுக்கு உடல் தாவுகின்றன என்பன போன்ற தத்துவ உச்சங்கள் வேதாத்திரியத்தின் உள்ளுணர்வில் விளைந்த முத்துக்களாகும்.

வேதாந்த, சித்தாந்த தத்துவக் கருத்துக்களுக்கு புதிய விளக்கங்களைத் தருகிற வேதாத்திரியம் வாழ்க்கையின் சாரத்தையும், வாழ்வாங்கு வாழ்கிற வழி முறைகளையும் தந்து கொண்டே இருக்கிறது.

# 38

# பரிபாடலும் வேதாத்திரியமும்

**ச**ங்க இலக்கியத்தில் அமைந்துள்ள எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடல் சிறப்பான இடத்தை வகிக்கிறது.

பரிபாடலில் மொத்தம் 70 பாடல்கள். ஆனால் 12 பாடல்களே நமக்குக் கிடைத்துள்ளன.

நம் முன்னோர்கள் இறைவனை நிலம், நீர். நெருப்பு, காற்று, ஆகாயம் எனப் பஞ்சபூதங்களாகக் கொண்டு வழிபட்டனர்.

முன்னோர்களின் வழிபாட்டில் இயற்கையையும், இறைமையையும் பிரித்துணர முடியாத நிலையே இருந்தது. இறைவன் இன்ன உருவம், இன்ன வடிவம், இன்ன ஆற்றல், இன்ன அருட்கருணை என வரையறுத்துக் கூற முடியாதவாறு எல்லையற்ற அருட்பேராற்றலாக அமைந்திருப்பதை காணமுடிகிறது. இவ்விடத்தில்,

**விறகினில் தீயினன் பாலிற் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்**

என்னும் அப்பர் இறை இலக்கணத்தைக் குறிப்பிட்டுள்ளது சாலப் பொருந்தும்.

**தீயுனுள் தெறல்நீ பூவினுள் நாற்றம்நீ**
**கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மைநீ**
**அறத்தினுள் அன்புநீ மறத்தினுள் மைந்துநீ**
**வேதத்து மறைநீ திங்களுள் அளியும் நீ**
**அனைத்தும் நீ அனைத்திலும் பொருளும் நீ ஆதலின்**
**உறையும் உறைவதும் இல்லையே உண்மையும்**
**மறவியில் சிறப்பின் மாயமா ரனையை**

என்பது பரிபாடல் தரும் இறைவனுக்குரிய அடையாளம். கண்ணால் காணமுடியாத ஆனால் கருத்தால் உணரக்கூடிய மிகப்பெரிய ஆற்றல் வாய்ந்த பரம்பொருளே இறைவன் என்று கொள்ளலாம்.

அதனால்தான் வேதாத்திரியம் அருட்பேராற்றல் என்று இறைவனுக்குரிய அடையாளமாகக் காட்டுகிறது.

☆ அனைத்தியக்க அருட்பேராற்றலாக உள்ளது சுத்தவெளி. அது பூரணம், பேராற்றல், பேரறிவு எனும் முத்தன்மைகளை அடக்கமாகப் பெற்று இருப்பு நிலையாக உள்ளது. இந்த இறை வெளியானது தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் பேராற்றலாக விளங்குகிறது.

☆ இறைநிலை இல்லாத இடமோ, பொருளோ, இயக்கமோ, விளைவோ பிரபஞ்சத்தில் இல்லை. பொருளாக, இயக்கமாக, விளைவாக இருப்பது வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் ஆகிய 4 தரங்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட சுத்தவெளியேயாகும். அதுவே அருட்பேராற்றல்.

☆ அருட்பேராற்றல் இரவும் பகலும் எல்லா இடங்களிலும் எல்லாத் தொழில்களிலும் உறுதுணையாகவும் பாதுகாப்பாகவும் வழி நடத்தியாகவும் அமையட்டும் எனும் அருட்காப்பை வேண்டும் போதெல்லாம் நினைத்துக் கொள்ளுங்கள். மனத்தூய்மை, வினைத்தூய்மை இரண்டும் சித்தியாகும். வாழ்வு வளம், நிறைவு, அமைதி பெறும். இன்பம் விரிந்து கொண்டேயிருக்கும்.

# 39

## ஐன்ஸ்டைனும் வேதாத்திரியமும்

**வே**தாத்திரியம் நமக்கு ஆதிசங்கரரை மட்டுமல்ல... ஆல்பர்ட் ஐன்ஸ்டீனையும் அடையாளம் காட்டுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற விஞ்ஞான மேதை ஐன்ஸ்டைன். இந்த அணுயுகத்தின் தந்தைதான் சிந்தனையாளர் ஐன்ஸ்டைன்.

ஜெர்மனியின் யூத இனத்தில் பிறந்த ஐன்ஸ்டைன் அணு முதல் அண்டம்வரை ஆராய்ந்து அற்புதக் கோட்பாடுகளை வகுத்தவர். அவர் விஞ்ஞானியாக மட்டுமல்ல. மெய்ஞ்ஞானி யாகவும் மனிதப் பண்பாளராகவும் ஒளிவீசினார்.

பிரபஞ்சம் பற்றிய முன்னைய விஞ்ஞானிகளின் கருத்துக் களைத் தகர்த்தெறியும் முறையில் முற்றிலும் புரட்சிகரமான கொள்கைகளைக் கண்டறிந்தவர்.

அறிவியல் மேதையான ஆல்பர்ட் ஐன்ஸ்டைனுக்கு 1922ம் ஆண்டு நோபல் பரிசு கிடைத்தது.

ஐன்ஸ்டைனின் ஆராய்ச்சிக் கொள்கையின் அடிப்படையில் தான் அகில உலகத்தையும் அச்சுறுத்தும் அணுகுண்டு பிறந்தது! ஐன்ஸ்டைன் தோன்றியிராவிடில் அணுகுண்டு பிறந்திருக்குமா என்பது ஐயமே.

அறிவியல் உலகத்தினரையும் அதிசயிக்கச் செய்த அரும் பெரும் சிந்தாந்தங்களை ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடித்து வெளியிட்டவர். எளிமையே உருவமானவர். கருணையுள்ளம் வாய்ந்தவர்.

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, தனது விஞ்ஞான மாளிகையை அமைத்த சர். ஐசக் நியூட்டன், வெளி, காலம். பொருள், மற்றும் ஆற்றல் எனும் நான்கு அம்சங்களை இப்பிர பஞ்சத்தின் மூலப் பொருட்களாகக் கருதினார்.

அத்வைதக் கொள்கைக்கு முற்றிலும் மாறாக அமைந்த நியூட்டனின் சித்தாந்தத் தத்துவம், கால வெள்ளத்தால் பெரும் மாற்றமடைந்தது. தெளிவடைந்தது.

தத்துவத்தை அவ்வளவாக விளக்க முடியாத காலத்தில், மூலம் ஒன்றுதான். அதுவே சுத்தவெளி என்று நியூட்டன் உணர்ந் திருக்க வாய்ப்பில்லை.

அப்படி உணர்ந்திராத நியூட்டன் தனது சித்தாந்தத்தின் ஆரம்பமாக இந்த பிரபஞ்சத்தை, நான்கு நான்கு மூலங்களின் கூட்டாகப் பார்க்கிறேன் என்று கூறியது தத்துவத்தில் ஏற்க முடியாததாக அமைந்தது. இந்தச் சறுக்கலின் காரணமாக அவருக்குப்பின் 200 ஆண்டுகள் வீணாகக் கழிந்தது.

நியூட்டனுக்குப் பின் வந்த மாமேதைகளில் ஐன்ஸ்டைன் குறிப்பிடத்தக்கவர். நியூட்டனின் கூற்றை உணர்ந்து அதை மேம் படுத்த முயற்சி செய்தார். ஓரளவு வெற்றியும் கண்டார்.

நியூட்டனுக்குப் பின்பு, சுமார் 250 ஆண்டுகளுக்குப் பின்னால் வந்த ஐன்ஸ்டைன், நியூட்டனின் நான்கு அம்சங்களை இரண்டு இரண்டாக பிரித்தார்.

அதாவது (வெளி-காலம்) என்றும். (பொருள் - சக்தி) என்றும் இரண்டு இரண்டாக முடிச்சுப் போட்டு, நான்கு என்ற கணக்கை இரண்டாக்கினார். அத்வைதத்தை நோக்கி விஞ்ஞானத்தை நகர்த்தினார் ஐன்ஸ்டைன். வெளியே காலமாகவும் உள்ளது, எனவே இரண்டும் ஒன்றே என்றும் பொருளே சக்தியாகவும் உள்ளதால் இரண்டும் ஒன்றே என்றும் பிரபஞ்சப் பொருட்களை இரண்டாக்கினார்.

ஈர்ப்பு விசைக்கான காரணம் பொருள்கள் அல்ல. அதனைச் சூழ்ந்துள்ள வெளிதான் காரணம் என்று வெளியின் சிறப்பை உணர்ந்தார் ஐன்ஸ்டைன்.

ஆனால் அந்த வெளிதான் இப்பிரபஞ்சத்தின் ஆதியாக இறைநிலை (சர்வ வல்லமை பெற்றது) - பிரம்மம் - அல்லாஹ் - பிதா - சிவம் என்பதை உணரத் தவறிவிட்டார்.

தன்னிறுக்க சூழந்தழுத்தத்தால் துகள்கள் ஒன்றோடொன்று ஈர்க்கப்பட்டு, ஈர்ப்புக்கான மூலக்காரணமாக சுத்தவெளியிருப்பதால், Gravity is absolute space என்கிறது வேதாத்திரியம்.

சுத்தவெளியின் பேரறிவு எல்லாப் பொருளிலும் ஊடுருவி, அந்தப் பொருள்களின் ஒழுங்காற்றலாக பரிணமித்து அவைகளில் செயல்பட்டுக் கொண்டிருப்பதால், அந்தப் பேரறிவை “The Mind of god” என்றழைக்கிறது வேதாத்திரியம். ஆக Mind of God” என்பதும் “Gravity” என்பதும் சுத்தவெளியே.

வேதாத்திரியத்தின் தத்துவத்தை, நாம் பாரதியார் மூலம் காண்கிறோம். உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் தானாகும் வெள்ள மென்று ஒன்று உண்டாம். அதைத் தெய்வமென்பர் வேதியரே என்றார் பாரதியார்.

வேதாத்திரியத்தின் தத்துவத்தில் பிரபஞ்சம் ஆரம்பமானது ஒரு புள்ளியின் வெடிப்பில் அல்ல, மாறாக எங்கும் நீக்கமற நிறைந் திருந்த சுத்தவெளியின் மலர்ச்சிதான் பிரபஞ்சத்தின் தொடக்கம்.

இன்றைய பெருவெடிப்புக் கொள்கையில், உயிரினத்தின் தோற்றத்தைப் பற்றி எந்த ஒரு கோட்பாடும் இல்லை. ஆனால் வேதாத்திரியம் தருகிறது விஞ்ஞானத்தில் பரமாணுக்களின் சுற்றுச் சூழல் ஓட்டமே உயிராக வருகிற பேருண்மை பேசப்படுகிறது.

இன்றைய விஞ்ஞானத்தில், டார்வின் பரிணாமக் கொள்கை ஓரறிவு உயிரினத்தில் ஆரம்பமாகி மனிதன் வரை பரிணாமத் தோற்றத்தை விளக்குகிறது. ஆனால் வேதாத்திரிய தத்துவமோ, சுத்த வெளியில் பரிணாமத்தை தொடங்கி இன்றைய மனிதன் வரை வருகிறது.

அண்டத்தின் பரிணாமத்தையும் ஆருயிரின் பரிணாமத்தையும் ஒரே நேர்கோட்டில் வைத்த ஒரு மாபெரும் ஞானமே வேதாத்திரிய விஞ்ஞான ஆன்மீகம்.

தத்துவத்தையும் விஞ்ஞானத்தையும் இணைப்பது அவ்வளவு எளிதல்ல. தத்துவத்தை விஞ்ஞானப்பூர்வமாக உணரும் துணிவும், விஞ்ஞானத்தைத் தத்துவார்த்தமாக அலசி ஆராய்கிற அறிவுத் திறனும் கொண்ட ஒரு மகான்தான் இந்த இணைப்பைத் தர முடியும்.

அதைத் தருபவரே வேதாத்திரி மகரிசி.

# 40

# மகாபாரதமும் வேதாத்திரியமும்

இவ்வையகம் அறிந்துள்ள இதிகாசங்களுள் மிகப் பெரியது மகாபாரதம். மகாபாரதம் என்னும் பெரிய நூல் பல நூற்றாண்டு களாக மக்கள் உள்ளத்தில் சீரிய இடம் பெற்று வந்துள்ளது

மகாபாரதத்திலுள்ள பாத்திரங்களையும் கோட்பாடு களையும் சான்றுகளாக எடுத்துக் காட்டுவது கற்றவர்களுடைய செயலாக இருந்து வருகிறது.

சான்றோர்களும் கவிஞர்களும் கதாசிரியர்களும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மகாபாரதத்திலிருந்து மேற்கோள் களைத் தாராளமாகக் கையாண்டு வந்திருக்கின்றனர்.

மகாபாரதத்தில் வரும் பாத்திரங்களே குணநலன்களை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டவையாகும்.

| | | |
|---|---|---|
| **கர்ணன்** | - | **நட்பு** |
| **குந்தி** | - | **அறிவு** |
| **திரௌபதி** | - | **மனம்** |
| **பஞ்சபாண்டவர்கள்** | - | **ஐம்புலன்கள்** |

**கர்ணன்** - **செஞ்சோற்றுக்கடன்**

**பீஷ்மர், துரோணர்** - **மனச்சாட்சி**

**துரியோதனன், சகுனி** - **வஞ்சம்**

**காம குரோத, லோப, மத, மாச்சரியம்** என்ற ஆறு குணங்கள்.

திரௌபதி அவமானப்படுத்தப்பட்ட போது அறிவு (குந்தி) அங்கே இல்லை. ஐம்புலன்களின் (பாண்டவர்கள்) வயப்பட்டு சீரழிகின்ற மனதைக் காக்க மனச்சாட்சியினால் முடியவில்லை.

(பீஷ்மர், துரோணர்) புலன்கள் தன்னைக் காக்க முடியாததை நினைத்து மனம் (திரௌபதி) கண்ணீர் சொரிந்து நிற்கிறது. இறைவனே கதி என்று சரணடைந்த போது விடிவு பிறக்கிறது.

தீய குணங்கள் வலுவிழந்து போகின்றன. ஐம்புலன்களும் சீறி எழுகின்றன. தீய குணங்களை வேரறுப்பதாக சபதம் செய்கின்றன. மனமும், வைராக்கியமும் கொண்டு சபதம் செய்கிறது. புலன்கள் ஒடுங்கி தவம் செய்து பலம் பெறுகின்றன. வெற்றி பெறுகின்றன.

**ஐம்புலன்களுக்கும், ஆறு குணங்களுக்கும் நடத்திய யுத்தம் தான் பாண்டவ-கௌரவர்களின் யுத்தம் ஆகும்.**

தவமும், தற்சோதனையும் தீய குணங்களை அழிக்க உறுதுணையாக நின்றன.

ஐம்புலன்களை அடக்கி ஆள்வதற்கும். ஆறுகுண சீரமைப் பிற்கும் பயிற்சியுடன் வழிகாட்டுகிறது வேதாத்திரியம்.

வேரறுந்த மரத்தினைப் போன்றவர்கள் ஐம்புலன்களில் கட்டுப்பட்டவர்கள் என்ற வேதாத்திரியம் அதனை வென்றிட பயிற்சிமுறையினை வகுத்துள்ளது.

**ஒன்றி புள்ளியாய் ஒடுங்கி நீ இரு.**
**அன்றி விரிந்திடில் ஆராய்ச்சியோடிரு.**
**நின்றிடு அகண்டாகார நிலைதனில்**
**வென்றிடுவாய் புலன் ஐந்தையும் வெற்றியே.**

-(ஞா.க.)

தான், தனது என்ற தன்முனைப்பின் காரணமாக, மனிதனுக்கு ஆறு தீய குணங்கள் பிறக்கின்றன. இக்குணங்கள் சந்தர்ப்பங்களை ஒட்டிச் செயல்களாக விளைகின்றன.

ஆசையின் மறுமலர்ச்சியே ஆறு தீயகுணங்கள்.

இத்தகைய ஆறு தீய குணங்களால் ஐந்து பழிச் செயல்களை மனிதன் செய்கிறான். அவை 1. பொய், 2. களவு, 3. கொலை, 4. சூது, 5. கற்பழிவு என்பவை.

இவற்றால் தனக்கும் பிறர்க்கும் துன்பங்களே விளைகின்றன. துன்பம் விளைவிக்கும் செயல்களைப் பாவம் என்றும் பழிச் செயல்கள் என்றும் சொல்கிறோம்.

ஆறு தீய குணங்களை ஆறு நற்குணங்களாக மாற்ற வேண்டும். அந்த மாற்றும் வித்தையினையும் கற்றுத்தருகிறது வேதாத்திரியம்.

☆ பேராசையை - நிறைமனமாகவும்

☆ சினத்தை - சகிப்புத் தன்மையாகவும்.

☆ கடும்பற்றினை - ஈகையாகவும்

☆ முறையற்ற பால் கவர்ச்சியை - கற்புநெறியாகவும்

☆ உயர்வுதாழ்வு
மனப்பான்மையை - நேர்நிறை உணர்வாகவும்

☆ வஞ்சத்தை - மன்னிப்பாகவும் மாற்றுவதே அறுகுண சீரமைப்பாகும்.

**அறிவதனைக் கருவினிலே இணைத்து தவம் ஆற்ற**
**ஐம்புலன்கள் அமைதி பெறும் ஆறுகுணமும் சீராகும்**
**தேவையால் அறுகுணம் தோன்றிடும் மிகுந்திடும்**
**தேவையும் பொருட்களும் அறிவும் சமம் கொள்வோம்.**

(1361)

இவ்வாறு குணநலம் பெற வேதாத்திரியத்தின் அகத் தாய்வில் ஐந்து பயிற்சிகள் உள்ளன.

1. எண்ணம் ஆராய்தல். 2. ஆசை சீரமைத்தல். 3. சினம் தவிர்த்தல். 4. கவலை ஒழித்தல். 5. நான் யார்? என்ற தன்னிலை அறிதல்

மகாபாரதத்தில் கதையாகச் சொன்னதை பாடமாக்கி சாதனையாக்கி பாமரனுக்கும் கொண்டு சென்றது வேதாத்திரியம்.

# 41

# மகாத்மா காந்தியும் வேதாத்திரியமும்

உலக சமாதானம், ஒருலக ஆட்சி ஏற்பட மகாத்மா காந்தியடிகளும் வேதாத்திரி மகரிசியும் தங்களது கருத்துக்கள் மூலம் -உலகமக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், அன்புடன் வாழ நல்லதொரு திட்டங்களைத் தந்துள்ளார்கள்.

அருட்தந்தை உலகசமாதானத்திற்கென்று ஒரு நூலினையே தந்துள்ளார்கள். 200 தலைப்புகளில் 323 பக்கங்களில் தனது திட்டங்களைப் பதிவு செய்துள்ளார்கள். ஐக்கியநாடு சபைகளிலும் தனது திட்டத்தை பதிவு செய்துள்ளார்கள்.

**காந்தியடிகளின் ஒருலக ஆட்சி பற்றிய கருத்துக்கள்.**

☆ ஒளிவு மறைவின்மை, உண்மையாயிருத்தல், தைரியம், இணக்கம். நட்புறவு, தன்னிலை, தியாகம் ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்வதன் மூலமே உலக ஒற்றுமை அடைய முடியும்.

☆ வெவ்வேறு நாடுகளைச் சார்ந்த மக்கள் தம்மை தாமே ஒருங்கமைத்துக் கொண்டு ஒரே மனிதன் போல் ஒன்றுபட்டு செயல்பட இயலும் போதுதான் ஓருலக நோக்கு சாத்தியமாகும்.

☆ இவ்வுலகில் அனைவரும் விரும்புவது முழுமையான சுதந்திரத்துடன் தன்னந்தனியே இயங்கி ஒன்றோடொன்று போரிட்டுக் கொள்ளாமல் ஒன்றையொன்று நட்புறவுடன் கூட்டுறவு நாடுகளாக அமையப்பெற வேண்டும். நாம் சுதந்திரமாக இருப்பதை விட வையகம் முழுவதோடும் ஒட்டுறவாட ஆயத்தமாக இருக்க வேண்டும்.

☆ நாட்டு எல்லைக் கோடுகள் எதையும் கடவுள் வரைய வில்லை. அகிம்சையை அடித்தளமாகக் கொண்ட உலக சமஷ்டியை உருவாக்க முடியும். உலக விவகாரங்களில் வன்முறை முழுமையாகக் கைவிடப்பட வேண்டும்.

☆ குழந்தைகள் அனைவரையும் எளிமையும், உண்மையான சமயப் பற்றும், தைரியமும் கொண்ட ஆண் பெண்களாகவும் உருவாகும்படி வளர்க்க வேண்டும்.

☆ ஒவ்வொரு நாடும் வெறொரு நாட்டைச் சுரண்டி ஆதாயம் தேடவும், பிறநாட்டின் அழிவின் மீது தன்னை உயர்த்திக் கொள்ளவும், அவற்றின் துன்பத்தில் மேலோங்கிச் சிறக்க விரும்புவதுமான குறுகிய தேசப்பற்றை நிராகரிக்க வேண்டும்.

காந்தியடிகளின் கருத்தை இன்னும் மெருகூட்டி தருகிறது வேதாத்திரியம்.

மனிதகுல வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் தொட்டு, எந்தெந்த காலத்தோ, இடம், காலம், தேவை இவை யொப்பத் தோன்றிய கருத்துக்களில் மாற்றப்பட வேண்டியதை

மாற்றுவதற்கான வழியையும், ஏற்றுக்கொள்ளக் கூடியவற்றை ஏற்றுக் கொள்வதற்கான தெளிவையும் உணர்த்துவதே வேதாத்திரியத்தின் குறிக்கோள்.

☆ ஜனநாயக முறையில் ஓர் உலகப் பேரரசு அமைய வேண்டும்.

☆ அது மனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் காக்க சட்டங்கள் இயற்றும்.

☆ உணவு, உடை, வீடு, கல்வி, தொழில், திருமணம், ஆராய்ச்சி, வாய்ப்பு இவற்றை குடிமக்கள் பெற வசதியைச் செய்யும்.

☆ ஆண்களைப்போல் பெண்களுக்கும் எல்லாத் துறைகளிலும் சமஉரிமை அளிக்கப்படும்.

☆ எந்த நாடும் விருப்பம் போல் தனியாக ஆட்சி அமைத்து மனித உரிமை சாசனத்தை மதித்து வாழ உரிமையுண்டு.

☆ உலக மக்கள் அனைவரும் உலகனைத்துக்கும் சொந்தம் என்ற உரிமையுண்டு.

☆ போர் சட்ட விரோதமாக்கப்படும்.

☆ அகில உலகப் பேரறிஞர்களைக் கொண்ட தொண்டு நிறுவனம் மனித வாழ்வின் உயர்வுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கும்.

☆ தகுதியற்ற ஆட்சியை உலக ஆட்சி கைப்பற்றி மக்களைத் தகுதியுடையவர்களாக்கி பின்னர் ஆட்சியை அந்நாட்டு மக்களிடம் ஒப்புவிக்கும்.

முத்தாய்ப்பாக வேதாத்திரியம் நமக்கு அருளிய உலக நல வேட்பு கவியைப் பாடி எண்ணத்தால் விதைப்போம். எண்ணத்தின் ஆற்றல் நிச்சயம் ஒருநாள் அமுலாக்கம் பெறும்.

உலகிலுள்ள பொறுப்படைய தலைவரெல்லாம்
உயிரறிவை உள்ளுணர்வாய்ப் பெறுதல் வேண்டும்
உலகனைத்து நாடுகளின் எல்லைகாக்க
ஒருலக கூட்டாட்சி வலுவாய் வேண்டும்
உலகில் போர் பகை அச்சமின்றி மக்கள்
உழைத்துண்டு வளம்காத்து வாழவேண்டும்
உலகெங்கும் மனிதகுலம் அமைதியென்னும்
ஒரு வற்றாத நன்னிதி பெற்றுய்யவேண்டும்.

# 42

# பரமஹம்ஸ யோகானந்தரும் வேதாத்திரியமும்

இந்திய நவீன ஆன்மீக வரலாற்றில் 19-ம் நூற்றாண்டு மற்றும் 20-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தை, இந்திய ஆன்மீகத்தின் மறுமலர்ச்சிக் காலகட்டம் என்றே சொல்லலாம்.

ராமகிருஷ்ண பரமஹம்சர், ஷீர்டி சாய்பாபா முதல் தெற்கே ரமண மகரிஷி வரை நூற்றுக்கணக்கான ஞானிகள் இந்தியாவில் தோன்றி பல்வேறு கிளை வழிகளில் மெய்ஞானத்தை உபதேசித்த காலகட்டம் அது.

அந்த சமயத்தில் தோன்றிய ஞானிகள் அனைவரின் வாழ்க்கை மற்றும் போதனைகள் சரியாக ஆவணப்படுத்தப்பட வில்லை. ராமகிருஷ்ண பரமஹம்சர், ஷீர்டி சாய்பாபா போன்ற சிலரின் வாழ்க்கை மட்டுமே நமக்கு புத்தகங்களாக தற்போது கிடைக்கிறது.

இந்நிலையில், 1893-ல் பிறந்த துறவி பரமஹம்ச யோகானந்தர் எழுதிய ஒரு யோகியின் சுயசரிதம், அக்காலகட்டத்தில் வாழ்ந்த மெய்ஞானிகள் மற்றும் அவர்களின் மறைஞான வழிமுறைகள்,

யோகம் மற்றும் சித்திக்காக அவர்கள் மேற்கொண்ட பயிற்சிகளை சுவாரசியமாகவும், உண்மைக்கு நெருக்கமாகவும் சொல்லும் அபூர்வ நூலாக முக்கியத்துவம் பெறுகிறது.

இமய குரு பாபாஜியின் இதய சீடர் பரமஹம்ச யோகானந்தர் வங்காளத்தில் பிறந்து, அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சமாதி அடைந்தார்.

விதியை நீங்கள் வெல்லலாம் என்கிறார் ஸ்ரீ பரமஹம்ச யோகானந்தர்.

**''எல்லாவற்றையும் படைப்பது மனமேயாகும். எனவே. நல்லதை மட்டுமே படைக்க அதற்கு நீங்கள் வழிகாட்ட வேண்டும். செயல்திறம் மிக்க இச்சாசக்தியுடன் ஏதாவது ஒரு எண்ணத்தை நீங்கள் பற்றிக் கொண்டால், முடிவில் அது தெளிவான வெளித் தோற்றமாக உருவெடுக்கும். உங்கள் இச்சா சக்தியை நீங்கள் எப்பொழுதும் ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக செயல்படுத்த முடியுமானால், நீங்கள் உங்கள் விதியை வென்றவர் ஆகிவிடுகிறீர்கள்''.**

(-ஒரு யோகியின் சரிதம் பக்.7.)

விதி-மதி விளக்கம் தருகிறது வேதாத்திரியம்.

**இயற்கை சக்தியே விதி,**
**இதை யறிந்த அளவே மதி.**

- மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து (பக். 3)

**வேகமாய் இருப்பதை விதி என்போம்**
**சிவம் என்போம், இயற்கை என்போம்,**
**வேகத்தில் நுட்பமும் கூடியபின் அதை**
**விவேகம் என்போம், மதி என்போம்**

**வேறு வேறு அல்ல.**

- மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து (பக்.19)

விதியை மதியால் வெல்ல வழிகாட்டுகிறது வேதாத்திரியம்.

**விதி**

**ஆற்றலை ஆக்கவோ அழிக்கவோ முடியாது,**

**ஒவ்வொரு வினைக்கும் எதிர் வினை உண்டு**

**மதி [ தொண்டு ]**

ஒருவகை ஆற்றலை மற்றொரு வகையாக மாற்றலாம்,

அளவு -முறை அறிதல், எதிர்மறை விளைவை தரக்கூடிய வினைக்கு (எண்ணம், சொல் , செயல்) பதிலாக - நேர் மறை வினையைச் செய்தல்.

ஆற்றலை ஆக்கவோ அழிக்கவோ முடியாது, ஒருவகை ஆற்றலை மற்றொரு வகையாக மாற்றலாம் -அறிவியல்

ஆக்கவும் அழிக்கவும் முடியாத இறையே ஆற்றலாக வெளிப்பட்டு, உலகாக மாறி வந்து இயக்குகிறது என்பதை உணர்தல்/அறிதல்- மெய்ஞானம்.

விதி மதி பற்றி இன்னும் அழகான உதாரணத்தை நம்முன் வைக்கிறது வேதாத்திரியம்.

குடகில் காவேரி ஆறு உற்பத்தி ஆகிறது. காவேரிக்குக் குறுக்காக கண்ணம்பாடியில் அணை கட்டுவதற்கு முன்னால் நீர் சில சமயம் அழிவைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

அந்த அறிவுக்கு மனிதனோ, அவனது மதியோ காரணம் இல்லை. அதற்குக் காரணம் இயற்கை. அதாவது விதி. அழிவைப் பார்த்தான். ஆற்றுக்கு குறுக்கே அணை கட்டினான், அது மதி.

முதன் முதலில் கட்டிய மண் அணை அதிகமாக வரும், மழை நீரால் உடைந்தது. இது விதி. விட்டதா மதி? நீரின் வேகத்தைத் தாங்கக் கூடிய அளவிற்கு தடை ஏற்படுத்தி, பலமான திண்மையான அணை கட்டினர். இப்போது அழிவு நின்றது. இதுதான் மதி.

தண்ணீர் ஓடி ஓடி அழித்தது விதி. அணையைக் கட்டி அழிவைத் தடுத்தது மதி.

இயற்கையும் அதன் ரகசியங்களும் விதி. அவற்றை அறியும் மனமும், அவ்வாறு அறிந்ததனால் மனதிற்கு கிடைக்கும் உயர்வும் மதி.

தவத்தினால் வாழ்வை ஒளிமயமாக்கிக் கொள்ள முடியும்.

**ஊழையும் உட்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

விதியை மதியால் வெல்லலாம் என்கிறது குறள். மதி என்பது அறிவு. தவம் செய்வதினால் வலிமையும், கூர்மையும் மதி பெறும். அத்தகைய மதியானது இனி ஆற்ற இருக்கும் செயல்களை ஒழுங்கு படுத்தி வாழ்க்கையில் இதுவரை கிடைக்காத வெற்றியையும், மேன்மையையும் ஏற்படுத்தித் தரும்.

தவம் செய்பவர்கள் முறையாகவும், தொடர்ந்தும் செய்து வருவதோடு நமது மனவளக்கலை மன்றத்தில் மட்டுமே போதிக்கப் படும் தற்சோதனைப் பயிற்சிகளையும் சேர்த்து சிரத்தையோடு செய்து வருவார்களானால் தங்களது இயற்கைச் சுபாவங்களை மாற்றி அமைக்கவும் குணநலப்பேற்றை எய்தவும் முடியும்.

# 43

# ஓஷோவும் வேதாத்திரியமும்

ஓஷோவுடைய இயர்பெயர் ரஜ்னீஷ் சந்திர மோகன். சிறு வயதிலிருந்தே தியானத்தில் ஈடுபட்ட ஓஷோ தன்னுடைய இருபத்து ஒன்றாவது வயதில் அதாவது 1953 மார்ச் 21ல் ஞானம் அடைந்தார்.

கிழக்கில் ஞானமடைதல் என்பது முழுமையான தன்னுணர்வு அல்லது விழிப்புணர்வு நிலை என்பதை குறிப்பிடுவதாகும். கௌதமபுத்தர், கபீர், இரமணர் மற்றும் பலர் இப்படி ஞானம் அடைந்தவர்களாவர்.

அரக்க குணமுடையவர் தோன்றுவதற்கு இந்த மனித குல சிந்தனைகளே காரணம் என்கிறார் ஓஷோ.

''ஒரு ஹிட்லர், ஒரு கோட்சே போன்றவர்கள் இந்த உலகத்தில் பிறந்தார்கள் எனறால், அதற்கு முழுப் பொறுப்பு, இந்த மனிதகுலத்தையே சாரும்.

ஏனெனில் மனிதர்களுடைய ஆழ் மனத்தில் இப்படிப்பட்ட வெறுப்புணர்வை விதைத்து வைத்திருக்கிறார்கள். இந்த உலகத்தில் ஏதாவது நன்மையோ அல்லது தீமையோ ஏற்பட்டால், அதற்கு இந்த மனித குல சிந்தனைகளே காரணம். கடவுள் அல்ல. ஏனெனில் அப்படி ஒரு தனி நபர் யாரும் கிடையாது.

ஓஷோவின் கருத்தினை ஏற்ற வேதாத்திரியம் அதற்கான வழிமுறைகளையும் தீர்வுகளையும் தருகிறது. அதுதான்

**சமுதாய அமைப்பினிலே உள்ள குறைபாடே**
**தனிமனிதன் குற்றங்கள் அனைத்திற்கும் மூலம்**
**சமுதாயம் தனியாரைத் தண்டித்து மேலும்**
**தவறிழைக்கும் செய்கையினை நீதியெனில் நன்றோ?**
**சமுதாய அமைப்புமுறை சீர்திருந்தி பொருட்கள்**
**சமத்துவமாய் அனைவருக்கும் கிட்டுமெனில் உலக**
**சமுதாயத்தில் குற்றம் நிகழ இடமேது?**
**தண்டனைக்கு எனவகுத்த சட்டங்கள் ஏனோ?**

(ஞா.க)

## குற்றவாளி யார் எனப்பட்டியலிடுகிறது வேதாத்திரியம்.

☆ சமுதாய வாழ்வின் ஒழுக்கத்தைக் குலைக்கின்ற வகையிலும், படிக்கின்ற போது உற்சாகமாக இருந்து பின் விளைவாக மனதுக்கும் உடலுக்கும் வியாதிகள் பல தோன்றக் காரணமான பாலுணர்ச்சிகளை ஊட்டுகின்ற வகையிலும் புத்தகங்களை எழுதி விற்றுப் பணம் சம்பாதித்து ஆனந்த வாழ்வு காணு கின்ற அறிவுத் துரோகிகள் உலகில் எத்தனை பேர் உள்ளார்கள் தெரியுமா?

☆ விளைவறியா வேகத்தில், கவர்ச்சிகரமான திறமையுள்ள பேச்சின் மூலம் மூர்க்கத்தனமான உணர்ச்சிகளைப் பொது மக்களுக்கு ஊட்டி, ஆட்சிமுறையின் ஒழுங்கையே கலைத்து வருகின்ற புகழ் வெறி கொண்ட புல்லர்கள் எத்தனைபேர். அரசியல் தலைவர்கள் என்ற போர்வையில் இருக்கின்றார்கள் என்பதைப் பற்றி நீர் இன்னும் அறியவில்லையா?

☆ கலை என்ற பெயரில் காமத் தீயை வளர்த்து அதன் மூலம் பணம் ஈட்டுகின்ற கயவர்களைப் பற்றி நீர் இன்னும் அறிந்து கொள்ளவில்லையா? அறம் வளர்க்க என ஓர் அறக் கட்டளையைத் தோற்றுவித்து, அக்கிரமங்கள் பலபுரிய அதை இடமாக்கி கொண்டுள்ள வஞ்சகர்கள் இருப்பது தெரியாதா?

☆ அன்பர்களே! இவர்கள் அனைவருமே நமது சகோதரர்கள் தான் என்பதை மட்டும் மறந்து விடாதே. குற்றவாளிகள் அனைவரையும் தண்டிக்க எக்காலத்திலும் மனித வர்க்கம் ஒரு நெறியை காண முடியாது.

☆ ஆனால் குற்றங்களுக்குரிய காரணங்களைப் போக்கி மனிதர்களைக் குற்றமற்றவர்களாக வாழச் செய்ய முயற்சித்தால் அது சாத்தியம்.

☆ பொருளாதார சமத்துவமும், கல்வி நலமும் மக்கள் அனைவருக்கும் கிட்டச் செய்கின்ற ஓர் ஆட்சி முறையின் மூலமே இது எளிதாகும்.

☆ **குற்றவாளி பாவியென்று யாருமில்லை உலகினில்**

**குறைகளுக்குக் காரணமோ பழைய சமுதாயம்**
**கற்றிடுவோம் புதிய கல்வி கருத்துயர்த்தி மேலாம்**
**கடமைகளைச் சிந்தித்து செயலாற்றி உய்வோம்:**
**உற்றசெல்வம், உடலுழைப்பு, அறிவு இவை கொண்டு**
**உலகுக்கு உதவியருள் தொண்டாற்றி மகிழ்வோம்.**
**மற்றவரை எதிர்பார்த்தல், கையேந்தல் வேண்டாம்**
**மாநிதியாம் இறைவனை நம் மனத்தடியில் தேர்வோம்.**

- (ஞாக.)

அது மட்டுமல்ல. மரண தண்டனை கூடவே கூடாது என்பதை காரண காரியங்களோடு விளக்குகிறது வேதாத்திரியம்.

**தண்டனையில் நீதி வேண்டும்**

**கொலை செய்தான் ஒரு மூர்க்கன் அறிவிழந்து**
**கொலையுண்டான் நீதிபதி அளித்த தீர்ப்பால்**
**கொலைக்குக் கொலை நீதியென்றும் குற்றம்**
**செய்த கொடுமைக்கே தண்டனைகள் என்றும் சொன்னால்**
**கொலையுண்டோர் மனைவிமக்கள் பெற்றோர் செய்த**
**குற்றமென்ன? குடும்பத்தின் தலைவன் ஆங்கே**
**கொலையுண்ட நிகழ்ச்சி அன்னார் வாழ்வில் என்றும்**
**கொடுந்துன்பம் தரவில்லையா? நீதி எங்கே?**

(ஞா.க.)

விலங்கினத்தின் வித்துத்தொடர்
வியத்தகு மனித உருவாய்த் தொடங்கி,
விரிவடைந்து பல லட்சம்
தலைமுறைகளாய் வந்தநீடிப்பே நாம்.
பலநாட்டில் வாழ்கின்றோம்;
பண்பாடு காலத்தால் படர்க்கை எய்திப்
பலவீனம் சாதிமதம் மொழி ஆட்சி
இவைகளால் எல்லை கட்டி
கலகங்கள் பொருள்புகழ் அதிகாரம்
புலன்பற்றால் பெருக்கிக் கொண்டோம்.

காலங்கள் பலகடந்து, கம்ப்யூட்டர்
காலத்தில் உள்ளோம் இன்று.
சிலநிமிடம் நமைப் பற்றிச்
சிந்திப்போம்; தேவையற்ற பழக்கம்மாற்றி,
சீர்திருத்த இறையுணர்வும், அறநெறியும்
மனவளக் கலையால் கற்போம்.

(ஞானக் களஞ்சியம்)

# 44

# மாணிக்கவாசகரும் வேதாத்திரியமும்

**ஆ**ன்மாக்களின் மாசினைக் களைந்து உய்வளிக்கவல்ல ஞான நூலாகத் திருவாசகத்தைப் பாராட்டும்வேதாத்திரியாரின் ஞானச் சுடரான இராமலிங்க வள்ளலார்,

**வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என்**
**ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.**

எனப் போற்றுகின்றார்.

சுத்தவெளியின் தன்மாற்றத்தினால் உருவான ஒரு துளியே நான். வெளிக்கும் எனக்கும் இடையில் எவ்வளவு காலங்கள், எத்தனை நிலைகள். எத்தனை நிகழ்வுகள், எத்தனை விதிகள். இதை உணர்த்தும் விதமாக மாணிக்கவாசகர் அருளியது.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகி பறவையாய்ப் பாம்பாகி

**கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்**
**வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்...**

தன்னை முழுமுதற் பொருளோடு ஐக்கியப்படுத்தி, அந்த முழுமுதற் பொருளான இறைவெளியின் தன்மாற்றச் சரித்திரத்தை தனது சரித்திரமாக உணர்ந்த நிலையில் மாணிக்கவாசகர் பாடியது.

சுத்தவெளிதான் மரமாகியது. பாம்பாகியது. விலங்கின மாகியது. மனிதனாகியது.

பிரபஞ்சத்தில் நாம் காணும் பொருள்களில் எத்தனையோ பேதங்கள் இருந்தாலும், அவைகளின் மூலம் ஒன்றேதான் என்பதை பதஞ்சலி வலியுறுத்துகிறார்.

**வருசஷஸ்ய ஸ்வகதோ பேதஉற பத்ர புஷ்ய பலாதிபிஉறி**
**வ்ருச்சாந்தத்ராத் ஸஜாதீயோ விஜயாதீய ஷ்ஷிலாதிதஉற**

ஒரே மரத்தில் காய், கனி என அதன் அங்கங்களில் நாம் காணும் பேதம். மரத்திற்கு மரம் நாம் காணும் பேதம்.

தாவர இனத்திற்கும் விலங்கினத்திற்கும் உள்ள இனபேதம் எனப் பலவகையான பேதங்களைப் பிரபஞ்ச அமைப்புகளில் நாம் பார்க்கிறோம் என்றாலும் அவற்றின் மூலம் ஒன்றேதான்.

மாணிக்கவாசகரும் பதஞ்சலி வலியுறுத்துவதைப் பாமரனுக்கும் புரிய வைப்பதே வேதாத்திரியப் பார்வை.

பேதங்கள் உண்டு என்ற கருத்தோடு அந்த பேதங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்ற விளக்கத்தையும் கொடுத்துத் தத்துவத்தை உணர்த்துகிறது வேதாத்திரியம்.

என்னில் நிகழ்கின்ற செயல்களில் இயக்க ஒழுங்கிற்கு காரணமாக அமைவது என்னில் செயல்படுகின்ற சுத்தவெளியின் அறிவே. அனைத்துக்குள்ளும் அதனதன் இயக்க ஒழுங்காய் வெளிப்படுவது வெளியின் மூல அறிவேதான்.

**ஒவ்வொரு பொருளும் பரம் முதலாய்**
**அவ்வுரு வரையில் வந்த கதை**
**செவ்விய சிறுசொல் பரிணாம்**
**சிறப்பை உணர்வாய் நீயும் அதே**

என்று வேதாத்திரியம் கூறியவாறு வெளியின் தன்மாற்றச் சரித்திரத்தின் ஒரு கட்டமே நான். இறைநிலை நேரடியாக மனிதனாகவில்லை.

பெருவெளி தன் பயணத்தைத் தொடங்கி ஒவ்வொரு ஸ்டேசன் ஆக, முதலில் பஞ்சபூத ஸ்டேசனில் தொடங்கி, அப்புறம் பஞ்ச பூதங்கள் ஒன்றாகச் சேர்ந்து உயிரினங்களாகி புழுவாக ஒரு ஸ்டேசன், பூச்சியாக ஒரு ஸ்டேசன், பறவையாக ஒரு ஸ்டேசன், பாம்பாக ஒரு ஸ்டேசன், விலங்கினமாக ஒரு ஸ்டேசன், அப்புறம் மனிதனாக ஒரு ஸ்டேசன் வந்து வந்து பெருகிப் பெருகி அப்பா அம்மா மூலமாக தானாக வந்திருக்கிறது.

இப்போது நீங்க யாரு? சுத்தவெளியே நீங்க. வெளியே நான். அதை சிவம் என்றால் நானும் சிவமயம் தான். அதை பிரம்மம் என்றால் நானும்பிரம்மத்தின் துளிதான்..

# 45

## ஆண்டாளும் வேதாத்திரியமும்

திருப்பாவையில் மாயை, வடமதுரை மைந்தனை என்ற பாட்டில்,

**தூயயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது**
**வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்**
**போய பிழையும் புகுதருவா நின்றளவும்**
**தீயினுள் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.**

இந்த வரிகளுக்கு விரிவான விளக்கத்தை தருகிறது வேதாத்திரியம்.

போயபிழை என்பது பழவினை. புகுதருவா என்பது புதுவினை ஆகாம்யம்.

இந்த சஞ்சிதப் பிராரப்தமும் ஆகாம்யமும் எல்லா வினைகளும் வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்க -அதாவது உன்னைக் கொண்டு என்னில் வைத்தேன். என்னையும் உன்னில் இட்டேன் என்று பேசுவார் ஆண்டாள்.

அந்த முறையில் அவனை முன் வைத்து இவன் அதில் அடக்கமாகி விட்டானேயானால் அந்த நிலையில் அவனே

பேசுவது, அவனாகவே நிற்பது. அவன் நினைவாகவே ஆவது, அவன் நினைவிலேயே காரியத்தைச் செய்வது என்ற போது அவனாகி விடுகிறார்கள்.

அந்த நிலையில் போய பிழையும் புகுதருவா நின்றனவும் தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய் என்று நாம் படித்திருக்கிறோம்.

அந்த இடத்திலேயும் அவ்வாறு இறைவனோடு ஒன்றி இருந்துவிட்டால் எல்லாப் பாவங்களும், எல்லாப் பதிவுகளும் தூய்மையடைந்து விடும். இதைப் போன்ற கவிகள் பல உள்ளன.

**அவனில் தான் நீ**
**உன்னில் அவன்.** (ஞா.க.)

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவனடி சேராதார்.**

என்பது வள்ளுவர் கருத்து.

பதிவு இருப்பதனால் தானே பிறவி வருகிறது. அந்தக் கடல் நீந்த வேண்டுமானால் இறைநிலை உணர்ந்து அதோடு இணைந்து அதோடு சேராதவர்களுக்கு பிறவிப் பெருங்கடல் நீந்த முடியாது. பிறவித் தொடர் நீண்டு கொண்டேயிருக்கும்.

# 46

# வேதாத்திரியத்தில் காட்டானைக் காணலாம்

**அ**ருட்தந்தை பேசுகிறார்........

உளப்பயிற்சியால் மன அலை நிலைகளைத் தாண்டி மெய்ப்பொருள் உணர்ந்த மகான்களில் ஒருவர் அழுகண்ணி சித்தர்.

அவர் எழுதிய பாட்டின் ஓசை அழுகிற மாதிரியே இருக்கும். அதனால் அந்த ஓசைக்காக அழுகண்ணி என்று பெயர் வைத்தார்கள்.

அவர் அனுபவமாய்ப் பெற்ற ஓர் உண்மையினைக் கீழ்க்கண்ட கவியில் உணர்த்துகிறார்.

**காட்டானை மேலேறிக் கடைத் தெருவே போகையிலே**
**நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்ப்பரன்றோ**
**நாட்டார் நமைமறித்து நகைப்புரியப் பார்த்தாலும்**
**காட்டானை மேலேறி என் கண்ணம்மா கண் குளிரப் பாரேனோ**

மனமானது வாழ்வின் அனுபவங்களால் முன்னம் எடுத்த வடிவங்கள், குணங்கள் அனைத்தையும் அலையாக எழும்பி இயங்குகின்ற போக்கிலிருந்து அவ்வலைகளை நிறுத்தி, நிலைக்கு வந்தால், அந்த நிலையயே அறிவாகவும், இறைநிலையாகவும் இருப்பதை எளிதில் அனுபவமாக உணர்ந்து முழுமை பெறலாம் என்பதே இக்கவியின் கருத்தாகும்.

இங்கு காட்டான் என்றால் தனது இருப்பைப் புலன்களுக்குக் காட்டமாட்டான் என்று பொருள்.

அதாவது அரூப நிலையானவன். அறிவும் அரூபம். இறைநிலையும் அரூபம்தான். ஏனெனில் இறைநிலையே அறிவுமாக இருப்பதனால்.

காட்டானாகிய அறிவு, ஐந்து புலன்களில் இயங்கிப் பெற்ற பதிவுகளைத் தாண்டி, பஞ்சபூதங்களாகிய பேரியக்கத் தோற்றங் களைக் கடந்து, கடைசி நிலையான மெய்ப்பொருளை நாடி, அதையறிய முயற்சிக்கின்ற போது, உலக வாழ்க்கையிலே பெற்ற அனுபவங்கள் ஒவ்வொன்றாய் நினைவுக்கு உருவங்களோடும், குணங்களோடும் தோன்றுகின்றன.

எனது இறைநிலை நோக்கிய அறிவின் பயணத்தில் காணும் இந்தக் குறுக்கீடுகளை நினைத்துப் பார்க்கிறேன்.

எங்களையெல்லாம் விட்டு விட்டு அல்லது தாண்டி நீ போக முடியுமா? அந்தக் கடைநிலையாகிய இருப்பு நிலையாக நீ மாறி உன்னையும் இறைநிலையையும் உணரமுடியுமா? என்று ஏளனம் செய்து சிரிப்பது போலத் தோன்றுகின்றது.

இதையெல்லாம் தாண்டி அதற்கு அப்பாலாக, சுத்தவெளி, இறைவெளி வரைக்கும் சென்று கண் குளிரப் பாரேனோ.

கண் என்றால் அறிவு. கண்குளிர் அறிவுப் பூர்வமாக மன நிறைவாக நான் அதைப் பார்த்து பயன் பெற மாட்டேனா என்ற கருத்தை அழுகண்ணி சித்தர் பாடியிருக்கிறார்.

அந்த நிலையை நாடி இப்பொழுது துரியாதீதத் தவத்தை மேற்கோண்டு பயன் பெறுவோம்.

துரியாதீத தவம் நான்கு படிகளாக உள்ளது. முதலில் புருவ மத்தியில் மனதை நிறுத்தி அங்கு குண்டலினியை உணர்வாகப் பெற்று பிறகு துரியம் செல்ல வேண்டும்.

மூன்றாவது சக்தி களத்தவம். நான்காவது சிவகளத்தவம். சிவகளத்தவத்தில் தான் அறிவு தூய்மையான

இறைவெளியோடு ஒன்று கலந்து நின்று நிலை பெறும்.

குண்டலினி யோகப் பயிற்சி முறையாக கற்றவர்கள் மாத்திரம் இத்தவத்தை முறையாகச் செய்து பயன்பெறுங்கள்.

# 47

# வேதாத்திரியத்தில் ஜென்

**கா**ஞ்சிபுரத்தைச் சேர்ந்த ஒரு தமிழன் தான் புத்தரின் சீடராக, போதி தர்மர் என்ற பெயரில் சைனாவுக்குச் சென்று முதன்முதலில் புத்த மதத்தைப் பரப்பினார். அதுவே பிறகு ஜென்னாக மாறியது.

ஜென்னைத் தவிர மற்ற மதங்களெல்லாம், கடவுளை வெளியே தேடவே முயன்றிருக்கின்றன. ஜென் மட்டுமே, கடவுளை நமக்குள்ளே தேட வழி வகுத்தது. இதுதான் உண்மையான , நேரான வழி.

ஜென்னை முதன்முதலில் இந்தியாவில் பரவலாகப் படரவிட்டவர் ஓஷோ தான்.

**ஒரு ஜென் கதை.** (காற்றும் அல்ல, கொடியும் அல்ல)

ஒரு கொடியைப் பற்றி இரண்டு சந்நியாசிகள் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள்.

ஒருவன், இந்தக் கொடி அசைகிறது.

அடுத்தவன், இல்லை காற்றுதான் நகருகிறது.

ஆறாவது ஜென் மடத்தலைவர், அந்த வழியே போக நேர்ந்தது. அவர்களது வாக்குவாதத்தைக் கேட்ட அவர், காற்றும் அல்ல. கொடியும் அல்ல, மனம்தான் நகருகிறது என்றார்.

காற்று அசைந்தாலும், கொடி ஆடினாலும், மனம் அதில் பதியாது இருந்தால், அந்த அசைவுகள் அதற்கு எப்படித் தெரியும்?

ஆகவே மனம் தான் உண்மையில் அசைகிறது.

மனம் அலையாக இருக்கிறது. இதுதான் வேதாத்திரியம். அலையை நிலைப்படுத்தவும் சொல்கிறது வேதாத்திரியம்.

நாம் எல்லோரும் பயன்படுத்தும் அலைபேசி (CELL PHONE) நம் கண்ணுக்குத் தெரியும். ஆனால் அதை இயக்குகிற அலை (சிக்னல்) நம் கண்ணுக்குத் தெரியாது.

இந்த அறிவியல் கோட்பாட்டினைத்தான் வேதாத்திரியம் நமக்கு சொல்கிறது.

ஒரு ஜீவனில் பருவுடல் இயக்கப்படுகிறது. அதை இயக்குவது மனம். இயக்குவது அலையே எனும் விஞ்ஞானக் கோட்பாட்டின்படி மனம் ஒரு அலைத் தொகுப்பே.

தொலைக்காட்சிப் பெட்டியாகட்டும், வானொலிப் பெட்டியாகட்டும், அவற்றை இயக்குவது புலன்களுக்குப் புலப்படாத அலைதானே.

இயக்கப்படுவது பருப்பொருள் ஆகும். ஆனால் அதை இயக்குவது கண்ணுக்குத் தெரியாத ஓர் அலைத் தொகுப்பு என்பது விஞ்ஞான நியதி.

ஒவ்வொரு ஜீவனிலும் உடல் இயக்கப்படுகிறது. அதனில் உள்ள ஜீவகாந்த அலை அதை இயக்குகிறது.

ஒவ்வொரு ஜீவனில் புலன்களை இயக்குவது ஜீவகாந்த அலை என்னும் வேதாத்திரியக் கோட்பாட்டில் தத்துவம் தனித்துவம் பெற்று மெய்ஞ்ஞானம் ஒரு விஞ்ஞானப் பார்வையைப் பெறுகிறது.

உடலை இயக்குவது ஜீவகாந்த அலை என உணர்ந்து அந்த ஜீவகாந்த அலையின் மறுபெயர் மனம் என வேதாத்திரியம் உரைக்கிறது.

**முறையாய் அக்காந்த அலை மனமாம் உயிர் உடல்களின்**
**மதி உயர்ந்து இவ்உண்மைபெற மாபிரம்ம ஞானமாம்.**

மனம் அசையாமல் இருக்க ஜென் கதைக்கு பயிற்சியும் தருகிறது வேதாத்திரியம்.

**மனமெனும் புதினமது சீவகாந்த அலைதான்**
**மனிதனிடம் புலனுணர்வில் அதுவிரைவு கொண்டு**
**மனச்சுழலே வினாடிக்குப் பதினாறு முதலாய்**
**மாறிப்பல நிலைகளிலே நாற்பது வரைபோம்**
**மனமதுவே அகத்துவ ஆக்கினை துரியம் இவற்றில்,**
**மலைப்பின்றி எட்டுமுதல் பதின்மூன்று வரை ஆம்**
**மனம் சக்திகளம் நிற்க, நாலு முதல் ஏழாம்.**
**மறைபொருளாம் சிவகளத்தில் ஒன்றுமுதல் மூன்றாம்.**

நாள்தோறும் தவமியற்றி மன அலைச்சுழலை குறைப்போம். மன மகிழ்ச்சியுடன் வாழ்வோம்.

# 48

# விவேகானந்தரும் வேதாத்திரியமும்

**சு**வாமி விவேகானந்தர் கண்ட கனவுகளை மெய்ப்படுத்தியது வேதாத்திரியம். அவர் வகுத்த திட்டங்களுக்கு செயல் வடிவம் தந்தது வேதாத்திரியம்.

விவேகானந்தர் சொன்னார், நாட்டின் ஆன்மீகக் கல்வியும் லௌகீகக் கல்வியும் நமது பிடிப்புக்குள் இருக்க வேண்டும். இதைப்பற்றியே கனவுகண்டு, அதைப் பேசி வந்து, அதைப் பற்றியே சிந்தித்து அதை நிறைவேற்ற வேண்டும்.. அதுவரையில் நமது மக்கள் சமுதாயத்துக்கு விடிவு காலமில்லை. இதனைச் செய்து முடிக்க ஒரு இயக்கம் தேவைப்படுகிறது.

**வேதாத்திரியம்**...... விவேகானந்தர் தேடிய இயக்கம் தான் உலக சமுதாயச் சேவா சங்கம்....மனவளக்கலை மன்றங்கள்....

**விவேகானந்தர்...** கடவுள் நிர்க்குணமானவர். எல்லையற்றவர். என்றும் உள்ளவர். என்றும் மாறாதவர். அழிவற்றவர். நாம் எல்லோரும் அவரது உருவங்கள் . வாழும் கடவுள் நம்முள் இருக்கிறார்.

**வேதாத்திரியம்.....**கடவுள் வற்றாயிருப்பு, பேராற்றல். பேரறிவு, காலம் என்ற வளம் நான்கும் உடையவர். இறைநிலை யாகிய சுத்தவெளியே, பிரபஞ்சமாகவும், பஞ்ச பூதங்களாகவும், ஜீவ ராசிகளாகவும் மலர்ந்துள்ளது. மெய்ப்பொருளே என்னிடம் அறிவாக விளங்குகிறது. அதுவே பிற உயிர்களிடமும் விளங்கு கின்றது. அதை உணர்ந்து பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாத வகையில், துன்பப்படும் உயிர்களுக்கு நம்மால் இயன்றவரை உதவி செய்து வாழவேண்டும்.

**விவேகானந்தர்.** மனித உடலில் உள்ள மனித ஆன்மா ஒன்றே வழிபடத் தக்க கடவுள். கட்டிடங்களில் தாஜ்மகால் போலக் கோயில்களில் மனிதனே சிறந்தவன். இந்தக் கோயிலில் என்னால் வழிபட முடியவில்லை என்றால் மற்ற கோயில்களால் எனக்கு எந்த பயனும் இல்லை.

**வேதாத்திரியம்....** மனிதனிடம் உள்ள ஆன்மாவை அறிவியல் முறைப்படி விளக்கும் கல்வி நிலையம்தான் அறிவுத் திருக்கோயில்கள்.

**விவேகானந்தர்.....** என்றாவது உலகம் தழுவிய மதம் என்ற ஒன்று உருவாக வேண்டுமானால், அது இடத்தாலும் காலத்தாலும் எல்லைப்படுத்தப் படாததாக இருக்க வேண்டும். அந்த மதம் யாரைப் பற்றிப் பிரசாரம் செய்கிறதோ. அந்தக் கடவுளைப் போன்று அது எல்லையற்றதாக இருக்க வேண்டும். சூரியன் தன் ஒளிக்கிரணங்களை எல்லார் மீதும் சமமாக வீசுவது போன்று அது கிருஷ்ண பக்தர்கள், கிறிஸ்து பக்தர்கள், ஞானிகள், பாவிகள், எல்லோரையும் சமமாக எண்ண வேண்டும். அது பிராமண மதமாகவோ பௌத்த மதமாகவோ கிறிஸ்துவ மதமாகவோ முகம்மதிய மதமாகவோ இருக்காமல், இவற்றின் ஒட்டு மொத்தமாக இருப்பதுடன், இன்னும் வளர்ச்சியடைய எல்லையற்ற இடம் உள்ளதாக இருக்க வேண்டும்.

**வேதாத்திரியம்.....** இக்கனவின் நிகழ்வே வேதாத்திரியம் வகுத்துள்ள உலகப் பொது அருள்நெறி சமயம்.

**விவேகானந்தர்.....** உங்கள் உடம்பை நினைத்துச் சிந்தனை செய்யுங்கள். அது நலமாக வஜ்ரம் போன்று இருப்பதாக எண்ணுங்கள். உடல்தான் நம்மிடம் இருக்கும் சிறந்த கருவி. அதன் துணையுடன் வாழ்க்கை என்ற கடலைக் கடந்து விடலாம்

**வேதாத்திரியம்......** நாம் மற்றவர்களுக்குப் பாரமாக இல்லாமல். பல வழிகளிலும் சமுதாயத்திற்கு உதவியாக இருக்க வேண்டும் என்றால் நமது உடல் நலம் நன்றாக இருக்க வேண்டும். அதனால் தான் மனவளக்கலை மன்றத்தில் ஆன்மீகப் பயிற்சியின் ஓர் அங்கமாகத் தவப்பயிற்சிக்கு முன்னர் உடற்பயிற்சி கற்றுத் தரப்படுகிறது.

**விவேகானந்தர்....** ஒவ்வொரு மனிதனிடமும், குறைவாகவோ, அதிகமாகவோ ஓஜஸ் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. உடலின் ஆற்றல் அனைத்தும் அதன் மிக உயர்ந்த நிலையில் ஓஜஸாக மாறுகின்றன. ஒரு சக்தி தான் மற்றொரு சக்தியாக மாறுகிறது.

**வேதாத்திரியம்...** உடம்பில் உள்ள உயிர் ஆற்றலின் அளவு, உடலில்உள்ள ஜீவ வித்துக் குழம்பின் தன்மையைப் பொறுத்தது, ஜீவ வித்துக் குழம்பின் தன்மையைச் சீராக்கி, உயிர் ஆற்றலைப் பெருக்க உதவுகிற பயிற்சியே காயகல்பம்.

**விவேகானந்தர்....** உணவை ஏராளமாக உண்பவர்களும், பட்டினி கிடப்பவர்களும், மித மிஞ்சி உறங்குபவர்களும், மிகக் குறைவாக உறங்குபவர்களும் யோகிகளாக முடியாது.

**வேதாத்திரியம்.....** உணவு, உழைப்பு, உறக்கம், உடலுறவு. எண்ணம் இவை ஐந்திலும் அளவு முறை காக்க வேண்டும்.

**விவேகானந்தர்....** யார் பிறரைத் துன்புறுத்துவதில்லையோ, யாரைப் பிறரால் துன்புறுத்த முடியாதோ, யார் மகிழ்ச்சி, கோபம், பயம், மனக்கிளர்ச்சி இவற்றில் இருந்து விடுபட்டவனோ அவனே யோகி.

**வேதாத்திரியம்....** தனக்கோ - பிறர்க்கோ, தற்காலத்திலே - பிற்காலத்திலே, உடலுக்கோ - உயிருக்கோ தீங்கு விளைவிக்காமல் இருப்பதே ஒழுக்கம். ஒழுக்கம் உள்ளவனே யோகி.

**விவேகானந்தர்...** மனதை மனதாலேயே ஆராய வேண்டும். ஆராய்ந்து அங்கே சேர்த்து வைக்கப்பட்டுள்ள, பல்வேறு பதிவு களையும், எண்ணங்களையும் பகுத்து, ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும்.

**வேதாத்திரியம்...** நமது மனம் நம் கட்டுப்பாட்டில் இல்லை என்பதே உண்மை. மனதை அடக்க நினைத்தால் அலையும். அறிய நினைத்தால் அடங்கும். மனம் தன்னைத் தூய்மை செய்ய எடுக்கும் முயற்சியே அகத்தாய்வு.

**விவேகானந்தர்....** இறைநிலை அறிவு என்றால் என்ன? வழிபடுபவர் வழிபடும் பொருள், தியானிப்பவர் தியானிக்கப்படும் பொருள், அறிபவர் அறியப்படும் பொருள், ...எல்லாம் ஒன்றாகி விடுதல்.

**வேதாத்திரியம்.....** இறைநிலையொடு எண்ணத்தைக் கலக்க விட்டு, ஏற்படும் அமைதியில் மனம் விழிப்பாய் நிற்க, நிறை நிலையே தானாக எய்தும். உலக இன்பங்களில் அளவு கிட்டும். கறை நீங்கி அறிவு மெய்ப் பொருளாய்க் காணும். தன் முனைப்புக் கரைந்து போகும். தெய்வத்தைத் தரிசித்து இறைநிலை அறிவை எய்தலாம்.

**விவேகானந்தர்....**நான் என் கருத்துக்களுக்கு ஒரு வடிவம் கொடுத்தேன். அதற்காக எனது வாழ்க்கையைக் கொடுத்தேன். நான் வெற்றி பெற வில்லை என்றால் என்னை விடச் சிறந்தவர் ஒருவர் எனக்குப் பிறகு வந்து அதனைச் செய்து முடிப்பார். அதற்காகப் போராடுவதிலேயே நான் திருப்தியடைவேன்.

**வேதாத்திரியம்....**விவேகானந்தர் கருத்துக்களுக்கு செயல் வடிவம் கொடுக்க வந்தவர்தான் வேதாத்திரி மகரிஷி.

# 49

# ரமணரும் வேதாத்திரியமும்

உன்னை அறிந்தால் கடவுளை அறியலாம் என்கிறது வேதாத்திரியம்.

**தன்னை அறிவதே ஞானம் மற்றதெல்லாம் வீணே**

கல்லூரிப் பேராசிரியர் ஒருவர், ரமண மகரிஷியிடம், கடவுளைக் காண எனக்கு உதவுங்கள் என்று கேட்டார்.

ரமணர் அவரிடம், கடவுளைக் காண விரும்பும் நீங்கள் யார்? எனக் கேட்டார்.

நான் தேவதத்த சர்மா.

அது உங்கள் பெயர். நீங்கள் யார்?

நான் ஒரு அந்தணன்.

அது உங்கள் சாதி. நீங்கள் யார்?

நான் கல்லூரிப் பேராசிரியர்.

அது உங்கள் தொழில். நீங்கள் யார்?

நான் ஒரு ஆண்.

அது உங்கள் பிறப்பு. நீங்கள் யார்?

நான், யாரென்று தெரியவில்லை!

உங்களையே நீங்கள் அறியாமல், கடவுளை எப்படி அறியப் போகிறீர்கள்? என்று கேட்டார்

தன்னை அறிவதே கடவுளை அறியும் வழி! என்பதை உணர்ந்தார் வந்தவர்.

**''உன்னிலே நானடங்க , என்னுளே நீ விளங்க,**

**உனது தன்மை ஒளிர, எனதுள்ளம் தூய்மை பெற்றேன்.**

**இன்னும் வேறென்ன வேண்டும் இப்பேறு பெற்ற பின்னர்?**

**எடுத்த மனிதப் பிறப் பெய்தியதே முழுமை .''**

--வேதாத்திரி மகரிஷி

## தன்னிலை விளக்கம் :

நான் யார்? பொருளா? சக்தியா? உடலா? அறிவா? உயிரா? இவை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியுமா? என ஆழ்ந்து சிந்தித்தால் இவற்றில் எதுவும் தனித்து இல்லை. எல்லாம் சேர்ந்த ஒரு இயக்கச் சிறப்பே ''நான்'' என அறிவோம்.

உடல் வரையில் எல்லை கட்டி அது வரையில் ''நான்'' என்று எண்ணியிருந்த காலமும் உண்டு. அன்றுவரை அறிவு அறிந்திருந்த பக்குவ நிலை அது.

உருவத்தை ஆராயுங்கால் அது அணுக்களின் கூட்டமாகத் தோன்றுகிறது. அறிவை நோக்கி ஆராயுங்கால் அது உடலியக்க சக்தியின் ஒரு பிரிவு இயக்கம் என விளங்குகின்றது.

சக்தி என்பது என்ன என ஆராயுங்கால் அது எங்கும் நிறைந்த ஒரு அகண்டாகாரப் பெருவெளியின் எழுச்சி அணுவின் மூலம் இயக்க வேகமான நிலை எனத் தெளிவாகி விடுகின்றது.

ஆகவே அகன்ற பெருவெளியாக, அணுவாக, இயக்கச் சக்தியாக, அறிவாக இருக்கும் பல்வேறு நிலைகளும் ஒன்றாகக் காட்டும் ஒரு பேரியக்கமே ''நான்'' எனப்படுவது.

ஒளி அல்லது ஒலி எழுச்சி பெறும் பொருட்களின் நிலை, இயக்கம் இவைகளுக்கேற்ப பலபேத அளவாக இருந்த போதிலும் ஒளி, ஒலி என்ற தத்துவத்தில் வேறுபட்டவை அல்ல.

அதுபோலவே எல்லா சீவன்களிலும் உள்ள அறிவு பலபேத நிலைகளில் இயங்கிய போதிலும் அறிவு என்ற தத்துவத்தில் ஒன்றே.

ஆகவே ''நான்'' பரவெளி என்ற நிலையில் எங்கும் நிறைந்த பூரணமாகவும், சக்தி என்ற நிலையில் அணுக்களின் கூட்டுப் பக்குவ பரிணாம சந்தர்ப்பச் சந்திப்புகளுக்கேற்ப பலவித இயக்க வேறுபாடுகளாகவும், அறிவு என்ற நிலையில் அந்தந்த ஜீவராசிகளின் புலன் அமைப்பு, தேவை, பழக்கம், சூழ்நிலை, அனுபவம் இவைகளுக்குப் பல பேதப்பட்ட நிலைகளாகவும் உருவம் என்ற நிலையில் அணுக்களின் கூடுதலுக்கேற்ப பலவித அமைப்புகளாகவும் இருக்கிறேன் எனக் கொள்ளுதல் சரியான முடிவாகும்.

எனவே நான் வேறு, பிரபஞ்சம் வேறு அல்ல. நான் வேறு, இயற்கை வேறு அல்ல. நான் என்பதை எதிலிருந்தும் பிரித்து எடுக்கவோ, பிரித்துப் பேசவோ முடியாது.

ஒன்றாகவும் பலவாகவும் எல்லாமாக ஏகத் தொடர் நிலையில் இருப்பதே ''நான்'' என்பதாகும்.

அரூப நிலையில் ஏகனாக, உருவ நிலையில் சிதறுண்டு தோன்றும் பலவாக, அரூபத்தில் உருவங்கள் அனைத்தும் அடக்கம் பெற்றும், உருவங்கள் அனைத்திலும் அரூப நிலை நிறைந்தும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத அகன்ற பேரியக்கமாகிய தத்துவமே ''நான்'' என்பதாகும்.

# 50

## சாக்ரடீஸும் வேதாத்திரியமும்

உலகின் முதல் சிந்தனையாளர் என்ற பெருமைக்கு உரியவர் சாக்ரடீஸ். இயேசு கிறிஸ்துக்கு முன்பே தாம் ஏற்ற கொள்கைக்காகத் தம் இன்னுயிரைத் துறந்த தியாகசீலர் அவர்.

உலகப் பெரும் சிந்தனையாளர்களுள் மிக உயர்வான இடத்தைப் பெறுபவர் சாக்ரடீஸ். ஒவ்வொரு மனிதனும் அறிவுச் சுரங்கமாக விளங்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இயேசு பிறப்பதற்கு ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே பிறந்தவர் சாக்ரட்டிஸ்.

தம் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தஞானி என்று அவரை இன்று உலகம் பாராட்டுகிறது.

எளிய குடும்பத்தில் பிறந்து. உயர்ந்த ஞான ஒளியாகத் திகழ்ந்து, மக்களின் உள்ளங்களிலே சிந்தனைச் சுடரை எழுப்பியவர் சாக்ரடீஸ்

சாக்ரடீஸ் அறிவுச் சுதந்திரம் பெருகுவதற்கு ஆர்வம் காட்டினார்.

யார் எதைச் சொன்னாலும் உன் அறிவைக் கொண்டு நீயாகச் சிந்தித்து உண்மையை உணர்ந்து கொள் என்று சாக்ரடீஸ் ஆரம்பித்த முழக்கம், அவருக்குப் பகைவர்களைத் தேடித் தந்தது.

உண்மையை பொய்மையினின்று விடுவிக்க உளப் பூர்வமாக முயன்றார்.

சாக்ரடீஸ் எனும் ஞான விளக்கு அளித்த பேரொளியின் பாய்ச்சல் இதிலிருந்துதான் ஆரம்பித்தது.

ஒவ்வொருவரும் உலகத்தை உணர்ந்து கொள்ள விரையுமுன் தன்னை உணர்ந்து கொள்ள வேண்டும். தன்னைச் சரியாக உணர்பவனால்தான் மற்றவர்களைப் பழுதின்றி அறிந்து கொள்ள முடியும்.

இளமையிலிருந்தே இயல்பாக அவரிடமிருந்த அறிவுப் பசியும், அவரோடு சேர்ந்தே அதிவேகமாக வளர்ச்சியுற்று, அவரை ஓர் அறிவுக் களஞ்சியமாகத் திகழ வைத்தது பின்நாளில்.

ஏன்? எதற்காக? எப்படி? எதனால்? எவ்வாறு? என்னும் கேள்விகளால் மக்களின் சிந்தனையைத் தூண்டிக் கொண்டேயிருந்தார்.

அவர்கள் தாமகவே சிந்தித்து விடையளிக்க முயன்றார்கள். இல்லையென்றால் எவ்வகையிலாவது அக்கேள்விகளுக்குரிய விடைகள் அறிந்து கொள்ள விழைந்தார்கள்.

இவ்வாறு மக்களிடையே அறிவுப்பசியைத் தூண்டும் அரும்பணியில் அவர் அயராது பாடுபட்டார்.

சாக்ரடீஸ் மீது சாட்டிய குற்றங்கள்.

சாக்ரடீஸ் கடவுள்களை நம்ப மறுக்கிறார். கடவுள் நம்பிக்கையை அவர் அழிக்கிறார். ஏதேதோ பேசி இளைஞர் உள்ளங்களைக் கெடுக்கிறார்.

சாக்ரடீஸ் உலகப் பெரும் சிந்தனையாளராக விளங்கியது பல நூல்களைத் தாம் எழுதியதாலல்ல. மக்களிடம் நேரடியாகப் பேசியே அவர் தம் மகத்தான சிந்தனைகளைப் பரப்பினார்.

தம் குருநாதர் சாக்ரடீஸின் சிந்தனைகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்தவர் பிளேட்டோ.

தாழ்ந்த குலத்திலே பிறந்தவர் என்று கருதப்பட்ட சாக்ரடீஸின் சிந்தனைகளும் கொள்கைகளும் பழம் பெருமைமிக்க உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர் என்று கருதப்பட்ட பிளேட்டோவைப் பின்பற்ற வைத்தன.

தன்னடக்கம், தெளிவான சிந்தனை. நல்லொழுக்கம், நேர்மை. இரக்கம், சுயகட்டுப்பாடு, புலனடக்கம், வாய்மை. தூய்மை, இன்மொழி பேசல் போன்ற பண்புகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்தவர் உத்தம ஞானி சாக்ரடீஸ்.

''உன்னையே நீ எண்ணிப் பார்'' என்பதே அவர் உரைத்த உயர்ந்த மந்திரம்.

நான் மக்களை மறந்து, அவர்கள் மத்தியிலே பேசாமல் தனித்து வாழ்வதாகச் சொன்னால், இந்த முறை என்னை மன்னித்து விடுவதாகக் கூறுவீர்கள். நான் என் மக்களை எப்படி மறப்பேன்? அவர்களை மடமையிலிருந்து விடுவிக்க, தொடர்ந்து அவர்களை கேள்விகளுக்கு மேல் கேள்விகளாகக் கேட்டுக் கொண்டேதான் இருப்பேன்!

என் வினாக்களுக்கு ஏற்ற விடைகளை மக்கள் தெரிந்து கொள்ளும்வரை அவர்களை விடாமல் கேட்டுக் கொண்டே யிருப்பேன்!

என் நாட்டு மக்களை சிந்திக்கச் செய்வதை விடச் சிறந்த பணி வேறு எதுவாக இருக்க முடியும்?

சாக்ரடீஸ் வினாவிடைகள் மூலமாக சிநதிக்க வைத்துக் தெளிவுபெறத் செய்த முறை சாக்ரடீஸ் முறை என்னும் பெயர் பெற்றது.

அவர் சொன்னார். இவர் சொன்னார் என்று எதையும் சிந்திக்காமல் ஏற்றுக் கொள்ளாதே. எவர் சொன்னதானாலும் ஏன், எதற்கு, எவ்வாறு என்று கேள்விகளை எழுப்பி உண்மையை உணர்ந்து கொள் என்று சாக்ரட்டீஸ் கருத்துக்கு செயல் வடிவம் தந்தவர் அருட்தந்தை.

**சொல்லால் மட்டும் நம்பாதே**
**சுயமாய் சிந்தித்தே தெளிவாய்**

என்று கூறி தாம் கூறியதை சிந்தித்து உண்மை என்றால் ஏற்றுக் கொள்ளச் செய்த ஞானி மகரிசி.

இன்றைய கால கட்டத்தில் மனிதன் அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயப்படுதல் என்ற மூன்று காரணங்களால் பல தவறுகள் செய்கிறான். அதனால் பல துன்பங்களைத் சந்திக்கிறான்.

இதற்குக் காரணம் வாழ்க்கையில் சிந்திக்காமல் முடிவெடுப்பது தான் என்கிறது வேதாத்திரியம். இதற்கு வேதாத்திரியம் கூறும் வழி சுருதி, யுக்தி, அனுபவம் என்பதாகும்.

சுருதி என்பது நூல் வழியாகச் சிந்தனையாளர்களின் கருத்துகளை அறிவது.

யுக்தி என்பது ஆறாவது அறிவால் சிந்திக்கும் பொழுது மனம் இறையுணர்வை நோக்கிச் செல்வது. அத்தகைய முறை மூலம் பல சிக்கலான தீர்வுகளுக்கும் விடை காண முடியும் என்கிறது வேதாத்திரியம்.

அனுபவம் என்பது நம் புலன்களைக் கொண்டும் அனுபவ அறிவைக் கொண்டும் நல்லது கெட்டதை அறிதல்.

இத்தகைய அறிவை வளர்த்து மனிதர்கள் வாழ்வில் அமைதியும், நிம்மதியும் பெறுங்கள் என்கிறது வேதாத்திரியம்.

# வேதாத்திரியம்....

வேதாத்திரியம் ஏற்றிய வித்தக ஞான ஒளி விளக்குகள்!

ஞான நல நாட்ட நன்னம்பிக்கை அகலா அகிலவுலக அருள் சுடர்கள்!!

கருத்தரித்த பெருங் கருத்துக்களின் உருப் பெருக்க உள் புதையல்கள்!

ஆழ்ஞான அக மனக் கடலிலிருந்து அகழ்ந்தெடுத்த அரும் முத்துக்கள்!!

மனித இனப் பலப்பல வேறுபாடுகளை மகா ஊறு கூறு கூறுபாடுகளை பொசுக்கப்புறப்பட்ட பூலோகப் பெரு ஞான அக்கினி ஜ்வாலைகள்!

மன வறுமை வலி நோய் போக்கி கன எளிமைப் பொலிவு நல்கும்

அருள் ஞான வானப் புரிந்துணர்கள்!! மதம் பிடித்த யானை மாக்கள் இதயங்கள் இதம் பிடிக்குமாறு இணைக்கச் செய் சங்கிலிகள்!

உலகம் முழுவதும் உய்வதற்காக புடம் போட நாடி தேடி வந்த புத்தம் புதிய ரசவாத மூலிகைகள்!! கண்ட நாட்டு வேலிகளைத் தகர்த்த உலக மக்களைக் களையெடுத்து ஒரே குடைக்கீழ் கொண்டு வந்து ஓருலகச் சமத்துவப் பேராட்சியில் சரிநிகர் சமன்பாடு செய்ய வந்த சட்டத்தின் சத்தியக் கருவூலங்கள்!

வேதாத்திரி மகரிசியின் உபதேசங்களின் தொகுப்புதான் வேதாத்திரியம்.

# துணை நின்ற நூல்கள்


☆ சித்தர் பாடல்கள். வர்த்தமானன் பதிப்பகம். சென்னை

☆ வேதாந்தமும் வேதாத்திரியமும். வேதாத்திரிய பதிப்பகம்.

☆ பன்னிருத்திருமுறை வரலாறு. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

☆ அமுதமொழிகள். ஸ்ரீராமகிருஷ்ணமடம். சென்னை

☆ ஞானதீபம் ஸ்ரீராமகிருஷ்ணமடம். சென்னை

☆ நாமக்கல் கவிஞர் பாடல்கள். பூம்புகார் பதிப்பகம்.சென்னை

☆ கண்ணதாசன் கவிதைகள். வானதி பதிப்பகம்.சென்னை

☆ ஒரு யோகியின் சரிதம். யோகானந்த மடம். கல்கத்தா.

☆ ஜென் கதைகள். கவிதா பதிப்பகம். சென்னை.

☆ வேதாத்திரி மகரிசியின் நூல்கள்

☆ இண்டர்நெட் தகவல்கள்.

# ஆசிரியரின் பிற நூல்கள்....

1. காலமே உன் உயிர்
2. டென்சனை வெல்வது எப்படி?
3. ஓய்வுக்குப் பின் உற்சாக வாழ்க்கை
4. தவம் (சிறுகதைத் தொகுதி)
5. செயலே விளைவு ( சிறுகதைத்தொகுதி)
6. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்.
7. தியானம் பழக 100 தியானச் சிந்தனைகள்.
8. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்
9. தன்னம்பிக்கை மலர்கள்
10. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே..
11. மன்னார்குடி வரலாறு
12. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
13. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்.
14. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்.
15. வேதாத்திரி மகரிசியின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

16. வேதாத்திரி மகரிசி பற்றி 100 அறிஞர்கள்.
17. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 (ஐந்து பாகங்கள்)
18. தாயுமானவரும் வேதாத்திரி மகரிசியும்
19. குருவுடன் வாழ்ந்தவர்.
20. வள்ளலாரும், வேதாத்திரி மகரிஷியும்
21. ஞான தீபமும், ஞான ஒளியும்
22. நபிகள் நாயகம் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
23. அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்
24. கோள்களை வென்ற இடைக்காட்டு சித்தர்
25. கிழக்கும், மேற்கும்
26. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
27. ஞாலம் போற்றும் ஞானிகள்
28. வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
29. திருமூலரும் வேதாத்திரி மகரிசியும்
30. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிசி